24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

சுடர் 34 கதிர் 212 ஆனி 14 ஆம் நாள் சனிக்கிழமை 29 ஜூன் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

# ஸஹ்ரானை தெரியாது!

### தெரிவுக்குழு முன்பாக ரிசாத் சாட்சியம்



கொழும்பு, ஜூன் 29

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவங்களின் முதன்மை சூத்திரதாரி ஸஹ்ரான் ஹாசீமை என் வாழ்நாளில் கண்டதே இல்லை. தாக்குதலின் பின்னரே ஸஹ்ரானின் படத்தைப் பார்த்தேன்.

இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினமன்று மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் நேற்றுச் சாட்சியமளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் வழங்கிய சாட்சியம் வருமாறு

**கேள்வி**: ச.தொ.ச வாகனங்கள் பயங்கரவாத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டன என்று குற்றச்சாட்டுகள் உள்ளனவா?

19

## சிறுமியிடம் அங்க சேட்டை 55 வயது நபர் நேற்று கைது

வலிகாமம், ஜூன் 29

14 வயதுச் சிறுமியிடம் பாலியல் ரீதியான அங்க சேட்டைகளில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் 55 வயதுடைய ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் சிறுமியின் மாமன் முறையானவர் என்று

19

## வீட்டுள் புகுந்து தாக்கி இளம் பெண் கடத்தல்!

### சாவகச்சேரியில் சம்பவம்

சாவகச்சேரி, ஜூன் 29

வீட்டொன்றுக்குள் புகுந்த ஆறு பேர் கொண்ட குழு வீட்டில் இருந்த பொருள்களை அடித்துச் சேதப்படுத்தியதுடன், அங்கிருந்த இளம் பெண் ஒருவரைக் கடத்திச் சென்றுள்ளது. என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

07

## தூக்குத் தண்டனையால் குற்றங்கள் குறையாது

### *மைத்திரியின் தீர்மானத்துக்கு ஜே.வி.பி. கடும் எதிர்ப்பு*

கொழும்பு, ஜூன் 29

தூக்குத்தண்டனையைநிறைவேற்றுவதன் மூலம் போதைப் பொருள் வியாபாரத்தைக் கட்டுப்படுத்த முடியாது. கடுமையான தண்டனைகள் நிறை

07

## மைத்திரியுடைய கூத்து 5 மாதங்களில் முடியும்!

*சுமந்திரன் கூறுகிறார்*

கொழும்பு, ஜூன் 29

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின் மூலமாகத் தான் ஒக்ரோபர் அரசியல் சதிப் புரட்சி முறியடிக்கப் பட்டது. அதனால்தான் அரச தலைவர் மைத்திரி பால சிறிசேனவுக்கு 19ஆவது திருத்தத்தின் மீதும் கோபம்; எங்கள் மீதும் கோபம். இது அவரின் கோமாளிக் கூத்தாகும். இந்தக் கூத்து இன்னமும் 5 மாதங்களுக் குத்தான் தொடரும். அதன்பின்னர் எல்லாம் முடிவுக்கு வரும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட

19

## மைத்திரியின் முடிவுக்கு வலுக்கின்றது எதிர்ப்பு!

### ஐ.நா. பொதுச் செயலரும் தொலைபேசியில் பேச்சு

கொழும்பு, ஜூன் 29

தூக்குத் தண்டனையை நிறைவேற்றுவதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இணக்கம் தெரிவித்துள்ள நிலையில் அது தொடர்பாக ஐக்கிய நாடுகள் பொதுச் செயலர் அரசதலைவர்மைத்திரிபால சிறிசேனவுடன் தொலைபேசியில் பேச்சு நடத்தியுள்ளார்.

07

## மைதானத்தில் இளைஞர் கொலை: செப். 5 முதல் நாளாந்த விளக்கம்

கொழும்பு, ஜூன் 29

வட்டுக்கோட்டை பிக்னல் மைதானத்தில் இளம் குடும்பத் தலைவர் ஒருவர் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் 6 பேருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட குற்றப் பத்திரிகை மீதான விசாரணைகளை செப்ரெம்பர் 5ஆம் திகதி முதல் நாளாந்த விளக்கத்துக்கு எடுக்க யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை தவணையிட்டது.

சந்தேகநபர்கள் தரப்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்ற நீதிமன்று, வழக்கின் அத்தனை சாட்சிகளையும் மன்றில் மீளவும் முற்படவும்

19

## ஈஸ்ரர் தினத் தாக்குதலுடன் ரிசாத்துக்கு தொடர்பில்லை

### பதில் பொலிஸ்மா அதிபர் தெரிவுக்குழுவுக்கு அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 29

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவங்களுக்கும் முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று பதில் பொலிஸ்மா அதிபர் சந்தன விக்கிரமரத்ன நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு எழுத்து மூலமாகத் தகவல் வழங்கியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினமன்று

19

## பூஜித், ஹேமசிறியை நெருங்குகிறது ஆபத்து

கொழும்பு, ஜூன் 29

கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி நாட்டில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்ணான்டோ ஆகியோர் எந்நேரமும் கைது செய்யப்படலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குல்களை அடுத்து பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் கட்டாய

07

## தூக்கு நிறைவேற்றுவதை இடைநிறுத்தக்கோரி மனு

### அடுத்தவாரம் வரையில் தூக்கு நிறைவேற்றப்படாது

கொழும்பு, ஜூன் 29

தூக்குத் தண்டனையை நடைமுறைப்படுத்துவதை நிறுத்த வேண்டும் என்று இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கக் கோரி கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் நேற்று மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனு எதிர்வரும் 2ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் ஜயசிறி தென்னகோன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழங்கிய உறுதிமொழியை

19

## பலாலி வானூர்தித் தளத்தின் சீரமைப்பு 5ஆம் திகதி ஆரம்பம்

### *பிரதி அமைச்சர் அசோக் அபேசிங்க தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 29

பலாலி வானூர்தி தளத்தின் அபிவிருத்திப் பணிகள் அடுத்த மாதம் 5ஆம் திகதி ஆரம்பமாகும் என்று போக்குவரத்து மற்றும் சிவில் வானூர்திச் சேவைகள் பிரதி அமைச்சர் அசோக் அபேசிங்க தெரிவித்தார்.

நேற்று நடாளுமன்றில் சிவில் விமான சேவைகள் சட்டத்தின் கீழ் கட்டளைகள் தொடர்பிலான

07

யாழில் பிரமாண்டமான வளாகத்தில்
One year Top Up Degree
UGC Recognized International Degree
www.blccampus.edu.lk
- Bachelor of Information Technology
- Bachelor of Business Administration
- BSc in Psychology
- Bachelor of Business in Banking & Finance
- B.Ed (Teaching of English as Second Language-TESL)

✔ தனித்துவமான உயர்கல்விச் சேவை.
✔ தேர்ச்சியும் அனுபவமும் மிக்க சிரேஷ்ட விரிவுரையாளர் குழாம்

For more information: 0777 174 443


Entry requirement
HND / any Equal Qualification in the similar study

BLC CAMPUS
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 437 4443 E - info@blccampus.edu.lk



தை மாதம் 10ஆம் திகதி ஜனவரி 24, 2020ஆம் ஆண்டு சனிபகவான் தனுசு ராசியில் இருந்து மகரம் ராசிக்கு நகர்கிறார். இந்த சனிப்பெயர்ச்சியால் தனுசு மகரம் கும்பம் ராசிக்காரர்களுக்கு ஏழரைச் சனி காலமாகும். விருச்சிக ராசிக்காரர்கள் ஏழரைச் சனியில் இருந்து விடுபடுகிறீர்கள்.








# சனிப்பெயர்ச்சி பலன்கள் 2020 - 2023

## தனுசு



தனுசு ராசிக்காரர்களுக்கு ஜென்ம சனி முடிந்து பாத சனி தொட்ங்குகிறது. சனி பகவான் இரண்டாம் வீட்டில் அமர்ந்து 4ஆம் வீடு, 8ஆம் வீடு 11ஆம் வீடுகளைப் பார்க்கிறார்.

தனுசு ராசிக்காரர்களுக்குப் பாத சனி என்பதால் பட்ட காலிலே படும் என்பதால் அதிக கவனம் தேவை. தன, வாக்கு, குடும்ப ஸ்தானத்தில் சனி என்பதால் ஜாக்கிரதையாக பேசவும். குடும்பத்தில் சின்னச் சின்ன பிரச்சினைகள் வரும். பதற்றத்தைக் குறைக்கவும். பேச்சில் கவனம் தேவை. குடும்பத்தில் உள்ளவர்களுடன் அனுசரித்து போக வேண்டும்

ஜென்ம சனி இனி 30 ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் வரும். சனி பகவான் சற்று உங்கள் ராசி மாறி உங்களுடைய 2ஆம் இடமான தன ஸ்தானம் மற்றும் குடும்ப வாக்கு ஸ்தானம் வருவது சற்று பரவாயில்லை என்று தான் சொல்ல வேண்டும்.

### பாத சனி ஆரம்பம்

ஜென்ம சனி முடிந்து பாத சனி தொடங்குகிறது. பாத சனி நடக்கும்போது மெதுவாக ஆரம்பமாகின்றது. பாத சனி நடக்கும்போது பலருக்கு காலில் பிரச்சினை வரும். சிலருக்கு காலில் கட்டுபோடும் நிலை வந்திருக்கிறது. எனவே நடப்பது, ஓடுவது, வாகனத்தில் செல்லும்போது அதிக கவனம் தேவை. சனி ராசிக்கு இரண்டில் வருகிறது. எமக்கு எதிரி எம் வாய்தான். நாம் எப்போதோ பேசிய வார்த்தைகள் இப்போது பஞ்சாயத்து வைக்கும் நிலையை உருவாக்கும்.

### கவலை வேண்டாம்

குடும்பச் சனி குடும்பத்துக்கு ஆகாது. என்றே கூறுவர். அதை பற்றிய கவலைகளை தூக்கி எறிந்து விடவும். சகோதர சகோதரிகளால் எதிர்பாராத பண வரவும், பொருள் வரவும் கிட்டும். உறவினர்களால் பொருள் வரவு அல்லது சகாயம் ஏற்படும். புதிய விடயங்களைக் கற்க ஆர்வம் ஏற்படும். அடிக்கடி பயணங்கள் செய்ய வேண்டியது வரும். அந்தப் பயணங்களால் எதிர்பாராத நற்பலன்கள் ஏற்படும். இதுவரை இருந்து வந்த சோம்பல் நிலை மாறி சுறு சுறுப்பாகவும் வேகமாகவும் செயற்பட ஆரம்பிப்பீர்கள்.

### பிரச்சினைகள் வரும்

இரண்டில் சனி என்பது குடும்பத்தில் குழப்பம். கண், பல், சார்ந்த பிரச்சினைகள் வரும். யார்கிட்டயும் வாக்கு வாதமே செய்யாதீர்கள் பெருமை பேசாதீர்கள், எல்லோரையும் மதித்து நடக்க வேண்டும். குடும்பத்தில் அனுசரித்து போக வேண்டும். உங்கள் மனதில் நீங்கள் எவ்வளவு அன்பானவர் என்று உங்களுக்கே தெரியும் அதை மற்றவர்களும் புரியும் வார்த்தைகளால் வெளிப்ப டுத்துங்கள்.

### தடைகள் நீங்கும்

இதுவரை தள்ளிப் போன சுபகாரியங்கள் நடக்கும். இதுவரை தேகத்தில் இருந்த மந்த நிலை மாறி சுறுசுறுப்பும் வேகம், விவேகம் ஆரம்பமாகும். சமூகத்தில் சற்று பிரபலமாக வலம்வர வாய்ப்பும் சந்தர்ப்பமும் அமையும். இதுவரை இருந்த வந்த கவலை, வேதனை, அசிங்கம் அச்சம், அவமானம் கஷ்டம் இவற்றிலிருந்து விடுபட்டு புதுவிதமான வாழ்க்கையை எதிர்நோக்கி உங்கள் பயணம் ஆரம்பிக்கும். இதுவரை தேவையற்ற செலவுகளையும் எதிர்பார்த்த உழைப்புகேற்ற பலனும் இல்லாமல் எக்காரியத்திலும் தடையும் தள்ளிபோடும் நிலையும் உருவாகி இருந்த நிலை மாறும்.

### புதிய வேலை கிடைக்கும்

வேலையில் அதிக முன்னேற்றம் அமையும். சுய தொழில்களால் நன்மை ஏற்படும். பங்கு சந்தைகள் ஓரளவு சாதகமான பலன் தரும். நண்பர்களால் எதிர்பாராத நன்மை ஏற்படும். 2ஆம் இடம் சனி என்பதால் எப்பொழுதும் பற்றாக்குறையான சூழ்நிலை உலவி வரும். வேலை தேடுபவர்களுக்கு ஓரளவு எதிர்பார்த்த வேலை கிடைக்கும். அதே சமயம் அதிக உழைப்பு குறைந்த வருமானம் என்ற அளவில் சனியின் தன்மை இருக்கும். வேலை காரணமாக ஒரு சிலருக்கு வெளியூர், வெளிநாடு செல்ல வாய்ப்புகள் அமையும்.

### பயம் கவலை நீங்கும்

அம்மாவுக்கு வரவேண்டிய பண வரவுகள் வந்து சேரும். அம்மாவின் அன்பும் ஆதரவும் அதிகரிக்கும். இடம், வீடு, மனை, வண்டி வாகனங்கள், வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்க வாய்ப்பு அமையும். நல்ல வேலையாட்களுக்காகப் போராடிய உங்களுக்கு நல்ல வேலையாள்கள் அமைவார்கள். இதுவரை இருந்து வந்த அலைச்சல்கள் குறைந்து சற்று நிம்மதியான சூழ்நிலை உருவாகும். இதுவரை மனதில் இருந்து வந்த இனம் தெரியாத பயம், கவலை, மனக் குழப்பம் நீங்கி அதிலிருந்து விடுபட வாய்ப்புகள் அமையும்.

# இடப ராசிக்காரர்களின் குணநலன்கள்

இடப ராசிக்காரர்கள் அழகுணர்ச்சியும் கலை உணர்வும் மிக்கவர்களாக இருப்பார்கள். எப்போதும் ஒரு லட்சிய வேட்கையுடனும் உறுதியான கொள்கையுடனும் இருப்பார்கள். இவர்களுக்கென்று தனித்துவமான குணமென்றால் தாயின் மீது பக்தியுள்ளவர்கள். தாயின் மீது எல்லோருக்குமே பாசம் இருக்கத்தான் செய்யுமென்றாலும் இவர்கள் அளவுகடந்த பக்தியுடனிருப்பார்கள். தாயாரைப் பற்றி நினைத்தாலும் பேசினாலும் இவர்களின் கண்கள் கலங்கிவிடும்.

எடுத்த காரியங்களில் சுறுசுறுப்புடனும் துடிப்புடனும் ஈடுபடுவார்கள். அப்படி அவர்கள் எடுத்துக்கொண்ட காரியங்களில் 70 சதவிகிதம் அளவு வெற்றி பெற்றதும், இவர்கள் ஓரளவு நிறைவடைந்த மனநிலைக்குப்போய்விடுவார்கள். அதன் பிறகு, அவர்கள் அதில் ஆர்வத்தையும் வேகத்தையும் துடிப்பையும் குறைத்துக்கொண்டு வேறு ஒரு புதிய விஷயத்தில் கவனம் செலுத்தத் தொடங்குவார்கள். இது இவர்களுக்கு இருக்கக்கூடிய ஒரு பலவீனமாகும்.

கலைத்துறையில் ஆர்வமுள்ளவர்களென்பதால் தாங்கள் செய்யும் வேலைகளைத் திரும்பத் திரும்பச் செய்து மெருகேற்றிப் பலரது பாராட்டையும் பெறுவார்கள். கதை, கவிதை, சினிமா, தொலைக்காட்சி மற்றும் பத்திரிகை ஆகிய துறைகளில் ஈடுபட்டு வெற்றிபெறுவார்கள். இடப ராசிக்காரர்கள் பெண்களை அதிகம் மதிப்பார்கள். தாய், தாரம், அக்கா, தங்கை என எல்லோரிடமும் அன்புடனும் பண்புடனும் நடந்துகொள்வார்கள். பெண்களும் இவர்களை மிகவும் நம்புவார்கள். வெள்ளை நிறம் இவர்களுக்கு ஏற்ற நிறமாகும்.

இடப ராசிக்காரர்கள் வணங்க வேண்டிய தெய்வம், உமாதேவி, லட்சுமி ஆகிய பெண்தெய்வ வழிபாடு இவர்களுக்குக் கைகொடுக்கும். 20 வயது வரை மிகவும் சந்தோஷமாக இருந்துவிட்டு, அதன் பிறகு படிப்படியாக வாழ்வில் முன்னேறுவார்கள்.





# விஜய்சேதுபதியின் படத்தில் அமலபால் நீக்கப்பட்டது ஏன்?

## அமலாபால் விளக்கம்

இயக்குநர் எஸ்.பி.ஜனநாதனிடம் இணை இயக்குநராகப் பணிபுரிந்தவர் வெங்கட கிருஷ்ண ரோகநாத். இவர் இயக்கத்தில் உருவாகும் படத்தில் விஜய் சேதுபதிக்கு ஜோடியாக நடிக்க அமலா பால் ஒப்பந்தமாகி இருந்தார்.

விஜய் சேதுபதியின் 33ஆவது படமான இந்தப் படத்துக்கு இன்னும் தலைப்பிடப் படவில்லை. இந்தப் படத்தின் படப்பிடிப்புப் பணிகள் தொடங்கி நடந்து வருகிறன.

இதனிடையே, அமலாபால் தயாரிப்பு நிறுவனத்திடம் நட்பு ரீதியாக இருக்கவில்லை எனக் கூறி இந்தப் படத்திலிருந்து நீக்கப் பட்டதாகவும், அவருக்குப் பதில் மேகா ஆ்காஷ் கதாநாயகியாக நடிக்க இருப்பதாகவும் தகவல் வெளியானது. இந்த நிலையில், விஜய் சேதுபதியின் 33ஆவது படத்தில் இருந்து விலகியதை உறுதி செய்த அமலாபால், அது குறித்து அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில், "விஜய் சேதுபதியின் 33ஆவது படத்தில் இருந்து நானாக விலகவில்லை. என்னிடம் ஆலோசிக்காமலே படத்தில் இருந்து என்னை நீக்கி விட்டனர். திடீரென நான் படத்தில் இருந்து நீக்கப்பட்டதாகத் தயாரிப்பாளர் எனக்கு குறுஞ்செய்தி மூலம் தகவல் அனுப்பினார். 'ஆடை' படத்தின் முன்னோட்டக் காணொலி பார்த்தபிறகு தான் தன்னை படத்திலிருந்து நீக்கியிருப்பார்கள் எனச் சந்தேகிக்கிறேன். விஜய்சேதுபதி மீது தனக்கு எந்தவித பிரச்சினையும் இல்லை, தற்போதும் நான் அவரது ரசிகை" என்று அவர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# சாதிப்பவன் சோர்ந்து விடமாட்டான்


வகுப்பு முடிய சற்று நேரம் இருந்தது.

"உலகின் சிறந்த கணித மேதைகளால் தீர்க்க முடியாத இரண்டு கணக்குகளை கரும்பலகையில் எழுதியுள்ளேன். இந்தக் கணக்குகள் இரண்டும் இன்றும் தீர்க்க முடியாத புரியாத புதிராகவே உள்ளது" என்றார், ஆசிரியர்.

ஆசிரியர் எழுதும்போது அந்த மாணவன் வகுப்பில் இருக்கவில்லை. சற்றுத் தாமதமாய் அந்த மாணவன் வகுப்புக்குள் வந்தான். அதற்குள் பாடம் முடிந்து விட்டது.

அந்தக் கணக்குகளை வீட்டுப்பாடங்கள் என்று நினைத்து, குறித்துக்கொண்டு போனான் அந்த மாணவன்.

மறுநாள் வகுப்புக்கு விடையுடன் வந்தான் அவன். ஆசிரியர் உட்பட பாடசாலையே திகைத்து நின்றது. அந்தச் சம்பவத்தாலேயே உலகப் புகழ்பெற்றான் அவன். அந்த மாணவன்தான் 'ஜோர்ஜ் பேர்நாட் டாந்த்ஸிக்.' அந்த சம்பவத்துக்கு அவர் தந்த விளக்கம், "அது யாராலும் முடியாது என்று எனக்குத் தெரியாது. எனவே, என்னால் முடிந்தது"



நம்மூரு சாலைகளில் பஸ்ஸின் பின் இருக்கையில் அமர்ந்து பயணிக்கும் போது...😄😄




உலகின் தலைசிறந்த பொய்!!!



இரண்டு பேரும் இங்க வாங்க அம்மா அடிக்க மாட்டேன்....

# சிரிப்பின் தன்மையும் மனிதர்களின் பண்பும்

- வெற்றியில் சிரிப்பவன் வீரன்.
- கண்பார்த்து சிரிப்பவன் கஞ்சன்.
- துன்பத்தில் சிரிப்பவன் மனிதன்.
- மகிமையில் சிரிப்பவன் மன்னன்.
- விளையாமல் சிரிப்பவன் வீணன்.
- இடம் பார்த்து சிரிப்பவன் எத்தன்.
- மாண்பில் சிரிப்பவன் பண்பாளன்.
- மோகத்தில் சிரிப்பவன் வெறியன்.
- கற்பனையில் சிரிப்பவன் கவிஞன்.
- ஓடவிட்டு சிரிப்பவன் நயவஞ்சகன்.
- தெரியாதென்று சிரிப்பவன் நடிகன்.
- நின்று சிரிப்பவன் நினைவுள்ளவன்.
- ஓயாமல் சிரிப்பவன் பைத்தியக்காரன்.
- கோபத்தில் சிரிப்பவன் சிந்தனையாளன்.
- கொடுக்கும்பொழுது சிரிப்பவன் சூழ்ச்சியாளன்.
- இன்பத்தில் சிரிப்பவன் ஏமாளி.
- நினைவோடு சிரிப்பவன் அறிவாளி.
- தெரியுமென்று சிரிப்பவன் பசப்பாளி.
- இருக்குமிடமெல்லாம் சிரிப்பவன் கோமாளி..
- குழைந்து சிரிப்பவன் சந்தர்ப்பவாதி.
- நிலைகண்டு சிரிப்பவன் காரியவாதி.
- அருளுக்கு சிரிப்பவன் ஆண்டி.
- தற்பெருமையில் சிரிப்பவன் கோழை.



## twitter

மீனுக்குக்கூடத் தொல்லை வராதுஅதுதன் வாயை மூடிக் கொண்டிருந்தால்.

மனிதர்களில் இரண்டு வகையினர் மட்டுமே உண்டு. ஒன்று திறமையான வர்கள். இரண்டு, திறமையைப் பயன்படுத்தா தவர்கள்.

ஆசைப்படுவது மனம். ஆசைப்பட வைப்பது புத்தி. அவதிப்படுவதோ உடல்.

ஆபத்து பயத்தையும், பயம் அதைவிடப் பெரிய ஆபத்தையும் தருகிறது.

நீங்கள் வயதாவதால் சிரிப்பை நிறுத்துவதில்லை. நீங்கள் சிரிப்பை நிறுத்துவதால்தான் வயதானவராகிறீர்கள்.



# ஓஹோஹோஹோ! மனிதர்களே!

ஓஹோஹோஹோ மனிதர்களே!
பேசுவதென்ன சொல்லுங்கள்!
காதிலே இயர்போன்! பையிலே செல்போன்!
கிளப்புறீங்கள் தூள் நீங்கள்!
ஓஹோஹோஹோ!

தினமும் காதில் செல்போன்வைத்துச் சாலையைக் கடப்பீர்!
சனங்கள் பார்க்க கிறுக்கர்கள்போலே உரக்கவே சிரிப்பீர்!
அலறிப்பேசி அடுத்தவன்காதின் சவ்வைக் கிழிப்பீர்!

ஐபோன் பந்தா அடங்கவுமில்லை!
ஆண்ட்ராய்ட் ஜம்பம் முடங்கவுமில்லை!

ஓஹோஹோஹோ! மனிதர்களே!
பேசுவதென்ன சொல்லுங்கள்!

மெமரி முழுதும் பாட்டுக்கள்
சேர்த்து உரக்கவே கேட்பீர்கள்
மெயில்கள் எதுவும்
வரலைன்னாலும் அடிக்கடி பார்ப்பீர்கள்
பேஸ்புக் ருவீற்றர் அனைத்திலும்
சேர்ந்து மொக்கை இடுவர்

வீட்டுக்கு வழியும் கூகிளில் தேடல்
வில்லங்கமாச்சே புதுயுக மாடல்!

ஓஹோஹோஹோ மனிதர்களே!
பேசுவதென்ன சொல்லுங்கள்!



**யாழ்ப்பாணத்தின் புறநகர் பகுதியில் நீர்வளம் நிலவளம் உள்ள 2 பரப்பு காணி தேவை! 0779086737**

உரிமையாளர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்!

## வேலையாள்கள் தேவை

யாழ்நகரில் இயங்கும் பிரபல நகை வியாபார நிலையத்துக்கு வேலையாள்கள் தேவை.

**076 658 0661**

## பெறுகை அறிவித்தல்
## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## சபைநிதி - 2019

1. சபை நிதி ஒரு பகுதி கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட திட்ட கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் மேற்குபிரதேச சபை, சுழிபுரம் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்தும், வழங்குநர்களிடமிருந்தும் முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.

3. தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016(1) இலக்க 16.03.2016 ஆம் திகதிய நிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக வடமாகாணத்தை சார்ந்தவர்களுக்கும் மற்றும் வேண்டப்படும் உரியதரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும். மேலும் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளில் வேண்டப்படும் தரம் அட்டவணையில் குறிப்பிட்டவாறு இல்லாதவிடத்து அதனிலும் கூடிய தரம் சமர்ப்பித்த கேள்விகள் பரிசீலிக்கப்படலாம்.

4. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி வீதி மற்றும் கட்டடம் பொருத்தமான தரத்தில் இக்ராட்/ சீடா ( ICTAD / CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.

5. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது.

6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் சுழிபுரத்தில் அமைந்துள்ள வலிகாமம் மேற்கு பிரதேச சபை (தொலைபேசி : 0212250144, தொலைநகல் :021 2250144, மின்னஞ்சல் : valiwestps@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாள்களில் காலை 09.00 மணிமுதல் பி.ப 14.00 மணிவரையிலானகாலப் பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம், என்னும் இடத்தில் 01.07.2019 ஆம் திகதியிலிருந்து 15.07.2019 ஆம் திகதிவரை வேலைநாள்களில் காலை 09.00 மணிமுதல் பி.ப 14.00 வரைமீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000/- (வரிநீங்கலாக) செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

8. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்,** என்னும் முகவரிக்கு 17.07.2019ம் திகதி மு.ப 11.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது மேற்படி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்தவுடன் வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப் பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக்குழுவிற்கு அதிகாரமுண்டு.

9. கோரப்பட்ட வேலைகளில் 1 தொடக்கம் 6 வரையான கேள்விகளுக்கான கேள்வி செல்லுபடியாகும் காலம் கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 63 (அறுபத்து மூன்று– 18.09.2019) நாள்களாகும். 7ஆவது கேள்விக்கு கேள்வி செல்லுபடியாகும் காலம் கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 49 (நாற்பத்தொன்பது– 04.09.2019) நாள்களாகும்.

10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| தொ. இல | ஒப்பந்த எண் | வேலைவிவரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன் ரூபா) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு | செல்லுபடி யாகும் காலம் |
| 01 | NP/14/41(17)/02/CF/01/2019 | வட்டுக்கோட்டை பகுதி வீதிகள் புனரமைப்பு (கலைவாணி 1 ஆம் ஒழுங்கை, கனகரட்ணம் வீதி 1 ஆம் ஒழுங்கை, குளிப்பன் வீதி 2 ஆம் ஒழுங்கை, மூளாய் 3 ஆம் ஒழுங்கை-கிளை ஒழுங்கை, கலட்டி 1 ஆம் ஒழுங்கை) | 3.539 Mn (VAT நீங்கலாக) | 03 மாதங்கள் | C8 வீதி | 35,400.00 | 16.10.2019 |
| 02 | NP/14/41(17)/02/CF/02/2019 | அராலி பகுதி வீதிகள் புனரமைப்பு (உடையார் வீதி, யாழ் வீதி 1ஆம் ஒழுங்கை,கடற்கரை வீதி, துணைவி ஒழுங்கை) | 2.718 Mn (VAT நீங்கலாக) | 03 மாதங்கள் | C8 வீதி | 27,200.00 | 16.10.2019 |
| 03 | NP/14/41(17)/02/CF/03/2019 | சங்கானைபகுதிவீதிகள் புனரமைப்பு (ஒடக்கரைஒழுங்கை,வைத்தியசாலைவீதி கிளை ஒழுங்கைகள்,பட்டின சபை வீதி,சங்கரத்தை 3ம் ஒழுங்கை) | 2.845 Mn (VAT நீங்கலாக | 03 மாதங்கள் | C8 வீதி | 28,500.00 | 16.10.2019 |
| 04 | NP/14/41(17)/02/CF/04/2019 | சுழிபுரம் பகுதிவீதிகள் புனரமைப்பு- குழு I (தேவாலயவீதி 1 ஆம் ஒழுங்கை-மூளாய், பாணாவெட்டி 1ஆம் ஒழுங்கை-தொல்புரம் மேற்கு,பொன்னாலை -பருத்தித்துறை -கம்மாளை இணைப்புவீதி) | 2.036 Mn (VAT நீங்கலாக | 03 மாதங்கள் | C8 வீதி | 20,400.00 | 16.10.2019 |
| 05 | NP/14/41(17)/02/CF/05/2019 | சுழிபுரம் பகுதி வீதிகள் புனரமைப்பு–குழு II (காட்டுப்புலம் காளிகோவில் 1ஆம் ஒழுங்கை,பாண்டவெட்டை 9ஆம் ஒழுங்கை, சுழிபுரம் தபாலக பின்வீதி) | 2.122 Mn (VAT நீங்கலாக | 03 மாதங்கள் | C8 வீதி | 21,300.00 | 16.10.2019 |
| 06 | NP/14/41(17)/02/CF/06/2019 | சுழிபுரம் பகுதிவீதிகள் புனரமைப்பு- குழு III (பொக்கன் கலட்டிவீதி, டச்சுவீதி-இணைப்புவீதி - தொல்புரம் மேற்கு, அந்தோனியார் வீதி-தொல்புரம் மேற்கு) | 2.128 Mn (VAT நீங்கலாக | 03 மாதங்கள் | C8 வீதி | 21,300.00 | 16.10.2019 |
| 07 | NP/14/41(17)/02/CF/07/2019 | சுழிபுரம் பகுதி வீதிகள் புனரமைப்பு- குழு IV (காலையடி வீதி, குலணை வீதி, கும்பகோணவைரவர் வீதி) | 1.902 Mn (VAT நீங்கலாக | 03 மாதங்கள் | C9 வீதி | 19,100.00 | 02.10.2019 |

11. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் 08.07.2019 அன்று பி.ப 14.00 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமதுசொந்த செலவில் கலந்துகொள்ளமுடியும்.

**த.நடனேந்திரன்**
**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**வலிகாமம் மேற்குபிரதேச சபை,**
**சுழிபுரம்.**
**29.06.2019.**

## 10 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



**தேவகுமார் சுகிர்தாம்பிகை** தம்பதிகளின் அருந்தவப்புதல்வனும் **குமரகுருநாதன் மதனராணி** தம்பதிகள், காலஞ்சென்ற **சந்திரசேனா** மற்றும் **அழகம்மா** தம்பதிகளின் பேரனுமாகிய

# பிரவீன்

தனது 10 ஆவது பிறந்தநாளை இன்று (29.06.2019) சனிக்கிழமை **மூளாயில் உள்ள தனது இல்லத்தில்** கொண்டாடுகின்றார். பிரவீன் குட்டி பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென்று வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
**அம்மா, அப்பா, அம்மம்மா, அப்பம்மா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.**

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ - து)

## பாண் போறணை வாஸ் பதவி

எமது சங்கத்தின் அராலி மேற்கு வட்டுக்கோட்டையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மின்சாரம் மூலம் இயங்கும் வெதுப்பகத்திற்கு அனுபவமுள்ளவேலையாள்கள்தேவை. அனுபவம்உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும். தற்காலிகம்/ஒப்பந்த அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும்.

**01.வெதுப்பக உற்பத்தி / விற்பனை முகாமையாளர்**
**02.போறணை வாஸ்**
**03.மேசை வாஸ்**

தங்கள் விண்ணப்பத்தை "**தலைவர், சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம், சங்கானை**" என முகவரியிட்டு அனுப்ப வேண்டும். விண்ணப்பம் ஏற்கும் முடிவுத்திகதி 12.07.2019 ஆகும். வேதனம் நேரில் தங்களுடன் கலந்தாலோசித்து தீர்மானிக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

**பதில் பொது முகாமையாளர்**
**சங்கானை ப.நோ.கூ.சங்கம்**

## கணினி திருத்தம்

நியாயவிலை கணினி விற்பனை சேவையுடன் சகலவிதமான கணினிகள் லப்டொப்கள் பிறின்டர்கள் உங்களது வீடுகள் அலுவலகங்களுக்கும் வந்து திருத்தி தருகிறோம். **Computer Repair / Sale**


## சிசிரிவி கமரா

துல்லியமான 4 சிசிரிவி கமராக்கள் கொண்ட பொதி மிகக்குறைந்த விலையில் விற்பனையுடன் பொருத்தியும் தருகிறோம். **CCTV Camera Sale / Installation**

**077 9086737 GUNA BEST PC**

522 மானிப்பாய் வீதி ஓட்டுமடம் சந்தி யாழ்ப்பாணம்
யாழ்ப்பாணம் கிளிநொச்சி முல்லைத்தீவு வவுனியா மன்னார்

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

# சபாரத்தினம் சற்குணானந்தன்

(ஓய்வு பெற்ற செயலாளர், வலி. மேற்கு பிரதேச சபை)

தோற்றம் **24.04.1939** மறைவு **21.06.2017**

திதி : துவாதசி (29.06.2019)

எளிமையாம் உருவங்கொண்டு
எமை வழிப்படுத்திய எங்கள் குடும்பத்து
ஒளி விளக்கே! உமைப்பிரிந்து
ஆண்டு இரண்டு ஆயிடினும் என்றென்றும்
அழியா பசுமையாம் நினைவு
சுமந்து வாழ்கிறோமிங்கே வானகத்திலிருந்து
வழிகாட்டியாய் காப்பீரெம்மை
இறைபதமேகி பெறுக நித்தியசாந்தி

**நீங்காத நினைவுகளுடன்**
**அருமை மனைவி, பிள்ளைகள்,மருமக்கள், பேரப்பிள்ளைகள்**
**நவாலி வீதி, சங்கரத்தை, வட்டுக்கோட்டை**

## புங்குடுதீவு நயினாதீவு பல நோக்குக்கூட்டுறவுச்சங்கம் வாக்காளர் இடாப்பு மூடுதல்

**31.03.2019 முடிவடைந்த காலப்பகுதிக்கான வாக்காளர் இடாப்பு மூடப்பட்டுள்ளது. இந்த இடாப்புகள் அங்கத்தவர் ஆட்சேபனைகளை பெறுவதற்காக 29.06.2019 - 13.07.2019 வரை பின்வரும் கிளைகளில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றேன்.**

கிளை இல. 01 இற்கான வாக்காளர் பட்டியல் - தலைமைக்காரியாலயத்திலும்

கிளை இல. 02 இற்கான வாக்காளர் பட்டியல் - கிளை இல. 02இலும்

கிளை இல. 03 இற்கான வாக்காளர் பட்டியல் - தலைமைக்காரியாலயத்திலும்

கிளை இல. 05 இற்கான வாக்காளர் பட்டியல் - கிளை இல. 05இலும்

கிளை இல. 06 இற்கான வாக்காளர் பட்டியல் - தலைமைக்காரியாலயத்திலும்

கிளை இல. 07 இற்கான வாக்காளர் பட்டியல் - தலைமைக்காரியாலயத்திலும்

கிளை இல. 09 இற்கான வாக்காளர் பட்டியல் - தலைமைக்காரியாலயத்திலும்

கிளை இல. 10 இற்கான வாக்காளர் பட்டியல் - கிளை இல. 10இலும்

கிளை இல. 12 இற்கான வாக்காளர் பட்டியல் - தலைமைக்காரியாலயத்திலும்

கிளை இல. 13 இற்கான வாக்காளர் பட்டியல் - கிளை இல. 13 இலும்

கிளை இல. 14 இற்கான வாக்காளர் பட்டியல் - தலைமைக்காரியாலயத்திலும்

கிளை இல. 15 இற்கான வாக்காளர் பட்டியல் - தலைமைக்காரியாலயத்திலும்

கிளை இல. 16 இற்கான வாக்காளர் பட்டியல் - தலைமைக்காரியாலயத்திலும்

கிளை இல. 18 இற்கான வாக்காளர் பட்டியல் - கிளை இல. 20 இலும்

கிளை இல. 19 இற்கான வாக்காளர் பட்டியல் - கிளை இல. 20 இலும்

கிளை இல. 20 இற்கான வாக்காளர் பட்டியல் - கிளை இல. 20 இலும்


பார்வையிடலாம்.

**அங்கத்தவர்கள் ஆட்சேபனை ஏதும் இருப்பின் 13.07.2019 இற்கு முன்னர் எழுத்துமூலம் தலைமை அலுவலகத்திற்கு தெரியப்படுத்தி வாக்காளர் இடாப்பை பூர்த்திசெய்ய உதவும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.**

செயலாளர்
புங்குடுதீவு நயினாதீவு
பல நோ.கூ.சங்கம்

## மரண அறிவித்தல்

### கதிரவேலு வயிரவப்பிள்ளை



கீரிமலை கூவிலைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் மேற்கு அம்மன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு வயிரவப்பிள்ளை நேற்று (28.06.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - தெய்வி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு - சின்னத்தங்கைச்சி தம்பதிகளின் மருமகனும், சந்திரகுமாரியின் அன்புக் கணவரும், அர்ச்சனா (பிரான்ஸ்), கீர்த்தனா, சிந்துஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், றதீபனின் மாமனும், ஆரியனின் அன்புப் பேரனும், நாகம்மா, கந்தசாமி, செல்லம்மா (சுவிஸ்), முருகையா (லண்டன்), ஶ்ரீகுமார், சிவசோதி (ஜேர்மனி), காலஞ்சென்ற மகாதேவன் ஆகியோரின் சகோதரரும், சரஸ்வதி, பரஞ்சோதி, மகேஸ்வரன் (பிரான்ஸ்), சூரியகுமார், உதயகுமாரி (பிரான்ஸ்), சாந்தி, காலஞ்சென்ற பூபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும், துஷ்யா, றம்யா ஆகியோரின் பெரியப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**உரும்பிராய் மேற்கு,**
**மூன்றுகோயில் வீதி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS/26343)(11.17)

## கல்லெடுப்பு, சபிண்டீகரண அழைப்பு



கடந்த 16.06.2019 ஞாயிற்றுக்கிழமை
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்


**சிவஶ்ரீ கணபதிப்பிள்ளை ஐயா**
**சோமசுந்தரக் குருக்கள்**

அவர்களின் பாஷாண உத்வாசனம் (கல் எடுப்பு) 01.07.2019 திங்கட்கிழமை அதிகாலை 5 மணிக்கு நடைபெற்றுத் தொடர்ந்து முற்பகல் 10 மணியளவில் சபிண்டீகரணம் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

**கரைச்சிக் குடியிருப்பு, முல்லைத்தீவு.** **குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்



**ஸ்தபதி சுப்பிரமணியம்**
**இராசரத்தினம்**
**(கலாபூசணம்)**
**(விநாயகர் சிற்பாலயம்)**

எமை உருவாக்கி ஆளாக்கிய சிற்பி நீர்....
இன்று உமை இழந்து நிர்க்கதியாய் நிற்கின்றோம்
அப்பா.....
சித்திரைப் பதுமையாய் சிரித்து தலையசைத்து
எம்மை வழி போகும் இடத்திற்கு
வழியனுப்பி வைத்து எமக்காய்
காத்து நிற்பீரே !
இன்று எமைக் காத்திருக்க வைத்து
சென்றீரே அப்பா ....
என்றும் உம் நினைவுகளுடன்....


தோற்றம் 28.08.1934 மறைவு 29.05.2019

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(CS 26332)(14.17)

## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 16 | 27 |
| 04 | 06 |
| 1937 | 2019 |



### கோவிந்தன் கந்தர்

வரணி இயற்றாலை, வரணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கோவிந்தன் கந்தர் 27.06.2019 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோவிந்தன் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - கண்ணகை தம்பதிகளின் பாசமிகு மருமகனும், கண்ணகை மற்றும் காலஞ்சென்றவர்களான தெய்வயானை சின்னத்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரரும், இலட்சுமியின் அன்புக் கணவரும், கந்தசாமியின் பாசமிகு மைத்துனரும், புஸ்பகலாதேவி (லண்டன்), விக்கினேஸ்வரன் (சுவிஸ்) விமலாதேவி (ஆசிரியர், யா/ கல்வியங்காடு HTMS), சசிகலாதேவி (ஆசிரியர், யா/வரணி மத்திய கல்லூரி), விஸ்ணுமூர்த்தி (சுவிஸ்), விஷ்ணுபவான் (லண்டன்), காலஞ்சென்ற விமலேந்திரன், விஷ்ணுகரன் (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகஸ்தர், கிளிநொச்சி), சதீஸ்வரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுமதி (சுவிஸ்), காலஞ்சென்ற இராசேந்திரம் (லண்டன்), விக்கினேஸ்வரன் (தபால் ஊழியர், தபால் கந்தோர், யாழ்ப்பாணம்), விக்கினேஸ்வரன் (தலைமைப்பீட சமுர்த்தி முகாமையாளர், மருதங்கேணி), கார்த்திகா (சுவிஸ்), ஹம்சிகா (லண்டன்), நிரஞ்சனி (ஆசிரியர், யா/கரவெட்டி ஶ்ரீநாரத வித்தியாலயம்), சோபிகா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், றூபா, பாதுஷன், விதுரன், விபுல், நிவேதிகா, கபிஷன், உமாவதனன், சஹானா, அனுஷ்கா, டினோ, நிஷானா, டக்சிகா, புருஷோத், சங்கீத், சாசினி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.06.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊற்றல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

(IN/10861)(11.17)

**077 361 2740, 076 296 2477**

விராட் விஸ்வப் பிரம்மனே நம

# மரண அறிவித்தல்



தோற்றம் 02 . 06 . 1953

மறைவு 28 . 06 . 2019

## திருமதி ஜெகசோதி (சோதி) தங்கராசா

விஸ்வகுல ஒழுங்கை, புலோலி வடக்கு பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் இல.953, தட்டாதெரு யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெகசோதி தங்கராசா 28.06.2019 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா-மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும், தங்கராசாவின் பாசமிகு மனைவியும், நிரூபன் ( Doctor யாழ். போதனா வைத்தியசாலை), காலஞ்சென்றவர்களான கிருபன், நிரஞ்சன் ஆகியோரின் அன்புத் தாயாரும், அபிராமியின் அன்பு மாமியாரும், ஹரிஷின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான பாலசரஸ்வதி, இராமச்சந்திரன், பாலச்சந்திரன் மற்றும் சிவனேஸ்வரி (கனடா), காலஞ்சென்றவர்களான புஸ்ப ராணி, சிவச்சந்திரன் மற்றும் காங்கேசச்சந்திரன் (லண்டன்), கலைவாணி (ஆசிரியை-யா/புற்றளை ம.வி பருத்தித்துறை) ஆகியோரின் அன்புச் சகோ தரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.06.2019 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் தட்டாதெருவிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூத வுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: ச.தங்கராசா (கணவர்)**
**த.நிரூபன் (மகன்-வைத்தியர் யாழ்.போதனா வைத்தியசாலை)**

**T.P: 077 4924 865**

## தேவை

யாழ்ப்பாணம் உசன் பகுதியில் உள்ள தென்னந்தோட்டத்திற்கு பராமரிப்பாளர் தேவை. வேலையில் மிகுந்த அர்ப்பணிப்பும் ஆர்வமும், O/L வரை படித்தோரும் வயது 30 - 55 விரும்பத்தக்கது.

**தொடர்பு-077 762 6241**

## தேவை

நெல்லியடியில் கட்டட நிர்மாண வேலைக்கு Shuttering வேலை செய்பவர் உடன் தேவை.

**076 826 4864, 077 712 0945**

## வீடு காணி விற்பனைக்கு

கல்வியங்காடு டச் றோட்டில் 2 பரப்பிலமைந்த புதிய வடக்கு வாசல் வீடும், 12 பரப்பு காணியும் விற்பனைக்குண்டு.
(குறைந்த விலையில் பெறலாம்.)

(CS 26210)(04.17)

**076 697 2287**

## புறொயிலர் விற்பனைக்கு

ஐங்கரன் பாம் பிறவுண் வீதி கலட்டிச்சந்தி உயிருடன் புறொயிலர் 1kg - 270 மொத்த விற்பனை (ஒரு கோழியின் எடை 2½kg)

(CS 26340)(04.17)

**077 905 0165**

## வேலையாள்கள் தேவை

01. மின் இணைப்பாளர் - தனி,மூன்று நிலை ரூபா 1200.00-1500.00
02. பிளமிங் வேலை தெரிந்தவர்கள் ரூபா 1200.00-1500.00
03. சாரதி - (லைற் வெயிக்கிள் லைசென்ஸ்)
04. மேசன் - ரூபா 1500.00
05. லேபர் - ரூபா 1200.00

தொடர்புகளுக்கு:
**075 918 3940** (திங்கள் முதல் - சனி வரை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை மட்டும் தொடர்புகொள்ளவும்)

## Winspire International Education

**மாணவர்களுக்கான இலவச வீசா சேவை**



**அவுஸ்திரேலியா நியூசிலாந்து** அல்லது **கனடா**
ஆகிய நாடுகளில் செப்ரெம்பர் 2019 முதல் குடியேறுவதற்கான

**பதிவுகள் மற்றும் நேர்முகத் தேர்வு**
**2019 ஜுன் 30 மற்றும் ஜுலை 1**
**மு.ப. 9.00 தொடக்கம் மாலை 5 மணிவரை**

Jetwing Jaffna
(ஜெட்விங் யாழ்ப்பாணம்)

விசாரணைகளுக்கு மற்றும் முன்பதிவுகளுக்கு அழையுங்கள் : **077 175 0505**

## தேவை

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள கூல் பாருக்கு அனுபவம் உள்ள குளிர்பானம் தயாரிக்கத் தெரிந்தவர்கள் தேவை.

**021 222 5354, 078 310 6317**
**கண்டி றோட், பஸ்ரியன் சந்தி.**

## வேலைக்கு ஆள்கள் தேவை

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் இயங்கும் Pillaiyar agencies pvt ltd என்ற நிறுவனத்திற்கு கணக்கீட்டாளர் தேவை. உயர் தர வணிகப் பிரிவில் கல்வி கற்ற பெண் பிள்ளை விரும்பத்தக்கது.

**வயது 20 - 35**

**நேர்முக தெரிவிற்கு சமூகமளிக்க வேண்டிய நாள்: 01.07.2019**
**9.00 am - 3.00 pm**

**தொடர்பு : 076 161 6031/ 077 028 2811**

**குறிப்பு :** ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள LUXMY திருமண மண்டபத்திற்கு மிக அருகாமையில்

**முகாமையாளர்.**

# INVITATION FOR BIDS TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional procurement Committee, Teaching Hospital, Jaffna. Invite sealed bids from eligible and qualified bidders for the construction works in the schedule below.

| | Work/ Service Details | Non refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity period of bid Security (Days) | Approximate BOQ of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 1. | Stainless Steel and Aluminum works for Accident Emergency Unit | 500.00 | 75,000.00 | 91 | 3.7 | C 8 |
| 2. | Renovation of Radiology Department Room and Renovation Works at Ward No 01 | 500.00 | 35,000.00 | 91 | 1.5 | C 9 |
| 3. | Toilet Renovation at Ward No 03 | 500.00 | 25,000.00 | 91 | 1.2 | C 9 |
| 4. | Tilling & Painting of SHO Quarters Room & Tilling of Kitchen Room, Aluminium Works for Consultant Tea Lounge, Ward No 22 & Audiology Room and Fixing Curtin & Air Conditions at museum and Fixing Curtin at Administrative Office, Speech Therapy Unit, Chest Unit andNeurology Clinic | 500.00 | 18,000.00 | 91 | 0.8 | C 9 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).
4. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
5. A complete set of bidding documents in English Language may be purchased by interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 01.07.2019 up to 15.07.2019 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.
6. Sealed bids shall be delivered to the address below at or before 10.00hrs on 17.07.2019 late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

**Director (Chairman)**
**Regional Procurement Committee,**
**Teaching Hospital, Jaffna.**
**29.06.2019**

# மரண அறிவித்தல்



## கந்தையா செல்வரத்தினம்

**(ஓய்வுநிலை பொறியியலாளர்)**

கொக்குவில் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா செல்வரத்தினம் நேற்று (28.06.2019) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா தங்கச்சிப்பிள்ளை தம்பதியினின் அன்பு மகனும் காலஞ்சென்ற இரத்தினேஸ்வரி, மற்றும் பரமேஸ்வரி, கமலாதேவி (ஓய்வுநிலை உட்துறை கணக்காய்வாளர், நல்லூர் பலநோக்கு கூட்டுறவு சங்கம்), ஜெயறாஸ் (ஓய்வுநிலை உதவி வெளிக்கள உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் கலைச்செல்வி (ஆசிரியர் யா/ இந்துமகளிர்கல்லூரி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் பிரசாந்தியின் (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை) பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புகையிரதவீதிஅருகாமை, கொக்குவில் கிழக்கு.**

**தகவல்:குடும்பத்தினர்.**
0212212365, 0772915970



# ஏமாந்த முதலை

நரிக்கும் முதலைக்கும் பகை ஏற்பட்டிருந்தது. ஆனால் நரியைப் பழிவாங்க தருணம் பார்த்திருந்தது முதலை. நரி எப்படியும் தண்ணீர் குடிக்க ஆற்றுக்கு வரத்தானே வேண்டும். அப்போது நரியைப் பிடித்துக் கொல்லலாம் எனத் தினமும் ஆற்றுக் கரையோர நீருள் பதுங்கியிருக்கும். நரியோ மிகக் கவனமாக வந்து சற்றும் முற்றும் பார்த்துவிட்டுத் தண்ணீர் குடித்துவிட்டுப் போகும். நாள்கள் பல கடந்தும் முதலையால் நரியைப் பிடிக்கவே முடியவில்லை. ஒருநாள் மரத்தின் ஓரமாகப் பதுங்கிக் கிடந்தது முதலை. நரியோ முதலையைக் கவனிக்கவில்லை. அந்த மரத்தின் அருகில் வந்து தண்ணீர் குடித்தது. குப்பெனப் பாய்ந்த முதலை நரியின் காலைக் கௌவிக்கொண்டது. நரிக்கு ஆபத்துப் புரிந்தது. இருப்பினும் சமாளித்துக்கொண்டு பெரிதாகச் சிரித்தது. முதலையோ! உன்னை நினைத்தால் எனக்கு வேடிக்கையாக இருக்கிறது. என் கால் என்று நினைத்து மரத்தின் வேரைக் கௌவிக்கொண்டிருக்கிறாயே? என்றது. முதலைக்குச் சந்தேகம் வந்தது. நரி சொன்னதை நம்பி தான் பிடித்திருந்த நரியின் காலின் விட்டுவிட நரி அங்கிருந்து ஓடியது. முதலைக்குப் பெரிய ஏமாற்றமாகிப் போய் விட்டது. முகம் வாடியபடி அமர்ந்திருந்தது. அப்போது நீருக்குள் இருந்த நண்டு ஒன்று அதனருகில் வந்தது. முதலையே ஏன் கவலையுடன் இருக்கிறாய்? என்று கேட்டது. முதலை தன் கவலை பற்றிக் கூறியது. நண்டோ நான் எப்படியும் அந்த நரியைப் பழிவாங்க வேண்டும் என்று கூறியது.

நண்டு "முதலையே நீ செத்தது போல படுத்துக் கொள். நான் நரியை ஏமாற்றி அழைத்து வருகிறேன்" என்று சொல்லிவிட்டுச் சென்றது. நண்டு நரியைச் சந்தித்தது. "நரியே! உனக்கு விசயம் தெரியுமா? உன் விரோதியான முதலை இறந்து விட்டது"என்றது. நரியும் மீண்டும் ஆற்றங்கரைக்கு வந்தது. முதலை செத்தது போல கிடந்தது. நரிக்கு சந்தேகம் வந்தது. "நண்டே முதலை சாகவில்லை செத்துப்போனது போல நடிக்கிறது" என்றது. நண்டு அதனை மறுத்தது. "நரியே முதலை இறந்து இரண்டு நாளாகி விட்டன. எனக்கு நன்றாகத் தெரியும்" என்றது. நரியோ "நண்டே உனக்குத் தெரியாது முதலை இறந்து போய் இருந்தால் வால் ஆடுமே! இப்போது வால் ஆடவில்லையே" என்றது.

முதலை நரி கூறியதைக் கேட்டு குழம்பிப் போனது. ஒரு வேளை இறந்து போனால் வாலை ஆட்ட வேண்டுமோ என நினைத்து உடனே விரைந்து தன் வாலை ஆட்டவும் செய்தது. இதை கவனித்த நரி "அம்மாடியோ தப்பினேன்" என்றபடி அங்கிருந்து ஓட்டம் பிடித்தது. முதலை மீண்டும் ஏமாந்து போனது.

# பழமொழிகள்

பழமொழிகள் எம் முன்னோர் எமக்கு அளித்த அருஞ்சொல் வளங்கள். முன்னோருக்கு அனுபவ வார்த்தைகள். அவை எமக்கு நல்ல வழி புகட்ட வல்லன. வையத்து வாழ்வாங்கு வாழ துணை புரிவன. அவற்றைப் போற்றிப் படிப்பதும் பேணிக் காப்பதும் எமது கடமையாகும்.

எமது தமிழ் மொழியின் பண்டைக் காலத்துப் ஆக்கப்பெற்ற செய்யுள் நூல்களிலும் முற் காலத்துப் புலவர்களால் எழுதப்பட்ட உரைநடை நூல்களிலும் எண்ணிலடங்காப் பழமொழிகள் பரந்து விரிந்து கிடக்கின்றன. பழமொழியைப் பழைய மொழி , பழகிப் போன மொழி, பக்கத்தில் வந்துவிட்ட மொழி எனப் பலவாறு கூறலாம். அவற்றுக்கு இலக்கணமோ வரையறையே கிடையாது. நமது முன்னோர் அனுபவ ரீதியாகப் பெற்று அறிவைக் கொண்டே பழமொழிகளைக் கூறினர். அவை செந்தமிழிலன்றிக் கொச்சை மொழிகளிலும் அமைந்திருப்பதைக் காணலாம்.

பழமொழிகள் காலத்தின் கண்ணாடிகள். அவை தோன்றிய காலத்து மாந்தரின் வாழ்க்கை முறை, சமுதாய எண்ணங்கள் , பொருளாதார உண்மைகள் முதலியவை பழமொழிகள் வாயிலாக எதிரொலிக்கின்றன. இக் காலத்து மக்களின் நம்பிக்கைகள், ஆழமான பற்றுக்கள், அவர்களின் உளவியல் நிலைகள் முதலியவையும் பழமொழிகளில் ஒளிந்து கொண்டு இருக்கின்றன.

மக்களின் உண்மைகளை வெளிப்படுத்தும் கருவியாகப் பழமொழிகள் விளங்குவதாலேயே அவை இலக்கியமாகின்றன. எதுகையும் மோனையும் இடம் பெற்றிருந்தால் கவிதையாகவும் விளங்குகின்றன. மக்களின் பண்பாட்டை அறிவிப்பதால் அவை சமூக இலக்கியமாகின்றன. நீதிகளைக் கூறுவதால் அறிமுறை இலக்கியமாகவும் மிளிர்கின்றன. மக்களின் பேச்சு வழக்குகளை மேற்கொண்டிருப்புதால் மொழி ஆய்வுக்கும் பயன் தருகின்றன. எந்தப் பழமொழியையும் மேலெழுந்த வாரியாகப் பார்ப்போமானால் ஏதோ ஓர் அர்த்தம் தோன்றும். அந்த அர்த்தம் மட்டுமே அந்தப் பழமொழியின் கருத்தாகிவிட முடியாது. மென்மெலும் சிந்திக்கச் சிந்திக்க பல்வேறு உண்மைகள் அதிலிருந்து கிளைவிட்டுச் செல்வதை அவதானிக்க முடியும். சுருங்கக் கூற்றின் பழமொழி என்பது ஒரு விதை போன்றது. அதை நாம் ஆழமாக ஊன்றிச் சிந்தனை என்னும் நீர் வார்ப்போமானால் அது வாழ்க்கைக்கு உகந்த பயன் தரும். பல மலர்களையும் கனிகளையும் நல்கும். அந்தகு பெருமை மிக்க பழமொழிகளைப் பேணிப் பாதுகாப்பதும் பிடித்து இன்புறுவதும் எமது தலையாய கடமையாகும்.

## பூஜித்,...

விடுமுறையில் அனுப்பட்டார். ஹேமசிறி பெர்ணான்டோ பாதுகாப்புச் செயலர் பதவியில் இருந்து விலகியிருந்தார்.

இவர்கள் தாக்குதல் தொடர்பாக ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக் குழு முன்பாகவும் சாட்சியங்கள் வழங்கியிருந்தனர்.

இவர்கள் இருவர் மீதும் மேலதிக குற்றவியல் விசாரணைகளை மேற்கொள்ள சட்டமா அதிபர் பதில் பொலிஸ் மா அதிபருக்கு அனுமதி வழங்கியுள்ளது. அதனால் அவர்கள் எந்நேரமும் கைது செய்யப்படலாம் என்று உயர் மட்டப் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டித் தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ)

## பலாலி...

விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பலாலி வானூர்தித் தளம் பிராந்திய வானூர்தி நிலையமாக தரமுயர்தப்படும். இதற்கான நடவடிக்கைகள் அடுத்த மாதம் 5 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும். இரண்டு அல்லது மூன்று மாதத்துக்குள் இந்த அபிவிருத்திப் பணிகள் நிறைவு செய்யப்படும்.

பலாலி வானூர்தி நிலையத்தின் ஊடாக சிவில் வானூர்திச் சேவைகள் முன்னெடுக்கப்படும். இலங்கையில் 15 விமான நிலையங்கள் உண்டு. இவற்றில் 2 சர்வதேச விமான நிலையங்கள் ஆகும். மத்தள விமான நிலையம் தற்பொழுது செயற்பட்டு வருகின்றது.

இலங்கை சிவில் வானூர்திச் சேவை எட்டு தெற்காசிய மத்திய நாடுகளில் முதலிடத்தில் இடம்பெற்றுள்ளது. இது ஆசிய நாடுகள் மத்தியில் ஆறாவது இடத்திலும் உலக நாடுகள் மத்தியில் 19 ஆவது இடத்திலும் இடம்பெற்றுள்ளது. வானூர்தி நிலையங்களில் நவீன பாதுகாப்பு உபகரணங்கள் பயன்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது- என்றார். (எ)

தாவடி வடக்கு - சுதுமலை
அருள்மிகு பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலய
வருடாந்த அலங்கார உற்சவம் - 2019

நிகழும் மங்களகர விகாரி வருடம் ஆனித்திங்கள் 14 ஆம் நாள் இன்று(29.06.2019) சனிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு வருடாந்த அலங்கார உற்சவம் ஆரம்பமாகி (08.07.2019) திங்கட்கிழமை வரை 10 தினங்கள் நடைபெறவுள்ளன.

09 ஆம் திருவிழா 07.07.2019 ஞாயிற்றுக்கிழமை வீரபத்திரப் பெருமான் மின்சார தீபங்களினால் அலங்கரிக்கப்பட்ட காராம்பசு வாகனத்தில் பி.ப 1.00 மணியளவில் கிராமப் பிரதட்சணம் தருவார். (வழமையான வீதி). -ஆலய தர்மகர்த்தா-

## மைத்திரியின்...

நேற்றுமுன்தினம் இரவு இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது. நேற்று பொலனறுவையில் நடந்த நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் இதை உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் பொதுச் செயலருக்கு விளக்கமளித்தேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போதைப் பொருள் குற்றவாளிகள் 4 பேருக்குத் தூக்கு நிறைவேற்றப்படும் என்று நான் அறிவித்திருந்தேன். அதையடுத்து ஐக்கிய நாடுகள் பொதுச் செயலர் எனக்கு அழைப்பை ஏற்படுத்தினார். எனது அறிவிப்புத் தொடர்பில் வினவினார். நானும் அவருக்குப் பதில்களை வழங்கினேன்.

இலங்கையில் பல்கலைக்கழக மாணவர்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளனர். பாடசாலை மாணவர்களும் இலக்குவைக்கப்படுகின்றனர். இதனால் சமூகம் சீரழியும் அபாயம் உள்ளது. அதனால் போதைப்பொருள் குற்றவாளிகளுக்கு தூக்குத் தண்டனையை நிறைவேற்றும் உத்தரவில் கையொப்பமிட்டேன் என கூறினேன். என்றார். (எ)

## தூக்குத்தண்டனை...

வேற்றப்படும் நாடுகளின் குற்றங்கள் குறைத்தன என்று கூற முடியாது.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று தொடருந்து ஊழியர்களின் போராட்டம் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

அவசர காலச் சட்டம் பயுங்கரவாதத் தாக்குதல்களை விடப் பயங்கரமானதாகும். இந்தச் சட்டத்தைப் பயங்கரவாதத்துக்கு மாத்திரம் உபயோகிக்க வேண்டும். மாறாகத் தொழிற்சங்கங்களை அடக்கப் பாவிக்கக் கூடாது. தற்போது தொடருந்து ஊழியர்களின் போராட்டம் நடைபெறுகின்றது. அவர்களின் கோரிக்கைக்கு நியாயமான தீர்வைப் பெற்றுக் கொடுத்துப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

போதைப் பொருள் கடத்தல்காரர்களுக்குத் தூக்குத் தண்டனையை நிறைவேற்ற அரச தலைவர் இணக்கம் தெரிவித்துள்ளார். அதற்கு நாம் ஒருபோதும் ஆதரவளிக்க மாட்டோம். 1976ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையில் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படவில்லை. இதுபோன்ற தண்டனைகள் ஷரிஆ சட்டத்தின்படி அரபு நாடுகளில் வழங்கப்படுகின்றன. ஆனால் அங்கு குற்றங்கள் குறைந்தன என்று கூறமுடியாது.

ஆனால் தூக்குத் தண்டனையை நிறைவேற்றி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஷரிஆ சட்டத்தை நிறைவேற்ற முயற்சிக்கின்றார். தூக்குத் தண்டனையை நிறைவேற்றுவதால் எமது நாட்டில் போதைப் பொருள் வியாபாரம் குறைவடையும் என்று ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது - என்றார். (எ)

## வீட்டுள்...

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் அடர்ந்த குடிப்பரம்பல் கொண்ட சாவகச்சேரி, சங்கத்தானைப் பகுதியில் நடந்துள்ளது. அந்த வீட்டில் தாயும், மகளும், இரு முதியவர்களுமே வசிக்கின்றனர். இரவு 10.30 மணியளவில் உந்துருளிகளில் வந்த 6 பேர் மதில் பாய்ந்து உள்நுழைந்தனர். அங்கிருந்தவர்களைத் தாக்கியதுடன், வீட்டையும் அடித்துச் சேதப்படுத்தினர். அங்கிருந்த இளம் பெண் ஒருவரை இழுத்துச் செல்ல முயன்றனர். பெண் தாயைப் பிடித்தவாறு மறுக்க தாயைத் தாக்கிவிட்டுத் பெண்ணைக் கடத்திச் சென்றனர் என்று கூறப்படுகின்றது.

இந்தக் குழு சுமார் அரை மணி நேரம் அங்கு நின்றது என்று அட்டகாசம் செய்தனர் என்றும், அபயக் குரல் எழுப்பியும் அதிக குடிப் பரம்பல் கொண்ட அந்த இடத்தில் எவரும் உதவிக்கு வரவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. அந்தக் குழு அங்கிருந்த அகன்ற பின்னரே அயலவர்கள் அங்கு வந்தனர் என்றும், காயமடைந்தவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரிப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு, பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர். நேற்றுக் காலை மோப்ப நாய்கள் கொண்டு வரப்பட்டுத் தேடுதல் நடத்தப்பட்டது. சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படாத நிலையில் விசாரணைகள் தொடர்கின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(எ-9)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# உறைக்கும் உண்மை!

அபிவிருத்திக்காகஎமதுஉரிமைகளைவிட்டுக்கொடுக்க நாம் ஒருபோதும் தயாரில்லை. எப்போதும் உரிமைக்கு முதலிடம்கொடுக்கப்படவேண்டும். தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படவேண்டும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார்தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன். திருகோணமலையில் நடந்த நிகழ்வு ஒன்றில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவையும் உடன் வைத்துக்கொண்டு சம்பந்தன் இதனைக் கூறினார்.

அவர் கூறியிருப்பது சரியானதுதான். அபிவிருத்திக்காக உரிமைகளைவிட்டுக்கொடுக்க முடியாது. அந்தநிலைப்பாட்டினால்தான் தமிழர்கள் போருக்குப் பின்னரான 6 ஆண்டுகளில் மகிந்த ராஜபக்ச வடக்கு, கிழக்கில் மேற்கொண்ட அபிவிருத்திப் பணிகளை நிராகரித்து மாற்றம் ஒன்று வரும் என்கிற எதிர்பார்ப்பில் மைத்திரி – ரணில் ஆட்சியை அதிகாரத்தில் இருத்தினார்கள்.

அப்போது தமிழர்களின் உரிமைப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு கிடைக்கும் என்கிற எதிர்பார்ப்பு மிகப் பெரியளவில் இருந்தது. இரா.சம்பந்தனிடமேகூட பெருமெடுப்பில் இந்த எதிர்பார்ப்பு இருந்தது. பொங்கலுக்குள் தீர்வு வந்துவிடும், தீபாவளிக்குள் தீர்வு வந்துவிடும் என்பது போன்ற அறிக்கைகள் மூலம் அவரே அதனை வெளிப்படுத்தியுமிருந்தார்.

இப்போது ஏற்பட்டிருப்பது ஒரு வரலாற்று வாய்ப்பு, இதனைத் தவறவிடாது சிங்களத் தலைவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அவர் விரும்பினார். பயன்படுத்துவார்கள் என்றும் அவர் நம்பினார்.

உதயன் பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றில், இது ஒரு வரலாற்று வாய்ப்பு, இதனைத்தவறவிடாது பயன்படுத்திக்கொள்ளவேண்டும், அப்படி நடக்கும் என்று அறுதியாகச் சொல்லிவிட முடியாது, ஆனால் அதற்கு முயற்சிக்க வேண்டும், இந்த வரலாற்று வாய்ப்பை வீணாக்கிவிடக்கூடாது என்று தெரிவித்திருந்தார். எனவே தீர்வு காணப்படவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தாலும் காணப்படும் என்பதில் சம்பந்தனும் 100 வீதம் நம்பிக்கையாக இருந்தார் என்று சொல்லிவிட முடியாது. தீர்வைத் தந்துவிடுவார்கள் அவர் ஒரேயடியாகச் சிங்களத் தலைவர்களை நம்பினார் என்று சொல்ல முடியாது. இருப்பினும் ஒரு கணிசமான முன்னேற்றம் ஏற்படும் என்று அவரும் நம்பியிருந்தார்.

குறைந்தபட்சம் புதிய அரசமைப்பு நாடாளுமன்ற அளவிலாவது ஒப்புக்குச் சப்பாணியாகவாவது நிறைவேறும் என்று அவர் எதிர்பார்த்திருக்கலாம். ஆனால், எதுவும் நடக்கவில்லை. அவருட்பட தமிழ்த் தலைவர்கள் அனைவரும் மைத்திரி– ரணில் இருவராலும் ஏமாற்றப்பட்டுவிட்டார்கள் என்பது மிகத் தெளிவு. சம்பந்தன் எவ்வளவுதான் அழுத்தங்களை, நிர்ப்பந்தங்களைக் கொடுத்தாலும் புதிய அரசமைப்பு முயற்சிகளை இருவருமே கைவிட்டுவிட்டார்கள்.

ரணிலோ மைத்திரியோ மீண்டும் ஆட்சிக்கு வருவார்கள் என்பது எந்தவிதத்திலும் நிச்சயமில்லாத ஒரு நிலையில் புதிய அரசமைப்பு முயற்சிகள் கிணற்றில் போட்ட கல்லுத்தான் என்பதில் மாற்றமிருக்காது. அப்படிப்பட்ட ஒருநிலையிலும் தற்போதைய ஆட்சியை, மக்களாட்சியைக் காப்பாற்றுவது என்கிற பெயரால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தாங்கிப்பிடித்திருப்பதற்குப் பதிலுபகாரமாகத்தான் கிராம எழுச்சி உள்ளிட்ட அபிவிருத்தித் திட்டங்கள் வடக்கு, கிழக்குக் வழங்கப்படுகின்றன என்பதுதான் தமிழ் மக்களின் நோக்காக இருக்கிறது.

ஆக, உரிமைகளைப் பேசாதிருப்பதற்காக அல்லது அதனை ஒரு பிரச்சினையாக்கிக்கொள்ளாமல் இருப்பதற்கான கூலியாகத்தான் கொழும்பு அபிவிருத்தித் திட்டங்களையும் நிதி ஒதுக்கீடுகளையும் மேற்கொள்ளும்போது, அபிவிருத்தித் திட்டங்களுக்காக உரிமைகளைவிட்டுக்கொடுக்க முடியாது என்று சம்பந்தன் சொல்வது மேடைப் பேச்சுக்கு வேண்டுமானால் உதவலாமே தவிர இன்றைய ஆட்சியாளர்களிடம் இருந்து ஒரு சிறு உரிமையை மீட்கக்கூட உதவாது என்பதுதான் உண்மை.

# தமிழரை அரவணைத்துச் செல்லாமல் முஸ்லிம்களுக்கு மீட்சி கிடைக்காது!

சேரலாதன்

“இலங்கையின் வாழ்கின்ற முஸ்லிம் மக்கள் நன்கு சிந்தித்து செயற்படவேண்டியதொரு காலகட்டத்தை எட்டி நிற்கின்றனர். உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற பயங்கரவாதிகளின் குண்டுத்தாக்குதல்கள் அனைத்து முஸ்லிம் மக்களையும் பல்வேறு வகையிலும் பாதித்துவிட்டது. அவர்களைக் கண்டாலே அச்சப்படும் நிலையொன்று உருவாகிவிட்டது.

முஸ்லிம் மக்கள் கிழக்கு மாகாணத்தில் பெருமளவில் வாழ்ந்தாலும் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் பரந்து வாழ்கின்றனர். சனத்தொகையைப் பொறுத்தவரையில் சிங்களவர்கள் தமிழர்களுக்கு அடுத்த நிலையில் உள்ளனர். இவர்கள் தென்னிந்தியாவின் தமிழ் நாட்டிலிருந்து வந்து இலங்கையில் குடியமர்ந்ததால் தாய்மொழியாகத் தமிழையே கொண்டுள்ளனர். இதனால் இஸ்லாமியத் தமிழர்களென இவர்கள் அழைக்கப்படுவதுண்டு. மிகச் சிறந்த தமிழ் அறிஞர்கள் இவர்கள் மத்தியில் இருந்து தோன்றியதுண்டு. தமிழ்ப் பேராசிரியர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் என இவர்கள் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கினார்கள். தமிழ் அன்னைக்கு அணி சேர்த்தார்கள்.



### அரசின் அங்கமாக மாறினர் முஸ்லிம்கள்

தந்தை செல்வா போன்ற புனிதமான தமிழ் அரசியல் தலைவர்கள் வடக்குக் கிழக்கிலுள்ள முஸ்லிம் மக்களையும் அரவணைத்துச் சென்றதை அன்று பார்க்க முடிந்தது. கிழக்கில் இருந்த ஆரம்பகால முஸ்லிம் அரசியல்வாதிகள் தந்தை செல்வாவுடன் இணைந்து பணியாற்றியதையும் அன்று காண முடிந்தது. ஆனால் பின்னர் பதவிகளுக்காகவும் வரப்பிரசாதங்களைப் பெறுவதற்காகவும் முஸ்லிம் அரசியல்வாதிகள் பேரினவாதக் கட்சிகளின் பக்கமாகச் சாய ஆரம்பித்தனர். அவர்களது எதிர்பார்ப்புக்களுக்கு ஏற்றாற்போன்று எல்லாமே நடந்தேறின. ஐக்கிய தேசியக் கட்சியோ அல்லது சிறிலங்கா சுதந்திரக்கட்சியோ எந்தக் கட்சி ஆட்சி அமைத்தாலும் அமைச்சரவையில் முஸ்லிம்களுக்கு இடம்கிடைத்தது. அதைப்போன்று எதிர்க்கட்சியில் இடம்கிடைத்தது. இதன் காரணமாகவே தமிழர்களை அரவணைத்துச் செல்கின்ற மனப்பாங்கு முஸ்லிம்களிடம் குறைய ஆரம்பித்தது.

தமிழர்கள் தமது உரிமைகளுக்கான ஆயுதப்போராட்டத்தை நடத்தியபோது முஸ்லிம்கள் அதை ஆதரிக்கவில்லை. மாறாக அதற்கு எதிராகச் செயற்படவே செய்தார்கள். வடக்குக் கிழக்கில் தமிழர்களுக்கென தனியானதொரு அரசு அமையுமாயின் கிழக்கில் முஸ்லிம்களுக்கெனத் தனியானதொரு அலகு அமைய வேண்டுமென அடம்பிடித்தார்கள். போர் இடம்பெற்றபோது முஸ்லிம் ஊர்காவல் படையினர் மற்றும் முஸ்லிம் தீவிரவாதிகளால் கிழக்கில் ஏராளமான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். வடபகுதியிலிருந்து முஸ்லிம்களை வெளியேற்றியமைக்கு இதுவே முதன்மைக் காரணமாகிவிட்டது.

கிழக்கில் இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தலின்போது கூட்டமைப்பு அற்ப வாக்குகளால் ஆட்சியை அமைக்கும் சந்தர்ப்பத்தை இழந்தது. இருந்தபோதிலும் முஸ்லிம் ஒருவருக்கு முதலமைச்சர் பதவியை வழங்குவதாகவும் கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரசும் இணைந்து ஆட்சியை அமைப்பதற்கு முன்வருமாறு கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தன் கோரிக்கை விடுத்தார். ஆனால் அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதுடன் மகிந்த தரப்பு ஆட்சியை அமைப்பதற்கான வாய்ப்பும் வழங்கப்பட்டது. அதன் பின்னர் இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தலின் போதும் கூட்டமைப்பின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. பின்னர் கூட்டமைப்பின் ஆதரவுடன் முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சியை அமைத்தது.

### கல்முனை வடக்கைத் தரமுயர்த்த இடையூறாக உள்ள முஸ்லிம்கள்

தற்போது கல்முனை வடக்கில் வாழ்கின்ற தமிழர்கள் நன்மைபெறும் வகையில் அங்கு அமைந்துள்ள பிரதேச செயலகத்தை சகல அதிகாரங்களையும் கொண்டதாகத் தரமுயர்த்துவதற்கு அங்குள்ள முஸ்லிம்கள் பலத்த எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர். தரமுயர்த்தப்படுவதன் காரணமாக முஸ்லிம்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் தொடர்பாக இதுவரையில் ஒன்றுமே தெரிவிக்கப்படவில்லை. தமிழர்களுக்கு எதுவுமே கிடைத்துவிடக் கூடாதென சிங்கள இனவாதிகள் கூக்குரல் இடுவதற்கு ஒப்பானதாகவே தற்போது முஸ்லிம் இனவாதிகள் குரல்கொடுக்கின்றனர். அதாவுல்லா போன்ற கடைந்தெடுத்த இனவாதிகள் தமிழர்களுக்கு எதிராகக் கீழ்த்தரமான வார்த்தைப் பயன்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆயுதப் போராட்டத்தின் மூலமாகத் தமிழர்களால் ஓர் அங்குலத்தைக் கூடப்பிடிக்க முடியவில்லையென ஏளனமும் செய்கின்றனர். அதுமட்டுமல்லாது தமிழ்ப் போராளிகளையும் இழிவுபடுத்துகின்றனர்.

### கிழக்கில் இனவாதிகளின் குரல்கள் வலுக்கின்றன

வடக்கும், கிழக்கும் மீண்டும் இணைக்கப்பட்டால் குருதி ஆறு கிழக்கில் ஓடுமென இன்னொரு முஸ்லிம் இனவாதியான ஹிஸ்புல்லா பகிரங்கமாகவே எச்சரிக்கின்றார். உலகில் தமது இனமே பெரும்பான்மையெனவும் தம்மை எவராலும் எதையுமே செய்ய முடியாதெனவும் சூளுரைக்கின்றார். ஆட்சியாளர்கள் இவருக்கு எதிராக இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஹிஸ்புல்லா போன்றவர்களை விட்டு வைத்தால் நாட்டின் அமைதியை ஒருபோதுமே எதிர்பார்க்க முடியாது.

முஸ்லிம் தலைவர்களும், சாதாரண மக்களும் தற்போது தாம் எந்த நிலையில் உள்ளோமென்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். இனிமேலும் சிங்களவர்கள் தம்மிடம் நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவார்களென இவர்கள் எதிர்பார்க்கவும் முடியாது. இந்த நிலையில் தமிழர்களையும் பகைத்துக் கொண்டு இவர்களால் நிம்மதியாக வாழமுடியாது. அவர்களை அரவணைத்துச் செல்வதால் மட்டுமே முஸ்லிம்களுக்கு மீட்சி கிடைக்கும்.



# சட்டத்தை மதிக்கும் முல்லை. மீனவர்கள் மீதே கெடுபிடிகள்

## தீர்வு வழங்காவிடில் போராட்டம் என ரவிகரன் தெரிவிப்பு



முல்லைத்தீவு, ஜுன் 29

அரசிதழில் வெளிச்சம்பாய்ச்சி மீன் பிடித்தல், வெடிவைத்து மீன்பிடித்தல், சுருக்குவலை ஆகியன தடைசெய்யப்பட்டிருக்கும் நிலையில்கூட, அந்தத் தொழில்களில் தென்னிலங்கை மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர். இதனால், சட்டத்தைக் கடைப் பிடிக்கும் அரச அறிவிப்பைப் பின்பற்றும் முல்லைத்தீவு மாவட்ட 50 தொடக்கம் 60குடும்பங்களைச் சேர்ந்த மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கத் தவறின் தொடர்போராட்டம் நடக்கும் என்று மீனவர்கள் தெரிவித்துள்ளனர். எனவே சட்டவிரோத மீன்பிடிகளைத் தடை செய்யுங்கள்.

இவ்வாறு வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு கள்ளப்பாடு வடக்குப் பகுதியில் அமைந்துள்ள தனது மக்கள் தொடர்பகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது இடம்பெற்றுவரும் சட்டவிரோத மீன்பிடிச் செயற்பாடுகளுக்கு சரியான தீர்வு கிடைக்கத் தவறின், கடந்த ஆண்டு இடம்பெற்ற போராட்டங்களைப்போல, மீனவ சமூகங்கள் நிச்சயமாக இந்தமுறையும் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை.

எனவே சட்டவிரோத தொழில் நடவடிக்கையில் ஈடுபடுவோரைத் தடுத்து நிறுத்தி எங்களுடைய மாவட்ட மீனவர்களின் வாழ்க்கைக்கு உதவுமாறு சம்பந்தப்பட்ட திணைக்களம், கடற்படை அதிகாரிகள், அமைச்சர்கள் ஆகியோரைக் கேட்டுக்கொள்கிறேன். முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களின் வாழ்வாதாரம் பொய்த்துவிட்டது. முல்லை மீனவர்கள் பல தடவைகள் தங்களுடைய அமைப்புக்களினூடாக நடத்திய போராட்டங்கள், அமைப்புகளூடாக தெரிவித்த விடயங்கள் அனைத்தும் புறக்கணிக்கப்பட்டுள்ளன - என்றார். (து-246)

## முல்லை இனியவாழ்வு இல்ல பழைய மாணவர் கவனவீர்ப்பு



முல்லைத்தீவு, ஜுன் 29

முல்லைத்தீவு வள்ளிபுனம் இனியவாழ்வு இல்ல பழைய மாணவர்கள் பல கோரிக்கைகளை முன்வைத்து நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் செவிப்புலன், கட்புலன் அற்ற மாணவர்களைக் கற்பிற்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள இனியவாழ்வு இல்லம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்து இயங்கி வந்துள்ளது.

இதில் கல்விகற்ற 50க்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்து வெளியேறி பட்டதாரிகளாகவும், நிறுவனங்களிலும் தொழில் செய்து வருகின்றார்கள்.

இந்த நிலையில் "மாற்றுத் திறனாளிகள் என்றாலும் பிறரிடம் மண்டியிட மாட்டோம், எம்மைப் புறக்கணிக்கும் உன்னை நாம் புறக்கணிப்போம், இனிய வாழ்வு இல்ல பழைய மாணவர்களின் உரிமைக்கான உண்ணாவிரதப் போராட்டம் இது என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

நிறுவன செயற்றிட்டத்தில் வந்த யாப்பு பின்பற்றப்பட வேண்டும், நிறுவகத்தாரின் வழித்தோன்றல் பிரகாரம் நிறுவனம் ஒப்படைக்கப் பட வேண்டும், நிர்வாகச் செயற்பாடுகளில் பழைய மாணவர்களை தொடர்ச்சியாக புறக்கணிப்பதை நிறுத்த வேண்டும், பழைய மாணவர்கள் நிபந்தனை அற்ற வகையில் பொதுச்சபையில் இணைக்கப்பட வேண்டும், 11 உறுப்பினர்களைக் கொண்ட செயற்குழுவில் 5 உறுப்பினர்களாக பழைய மாணவர்கள் நிபந்தனை அற்ற வகையில் இணைக்கப்பட வேண்டும் என்பன உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (தூரி3)

## காணாமற்போயினர் என்று கூறப்பட்டவர்கள் வந்தனர்

*வழக்குக்குப் பயந்து ஒழிந்தனர் எனத் தெரிவிப்பு*

வவுனியா, ஜுன் 29

வவுனியாவில் காணாமற்போயினர் என்று கூறப்பட்ட இருவரும் முல்லைத்தீவில் தங்கியிருந்த நிலையில் பூசகர் ஒருவரால் சட்டத்தரணி ஊடாக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நெடுங்கேணி நயினாமடு பகுதியிலிருந்து கடந்த 20ஆம் திகதி நீதிமன்ற வழக்குக்குச் செல்வதாகக் கூறிச் சென்றவர்களே காணாமல் போயுள்ளன்ர் என்று அவர்களின் தந்தை வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்தநிலையில் நேற்றுமுற்பகல் 11மணியளவில் முல்லைத்தீவு, முள்ளியவளைப் பகுதியில் பூசகர் ஒருவரால் சட்டத்தரணியினூடாக வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு இருவரும் அழைத்து வரப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

19, 16 வயதுகளையுடைய இருவரும் கடந்த 7 நாள்களாக முல்லைத்தீவு முள்ளியவளைப் பகுதியிலுள்ள பூசகர் ஒருவருடன் வசித்துள்ளனர் என்றும், வழக்கு விசாரணைகளுக்குப் பயந்தே சொல்லாமல் அவ்வாறு சென்றுள்ளனர் என்றும் அவரது தந்தையார் கூறியுள்ளார். (த)

## கூட்டங்களுக்கு வர மறுக்கும் அதிகாரிகள் மீது நடவடிக்கை

*அமைச்சர் சாகல தெரிவிப்பு*

கொழும்பு, ஜுன் 29

பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் கலந்துகொள்ளாத அரச அதிகாரிகளுக்கு எதிராக எதிர்காலத்தில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அமைச்சர் சாகல ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

தெனியாய, கொட்டபொல அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் கொட்டபொல பிரதேச சபையில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இவ்வாறான கூட்டங்களில் இடம்பெறும் குறையொன்றை சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. ஒரு சில அதிகாரிகள் இவ்வாறான கூட்டங்களில் கலந்துகொள்வதில்லை என்பதை நான் அவதானித்துள்ளேன். அரச தலைவர் என்னை பிரதேச தொடர்பாடல்கள் குழு கூட்டத்தின் தலைவராக நியமித்தார். இந்தக் கூட்டத்தில் கலந்துக்கொள்ளாத அதிகாரிகளுக்கு எதிர்வரும் கூட்டங்களில் கலந்துக்கொள்ளுமாறு அறிவிப்போம். அந்த அறிவித்தலையும் பொருட்படுத்தாது கலந்துக்கொள்ளவில்லையாயின் அவர்களின் பெயர் பட்டியலை அரச தலைவரிடம் செயலாளரிடம் கையளித்து இவ்வாறான கூட்டங்களை ஏற்பாடுச் செய்வதில் எவ்வித அர்தமுமில்லை என்று தெரிவிக்கப்போகிறேன். கூட்டத்தில் கலந்துக்கொள்ளாத அதிகாரிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கையெடுக்க நேரிடும்- என்றார். (எ)

## தேசிய போசாக்கு மாத விழிப்புணர்வுப் பவனி



மன்னார், ஜுன் 29

தேசிய போசாக்கு மாதத்துக்கான விழிப்புணர்வு நடைபவனி நானாட்டானில் நேற்று நடைபெற்றது.

மன்னார் நானாட்டான் சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலக ஏற்பாட்டில் மன்னார் வேல்ட் விசனின் அனுசரனையுடன் தேசிய் போசாக்கு மாதத்துக்கான எனது உடற் திணிவுச் சுட்டியை அறிந்து கொள்வேன்' எனும் தொனிப்பொருளில் இது நடைபெற்றது. காலை 8 மணியளவில் நானாட்டான் சிவராஜா இந்து வித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்பட்ட நடைபவனி மாணவர்களுடன் நானாட்டான் சுற்றுவட்டத்தினுடாகச் சென்றது. நிகழ்வில் மன்னார் பிராந்திய சுகாதாரசேவைகள்திணைக்கள அலுவலர்கள், நானாட்டான் பிரதேசசெயலக மற்றும் பிரதேச சபை அலுவலர்கள் முருங்கன் பொலிஸ் அலுவலர்கள் பொதுமக்கள் என்று சுமார் 200 பேர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (து-213)

## போதை ஒழிப்பு வார செயற்பாடு




யாழ்ப்பாணம், ஜுன் 29

வலி. மேற்குப் பிரதேச சபையின் ஏற்பாட்டில் போதை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டுச் சங்கானை நகரில் போதைக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கை சங்கானை பேருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்று முன்னெடுக்கப்பட்டது.

பாடசாலை மாணவர்களின் தெரு நாடகம் நடத்தப்பட்டதுடன், போதைக்கு எதிரான வாசகம் அடங்கிய சின்னங்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் அரச அதிகாரிகள்,சபை உறுப்பினர்கள் ,பொது மக்கள்,பாடசாலை மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.(எ-7)





## சட்டவிரோதமாக மீன்பிடி சந்தேகத்தில் ஐவர் கைது

யாழ்ப்பாணம்.ஜீன் 29
வெடிபொருளைப் பயன்படுத்தி மீன்பிடிக்க முயன்றனர் என்ற குற்றச்சாட்டில் 5 பேரை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

ரோந்துப் பணியில் ஈடுபட்ட கடற் படையினர் கொக்கிளாய் கடல் நீர் ஏரிப் பகுதியில் வைத்து கடந்த புதன்கிழமை இவர்களை கைது செய்துள்ளதாக கடற் படை ஊடகம் தெரிவித்துள்ளது. வெடிபொருள்களுடன் மீன்பிடிக்க முயன்ற 5 பேரிடமிருந்து மீன்பிடிக்கப் பயன்படுத்தப்படும் இரண்டு டிங்கி படகுகள், 5 எலக்ட்ரிக் டெட்டனேட்டர்கள் மற்றும் 4 பாதுகாப்பு உருகி உட்படப் பலர் பொருள்கள் கைப்பற்றப்பட்டன. சந்தேக நபர்கள், கைப்பற்றப்பட்ட பொருள்கள் என்பன புல்மோட்டை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

## வடபகுதிக் கடற்பரப்புகளில் 50கி.மீ. வேகத்துடன் காற்று

*வளிமண்டலவியல் திணைக்களம் தகவல்*

யாழ்ப்பாணம், ஜீன் 29
காங்கேசன்துறை - மன்னார் உள்ளிட்ட வடக்குப் பகுதிக் கடற்பரப்புக்களில் 50 கிலோமீற்றர் வேகத்துடன்கூடிய காற்று வீசி வருகிறது என்றுவளிமண்டலவியல் திணைக்களம் நேற்று அறிக்கை வெளியிட்டது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

இரத்தினபுரி, களுத்துறை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் பெய்யக் கூடிய சிறிதளவான மழைவீழ்ச்சியைத் தவிர நாட்டின் பெரும்பாலான பகுதிகளில்சீரான வானிலை நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை, ஹம்பாந்தோட்டை மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மணித்தியாலத்துக்கு 40 50 கிலோ மீற்றர் வரையான அதிகரித்த வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசுவதற்கான சாத்தியம் காணப்படுகின்றது.

அதேவேளை கொழும்பிலிருந்து காலி ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடுவதுடன் ஹம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 3ஆயிரத்து 545 கிலோ மீற்றர் வரை காணப்படும். நாட்டைச்சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 3ஆயிரத்து 40 கிலோ மீற்றர் வரை காணப் படும்.

ஹம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 60 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடுவதுடன்அவ்வேளைகளில் கடல் கொந்தளிப்பாகவும் காணப்படும்.

நீர்கொழும்பிலிருந்து மன்னார் மற்றும் காங்கேசந்துறை ஊடாக திருகோணமலை வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடுவதுடன் அவ்வேளைகளில் கடல் ஓரளவு கொந்தளிப்பாகவும் காணப்படும்.

கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் இவ்விடயம் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகிறார்கள் - என்றுள்ளது. (ம)

# கிறிஸ்தவ வளைவுகள் பல கட்டலாம் இந்து வளைவுதான் கட்டக் கூடாதோ?

*சிவசேனை அமைப்பின் சச்சிதானந்தம் கேள்வி*

யாழ்ப்பாணம், ஜூன் 29
கிறிஸ்தவக் கோவில்கள் வீதியோரம் அலங்கார வளைவு கட்டியுள்ளனர். அதற்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் திருக்கேதீச்சர வீதி அலங்கார வளைவு கட்டத்தான் பிரச்சினையோ? என்று கேள்வியெழுப்பியுள்ளார் சிவசேனை அமைப்பின் மறவன்புலவு சச்சிதானந்தம். இந்த விடயத்தில் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது பற்றி சச்சிதானந்தம் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சமயங்களிடையே நல்லிணக்கம் வேண்டும். அன்பில் திளைக்க வேண்டும். அறம் செழிக்க வேண்டும். அருள் பெருக வேண்டும் என்று நல்ல நோக்கங்கள் கொண்டவர்கள் மாந்தை மேற்குப் பிரதேச சபையினர்.

கற்குளத்துக்குச் செல்லும் வீதிச் சந்தியில் கிறிஸ்தவ வரவேற்பு வளைவு. மடுமாதா கோயிலுக்குச் செல்லும் வீதிச் சந்தியில் கிறிஸ்தவ வரவேற்பு வளைவு. கற்குளத்திலே சைவக்கோயில்கள் உள்ளன. மடுப் பிரதேசத்திலே சைவக்கோயில்கள் உள்ளன. ஆனாலும் சந்தியில் கிறிஸ்தவ வரவேற்பு வளைவுகள்.

சைவக்கோயில்கள் கிராமங்களில் இருப்பதால் அந்த வரவேற்பு வளைவுகளுக்கு முன்பு பிள்ளையார் கோவிலையோ முருகன் கோவிலையோ எவரும் கட்டவில்லை. சைவ சமய நல்லிணக்கத்தின் எடுத்துக்காட்டுக்கள்.

### திருக்கேதீச்சரம் அருகே லூர்த்து வந்தது எப்படி?

ஆனால் தலைமன்னார் நெடுஞ்சாலையில் புராதனமான திருக்கேதீச்சரத்துக்கான சைவ வரவேற்பு வளைவுக்கு முன்னே கிறிஸ்தவ லூர்த்து மாதாவுக்குச் சிறிய கோவில்! இது என்ன கொடுமை? எப்படி முளைத்தது?.

நல்லிணக்கத்தைப் பேணும் மாந்தை மேற்குப் பிரதேச சபையின் தீர்மானம். மாந்தைச் சந்தியில் திருக்கேதீச்சரம் வீதியில் நிலையாக அழகான சைவ வரவேற்பு வளைவு கட்டுவதற்குத் திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை உரிமம் வழங்கும் தீர்மானம்.

உறுப்பினர்களாகச் சைவர்கள், கிறிஸ்தவர்கள், முகமதியர்கள் மாந்தைப் பிரதேச சபையில் உள்ளனர். ஒருமனதாகத் தீர்மானத்தை நிறைவேற்றினர். ஆனால் கத்தோலிக்கர் தலையிட்டனர். ஆயர் ஆலோசனை வழங்குகிறார். தொடர்பே இல்லாத நானாட்டான் பிரதேச சபை சைவ வரவேற்பு வளைவு கட்ட வேண்டாம் எனத் தீர்மானம் இயற்றுகிறது.

மாந்தையில்மிகச்சிறுபான்மையினராக வாழ்கின்ற கத்தோலிக்கரின் கிராம முன்னேற்றச் சங்கமும் அவ்வாறான தீர்மானத்தை இயற்றுகிறது. கிராம முன்னேற்றச் சங்கத்தின் தீர்மானத்தில் எழுதிய வரிகள் அப்பட்டமான வரலாற்றுத் தவறுகள் கொண்ட வரிகள். கற்பனைச் செய்திகளை வரலாறாக எழுதிக் கொடுத்தவர் ஆயர் இல்லத்தில் உள்ளவர்கள் போலும்!

அதைவிடக் கொடுமை என்னவென்றால் மாந்தைச் சைவ வாக்காளர்களின் வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களாகப் பதவியேற்ற இருவர் ஆயருக்குப் பக்கபலமாக நிற்கிறார்கள். திருக்கேதீச்சரம் வீதி முகப்பில் சைவ வரவேற்பு வளைவு அமையக்கூடாது என்று உறுதியாக இருக்கிறார்கள். சைவ வாக்காளரின் வாக்குகளைப் பெறும் போது பல்லிளித்துப் பெற்றீர்களே, நகைமுகம் காட்டிப் பெற்றீர்களே. இன்று அந்த வாக்காளர்களுக்குப் பச்சைத் துரோகம் செய்கிறீர்களே. மாந்தைப் பிரதேச சபையின் மதநல்லிணக்க முயற்சியை முறியடிக்கிறீர்களே.

செல்வம் அடைக்கலநாதனும் சார்ள்ஸ் நிர்மலநாதனும் திருக்கேதீச்சரம் வீதி முகப்பில் சைவ வரவேற்பு வளைவு வைக்கக்கூடாது என்று ஆயருக்குப் பக்கபலமாக மாந்தைப் பிரதேச சபைக்குச் சொல்லி இருக்கிறார்கள் என்பதை இணையத் தளங்களில் படிக்கும் பொழுது நெஞ்சு வெடிக்கிறது. மனம் துடிக்கின்றது. கொடுமையின் முகங்களைக் காண்கிறேன்.

சிங்களப் பெரும்பான்மையினர் தமிழ்ச் சிறுபான்மையினருக்குக் கொடுமை விளைவிக்கிறார்கள் என்று உலகெங்கும் கூறிய ஆயர் இராயப்புவின் வழித்தோன்றல்கள் அவரின் விதப்புரையில் நாடாளுமன்ற உறுப்பினர்களானோர் இன்று கத்தோலிக்கப் பெரும்பான்மையினரின் கொடும் பிடியை இறுக்கிச் சைவச் சிறுபான்மையினரை நசுக்குகிறார்கள் மன்னார் மாவட்டத்தில். சைவர்களே விழித்தெழுங்கள். மன்னார் மாவட்டத்தில் சைவர் ஒருவர் நாடாளுமன்றஉறுப்பினர்ஆனால்உங்களுடைய வலிமை பெருகும். உங்கள் கோயில்களுக்கு நீங்கள் வளைவுகளை அமைக்கலாம். உங்கள் வழிபாட்டிடங்களில் இயல்பாக நீங்கள் வழிபட்டு அருள் பெருக்கலாம். அன்பை வியக்கலாம் அறத்தைப்பரப்பலாம்-என்றார். (து-105)



## வருடாந்த விளையாட்டு நிகழ்வு

கொடிகாமம், ஜீன் 29
யாழ்ப்பாணம், நாவற்குழி கிழக்கு காந்தி முன்பள்ளி யின் வருடாந்த விளையாட்டு நிகழ்வு காந்தி சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ சரவணபவன், சிறப்பு விருந்தினர்களாக நாவற்குழி மகா வித்தியாலய அதிபர் சி.பவளகுமாரன், ஆசிரியரும் நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளருமான செ.பிரதாப் ஆகியோர் கலந்துகொண்டனர்.

முதன்மை விருந்தினரால் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டன. (ஐ-159)

## அரச ஊழியர்களுக்கு ஆக்கத் திறன் போட்டி

யாழ்ப்பாணம்.ஜீன் 29
அரச ஊழியர்களுக்கு இடையில் ஆக்கத் திறன் போட்டித் தொடரை நடத்துவதற்கு வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அரசசேவையில் ஈடுபட்டிருக்கும் அலுவலர்களின் ஆக்கத் திறன்களை மேம்படுத்துதல், அவர்களின் திறமைகளைப் பாராட்டுதல் மற்றும் அந்த ஆக்கங்களை வெளியிடுவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் அரச நிறுவனங்களில் கலாசார விடயங்களை மேம்படுத்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இச் செயற்பாடு நடைபெறவுள்ளது.

இதற்கமைய தமிழ் மற்றும் சிங்களம் என்னும் இரு மொழிகளில் சிறுகதை, சிறுவராக்கம், பாடலாக்கம் கவிதையாக்கம், சித்திரம் மற்றும் குறுநாடகம் போன்ற போட்டிகள் நடைபெறவுள்ளன. இதில் கலந்து கொள்ளவுள்ள அரச ஊழியர்கள் ஜீலை மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்க கூடியவாறு அமைச்சுக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டது. (ஐ-422)

## நல்லூர் ஆலய பெருந்திருவிழா துப்புரவுப் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்.ஜீன் 29
வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலய சுற்றாடல் பிரதேசத்தைத் தூய்மையாக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆலயபெருந்திருவிழாஎதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. இந்த நிலையில் துப்புரவுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக மாநகர சபை பிரதி முதல்வர் து.ஈசன் தெரிவித்துள்ளார்.

ஆலயச் சூழலில் உள்ள பிரமாணக் கட்டுக்குளமும், குளத்தை அண்டிய வெள்ள வாய்க்கால்களும் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

அதனை விட ஆலய சுற்றாடல் பிரதேசமும் துப்புரவு செய்யப்படும். வீதி ஓரத்தில் உள்ள வடி கால்வாய்கள் என்பனவும் துப்புரவு செய்யப்பட்டு கழிவுகள் அகற்றப்படும். வீதியோரங்களில் விளைந்திருக்கும் புற்கள் மற்றும் செடிகள் என்பவும் வெட்டி அகற்றப்படும்.

திருவிழாவுக்கு முன்னராக ஒரு மாத காலப் பகுதிக்குள் ஆலய சுற்றாடல்தூய்மையாக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-17)

# மாகாணப் பிரதி விவசாயப் பணிப்பாளர் தாக்கப்பட்டதற்கு நீதிகோரி கவனவீர்ப்பு

## 24 மணித்தியாலங்களில் அறிக்கையிட ஆளுநர் பணிப்பு

வவுனியா, ஜூன் 29

வவுனியா பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் அலுவலகப் பணியாளர்கள் வவுனியா உள்வட்ட வீதியில் அமைந்துள்ள அலுவலகத்தில் நேற்றுக் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.



வவுனியா மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) யாழ்ப்பாணத்தில் மற்றுமொரு அதிகாரியால் தாக்கப்பட்டுள்ளார் என்றும் அதனைக் கண்டித்து இந்தப் போராட்டத்தில் ஈடுபடுகிறோம் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

"மாகாண விவசாயப் பணிப்பாளர் தாக்கப்பட்டமையை கண்டிக்கின்றோம், மாகாணவிவசாயபணிப்பாளரே நீதி வழங்குங்கள்" என்ற கோசங்கள் எழுதப்பட்ட பதாகைகளை தாங்கியவாறு கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போதுகருத்துதெரிவித்த அலுவலர்கள், "நேற்று (நேற்றுமுன்தினம்) யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கணக்காய்வுக் கூட்டத்தின்பின்னர் இடம்பெற்ற அசம்பாவிதம் ஒன்றில் விவசாய பணிப்பாளர் காயமடைந்து யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இதற்கு நீதி பெற்றுத்தர வேண்டும்" என்று தெரிவித்தனர்.

கவனவீர்ப்புப்போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுகோரி வவுனியா மாவட்டச் செயலகத்துக்குச் சென்று மாவட்டச்செயலரிடம்மனுக்கொடுத்தனர்.

இதேவேளை, யாழ்ப்பாணமாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நேற்றுமுன்தினம் ஆளுநர் தலைமையில் கணக்காய்வுக் கூட்டம் நடந்துள்ளது. அரசவிதை உற்பத்தி நிலையத்தில் இடம்பெற்ற நிதி மோசடிகுறித்தவிடயம்அங்குபேசப்பட்டுள்ளது. அதன்பின்னரே சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது. ஓர் அதிகாரி நடந்து சென்றுகொண்டிருக்கும்போது மற்றோர் அதிகாரி வாகனக் கதவைத் திறந்தபோதுகதவு, நடந்துசென்றஅதிகாரியில் பட்டு அவர் வீழ்ந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. கதவு வேண்டுமென்றே திறக்கப்பட்டதா அல்லது ஏதேச்சையாகத்திறக்கப்பட்டபோது நடந்ததா என்பதை எந்த அதிகாரியும் உறுதிப்படுத்திக் கூறவில்லை. முழுமையானதகவல்களைத்தெரிவிக்கத் தயாராகவுமில்லை.

இந்த விடயம் பற்றி 24 மணித்தியாலங்களுக்குள் விளக்க அறிக்கை சமர்ப்பிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர்விவசாயஅமைச்சின்செயலரைப் பணித்துள்ளார்.

அவ்வாறு பணித்துள்ளேன் என்பதை ஆளுநர் ஊடகங்களுக்கு அறிக்கையாக அனுப்பியுள்ளார் எனினும், அங்கு என்னதான் நடந்ததுஎன்றவிவரம்எதையும்அளுநர் தனது ஊடக அறிக்கையில் குறிப்பிட்டிருக்கவில்லை. (த-7)

## பத்திரகாளி அம்மன் ஆலய திருவிழா

கரவெட்டி, ஜூன் 29

கரவெட்டி கிழக்கு தல்லையப்புலம் சிறி வீரபத்திர பத்திரகாளி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாஇன்றுசனிக்கிழமை கொடியேற்றத்துடன்ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை மாம்பழத்திருவிழாவும், முதலாம் திகதி திங்கட்கிழமை மதுரைத் திருவிழாவும், 2ஆம்திகதி பூந்தண்டிகைத்திருவிழாவும், 3 ஆம் திகதி திருவிளக்குப்பூஜையும், 4 ஆம் திகதி திருவூஞ்சலும், 5 ஆம் திகதி குடமுளைத் திருவிழாவும், 6ஆம்திகதி வேட்டைத்திருவிழாவும், 7ஆம்திகதி தேர்த்திருவிழாவும், 8ஆம்திகதிதீர்த்தத்திருவிழாவும் இடம்பெற்று திருகோணமலை கோணேசர்ஆலய சிவஸ்ரீ சண்முக பிரசன்னன் குருக்கள் தலைமையில் பெருந்திருவிழா கிரியைகளைலண்டனைச்சேர்ந்த சிவஸ்ரீ வை. சிவராசா குருக்களும் ஆலய முதல்வர்சிவஸ்ரீசோமதனஞ்சய குருக்களும்நடத்திவைக்கவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ)

## கலைஞர்கள் ஒன்றுகூடல்

சாவகச்சேரி, ஜூன் 29

தென்மராட்சிப் பிரதேச கலைஞர்கள் ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் நான்காம்திகதிவியாழக்கிழமை பிற்பகல்3மணிக்குசாவகச்சேரி சிவன் கோவில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்றகலாசார மண்டபத்தில்நடைபெறவுள்ளது.

பிரதேசத்தில் உள்ள கலைஞர்களை ஊக்குவிக்கும் முகமாகவும் ஒருங்கிணைக்கும் முகமாகவும் தென்மராட்சி பிரதேச கலாசாரப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வில்பிரதேசத்தில்வதியும் அனைத்து கலைஞர்களையும் கலந்து கொண்டு பிரதேச கலை இலக்கிய முயற்சிகளுக்கு ஒத்துழைப்புவழங்குமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ம-9)

## பொங்கல் உற்சவம்

சாவகச்சேரி, ஜூன் 29

யாழ்ப்பாணம் சாவகச்சேரி நகர் காளியம்பாள் ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவம் நேற்றுமுன்தினம் விளக்கு வைத்தலுடன்ஆரம்பமானது.

எதிர்வரும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிறப்புப் பூஜைகளும், பொங்கலும் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## சட்டவிரோத மீன்பிடி; 11 பேருக்குத் தண்டம்

சாவகச்சேரி, ஜூன் 29

தடைசெய்யப்பட்ட தங்கூசி வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடித்த 11 பேர் மாவட்ட கடற்றொழில் அதிகாரிகளால் பிடிக்கப்பட்டுள்ளனர். இருவர் கடலுக்குள் பாய்ந்து தப்பியோடியுள்ளனர்.

வலைகளையும் பிடித்துவரப்பட்ட மீன்களையும் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இந்தச்சம்பவம்நேற்றுமுன்தினம்மிருசுவில்கெற்பேலிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கடற்றொழில் திணைக்கள அலுவலர்கள் கெற்பேலிப் பகுதியில் திடீரென பரிசோதனையில் ஈடுபட்டனர்.

அவ்வேளையில்தடைசெய்யப்பட்டதங்கூசிவலைகளைப் பயன்படுத்தி மீன்கள் பிடித்தனரென 11 பேரைகரையில்வைத்துப்பிடித்துள்ளனர். இருவர் வலைகளை கைவிட்டு கடலுக்குள் பாய்ந்து தப்பியோடியுள்ளனர்.

இந்தப்11பேரையும்நேற்றுமுன்தினம்நீதிமன்றில் முற்படுத்தியிருந்தனர். வழக்குகள். தனித்தனியாக விசாரணக்கு எடுக்கப்பட்ட போது அனைவரும் குற்றத்தைஒப்புக்கொண்டதையடுத்துதலா2ஆயிரத்து 500 ரூபா வீதம் தண்டம் விதித்து சான்றுப் பொருள்களாக சமர்ப்பிக்கப்பட்ட தங்கூசி வலைகளை அழிக்கமாறு உத்தரவிடப்பட்டதுஎனத்தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## இரு ஆலயங்கள் சீரமைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 29

கொழும்புத்துறை பகுதியில் உள்ள இரு ஆலயங்களின் சீரமைப்புப் பணிகள் ஊரெழுச்சி வேலைத்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயம் மற்றும் இலந்தைக்குளம்விநாயகர்ஆலயம் ஆகியன சீரமைக்கப்பட்டு வருகின்றன.

ஒருஆலயத்துக்கு 5 லட்சம் ரூபா வீதம் இரு ஆலயத்துக்கும் பத்து லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டதாக யாழ்ப்பாண மாநகர பிரதி முதல்வர் து.ஈசன் தெரிவித்தார். இந்த ஆலயங்களின்வேலைத்திட்டங்களை மாநகர முதல்வர் இ. ஆனோல்ட் கடந்த வாரம் சம்பிரதாயபூர்மாகஆரம்பித்தும் வைத்தார். (ஐ-17)

## புதிய சமுர்த்திப் பயனாளிகளுக்கு வங்கிக் கணக்கில் தெளிவு வேண்டும்

யாழ்ப்பாணம், ஜூன் 29

புதிதாக இணைத்து கொள்ளப்பட்ட சமுர்த்தி பயனாளிகள் தமது வங்கி கணக்குகளைஆரம்பிப்பதற்குமுன்னர்அந்தக்கணக்குதொடர்பில் தெளிவாகத் தெரிந்திருக்கவேண்டும். இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட சமுர்த்தி பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

சமுர்த்தி பயனாளிகளாக இந்த வருடம் பலர் புதிதாக இணைந்து கொண்டுள்ளனர். அவர்களுக்கான இணைப்புச் சான்றிதழ்களும் பிரதேச செயலக ரீதியாக பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் அவர்கள் சமுர்த்தி கணக்கு ஒன்றை ஆரம்பிப்பதன் மூலம் சமுர்த்திக் கடன் சேவைகளைப்பெற்றுகொள்ள முடியும்.

மூன்று வகையான வங்கிக் கணக்குகளை அவர்கள் பேண வேண்டும். குறைந்த பட்சம் 500 ரூபா செலுத்தி பங்கு கணக்கு ஆரம்பித்தல், குறைந்த பட்சம் 100 ரூபா செலுத்தி அங்கத்தவர் கணக்கு ஒன்றை ஆரம்பித்தல் மற்றும்மாதாந்தம் குழுபணம் ஆகியவற்றை செலுத்தி சமுர்த்தி அங்கத்தவராக இணைவதன் மூலம் 5 ஆயிரம் ரூபாயில் இருந்து கடன்கள் மற்றும் சேவைகளை பெற்று கொள்ள கூடியதாக இருக்கும்.

இவ்வாறானவிடயங்களை பூர்த்தி செய்வதற்கான சமுர்த்தி வங்கிகளில் பயனாளிகளிடம் இருந்து ஒரு தொகை பணம் பெற்று கொள்ளப்படுகிறது. இந்த அறவீடுதொடர்பில் பயனாளிகள் தெளிவின்மையை கொண்டுள்ளனர். தம்மிடம் பணம் அறவிடப் படுவதாக குற்றம் சாட்டுகின்றனர். எனவே இது தொடர்பான விளக்கத்தை பயனாளிகள் தெரிந்து கொள்ள வேண்டும்.

இதேவேளைசமுர்த்திவங்கிகளில் இந்த அறவீடுகளுக்குமேலதிகமாகபணம் அறவிடப்படும் சந்தர்பங்களில் அது தொடர்பான விடயங்களைவங்கிஅலுவலர்களிடம் இருந்து பெற்று கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

## பாதுகாப்பு அமைச்சின் உப பிரிவின் தலைவராக யாழ். இராணுவ தளபதி

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ்ப்பாண மாவட்ட இராணுவ தளபதி பாதுகாப்பு அமைச்சின் உப பிரிவு ஒன்றுக்குதலைவராகநியமிக்கப்பட்டுள்ளார் என்று இராணுவஊடகபிரிவுதெரிவித்துள்ளது.

இராணுவதலைமையகத்தின் இராணுவ செயலகத்தால் பதவி உயர்வு, புதிய நியமனங்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

இவையாவும் ஜூலை முதல் நடைமுறைபடுத்தப்படும். இதில் 9 இராணுவ உயர் அதிகாரிகள் உட்பட சுமார் 10 க்கும் மேற்பட்ட மூத்த அதிகாரிகளுக்கு பதவி உயர்வு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பாதுகாப்பு படையின் படைத் தளபதி பதவியில் இருந்த மேஜர் ஜெனரல்தர்சனஹெட்டியாராச்சி பாதுகாப்பு அமைச்சின்மதமற்றும்வன்முறை தீவிரமாயலை கட்டுப்படுதல் மற்றும் பயங்கரவாதத்தை தடுத்தல் மற்றும் எதிர்ப்பதற்கான தேசிய செயற் திட்டத்தின் தலைவராக 2019 ஜீலை 17 ஆம் திகதில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேஜர் ஜெனரல் ருவாண் வனிகசூரிய 59ஆவது படைப்பிரிவின்படைத்தளபதியில் இருந்து யாழ்ப்பாண பாதுகாப்பு படையணியின் புதிய படைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

## பொதுக்கூட்டம் நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ்ப்பாணம்சங்கானைபலநோக்குகூட்டுறவுச்சங்கத்தின் பொதுக்கூட்டம்சங்கமண்டபத்தில்நாளைஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சங்கத்தலைவர்ப. கேசவதாசன்தலைமையில்இடம்பெறும் கூட்டத்தில்புதியநிர்வாகத்தெரிவும்இடம்பெறும்என்றும்அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-63)



## போதைப் பொருள் ஒழிப்பு விழிப்புணர்வுக் கருத்தமர்வு

கொடிகாமம், ஜூன் 29
போதை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தில் போதை ஒழிப்பு விழிப்பு ணர் வுக் கருத்தமர்வு அண்மையில் இடம்பெற்றது.
அதிபர் திருமதி தயாசக்தி பாலசுப்பிரமணியம் தலைமை யில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கி.ரட்சகன், சமுர்த்தி அலுவலகர் திருமதி றோ.பிறேமினி ஆகியோர் வளவாளராக கலந்து கொண்டனர்.
போதைப் பொருள் பாவிப்பதால் ஏற்படும் ஆபத்து மற்றும் அதனை தடுக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர் பாக கருத்துரைகள் வழங்கப்பட்டன. (ஐ-159)



## போதைப் பொருள் ஒழிப்பு விழிப்புணர்வுச் செயற்பாடு

கொடிகாமம், ஜூன் 29
போதை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு முல்லைத்தீவு குமு ழமுனை மகா வித்தியாலய மாணவர்களுக்கான விழிப் புணர்வுச் செயற்பாடுகள் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன.
அதிபர் க.ஜெயவீரசிங்கம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்ற நிகழ்வில் ஆசிரியர்கள் மாண வர்கள் கலந்துகொண்டனர்.
போதை பொருள் ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு கருத் துரையை செரண்டிப் சிறுவர் இல்லத்தின் மணவளக்கலை துணைப்பேராசிரியர் பு.பிரணவன் ஆற்றினார். (ஐ-159)

# போதையற்ற தேசத்தை கட்டியெழுப்புவோம்

### வவுனியாவில் விழிப்புணர்வுப் பேரணி



யாழ்ப்பாணம்,ஜூன் 29
போதை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு "போதையற்ற தேசம்"என்றதலைப்பில்விழிப் புணர்வு பேரணி ஒன்று வவு னியா குருமன்காட்டில்நேற்று இடம்பெற்றது.
வடக்கு மாகாண சமூக சேவை கள் திணைக்களமும் வவு னியா மாவட்ட சமூக சேவை அலுவலகமும் இணைந்து இந்தப் பேரணியை ஏற்பாடு செய்துள்ளன.
வவுனியா மாவட்ட சமூக சேவை அலுவலகர் எஸ்.எஸ். வாசன் தலைமையில் இடம் பெற்றநிகழ்வில் "நாம்போதைப் பொருள்களுக்கு எதிரானவர் கள் போதையற்ற தேசத்தை நேசிப்பவர்கள்" என்றவாசகம் எழுதப்பட்ட பலூன்கள் பறக்க விடப்பட்டன. அத்துடன் வாக னங்களிலும் குறித்த வாசகம் தாங்கிய ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டன
அதன் பின்னர் குருமன்காட்டு சந்தியி லிருந்து ஆரம்பமாகிய விழிப்புணர்வு பேரணி மன்னார் வீதியூடாக வைரவர் கோவில் வீதியினை சென்றடைந்து. அந்தப்பாதையூடாகவவுனியாமாவட்ட சமூக சேவை அலுவலகத்தை சென்ற டைந்தது. இதனையடுத்து வவுனியா மாவட்ட சமூக சேவை அலுவலகத்தில்






பாடசாலைமாணவர்களுக்கு'போதை யற்ற தேசம்' தொடர்பான விழிப்பு ணர்வு செயலமர்வு இடம்பெற்றது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக வவுனியா மாவட்டச் செயலர் எம் . ஹனிபா,செட்டிக்குளம்பிரதேசசெயலர் கே.சிவகரன் , வைரவப்புளியங்குளம் கிர்ராம அலுவலர் , பாடசாலை அதிபர் கள், பொது அமைப்புக்களின் பிரதி நிதி கள், ஆசிரியர்கள், மாணவர்கள்எனப் பலரும்கலந்துகொண்டனர். (ஐ-222)



## விழிப்புணர்வு கருத்தமர்வு

முல்லைத்தீவு,ஜூன் 29
போதை ஒழிப்பு வாரத்தை முன் னிட்டு புதுக்குடியிருப்பு பிரதேசத்தை சேர்ந்த முன்பள்ளி ஆசிரியர்களுக் கான விழிப்புணர்வுக் கருத்தமர்வு இடம்பெற்றது.
பிரதேசசெயலக மண்டபத்தில் நேற்று முன்தினம் செயலர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெற்றது. இதன் போது போதைப் பொருள் பாவனை மற்றும் அதில் இருந்ததான பாதுகாப்பு தொடர்பில் உளநல மருத்துவ அதி காரி வே.ஜெகரூபனால் கருத்துக் கள் முன்வைக்கப்பட்டன. (ஐ-ரி3)





## போதைப் பொருள் விழிப்புணர்வு கருத்தரங்கு

திருகோணமலை,ஜூன் 29
போதை ஒழிப்பு வாரத்தை முன் னிட்டு போதை பொருள் தொடர் பில் விழிப்புணர்வு கருத்தரங்கு திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.
பிரதேச சபை ஊழியர்களுக்கும், சனசமூக நிலைய உறுப்பினர்க ளுக்கும் இந்தக் கருத்தரங்கு இடம் பெற்றது.
போதைப் பொருளுக்கு அடிமை யாயாகாமல் இளைஞர்களை எப்படி பாதுகாக்கலாம். மற்றும் பெற்றோர்களினதும் சமுதாயத்தி னதும் கடமைகள் தொடர்பில் மருத்துவர் ஞானகுணாளன் கருத் துரை வழங்கினார். (ஐ)

# விழிப்புணர்வு வீதி நாடகம்

கொடிகாமம், ஜூன் 29
போதை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு விழிப்புணர்வு வீதி நாடகம் கரம்பைக்குறிச்சி அ.த.க பாடசாலையில் நேற்று காண்பிக்கப்பட்டது.
தென்மராட்சி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதேச செயலக அலுவலர்கள்,அபிவிருத்தி அலுவலர்கள், ஆசிரியர்கள்,மாணவர்கள் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-159)







## போதைப் பொருளுக்கு எதிரான ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டன

சாவகச்சேரி, ஜூன் 29
சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் செயற்படும் முச்சக்கரவண்டிகளுக்கு போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு ஸ்ரிக்கர்கள் நேற்று ஒட்டப்பட்டன. போதை ஒழிப்பு வாரத் தின் செயற்பாடுகளின் ஒன்றாக சாவ கச்சேரி நகரசபையினரால் முன்னெ டுக்கப்பட்டது.
இதேவேளை நேற்று வரணி இடைக் குறிச்சி அ.த.க.பாடசாலையில் விழிப் புணர்வு கருத்தமர்வும், கொடிகாமம் பேருந்து நிலையப் பகுதியில் தெரு நாடகமும் நடத்தப்பட்டன. (ஐ-9)

# வறுமையை சமுர்த்தி ஓரளவு சரிப்படுத்தும்

### முல்லை மாவட்டச் செயலர் தெரிவிப்பு



முல்லைத்தீவு, ஜூன் 29
போரால் மற்றும் பல்வேறு இயற்கை இடர்களால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை ஓரளவு மேம்படுத்தக்கூடிய வகையில் சமுர்த்திக் கொடுப்பனவு அமையும்.
உங்கள் முயற்சியால் வறுமையிலிருந்து ஓராளவு மீண்டெழுகின்றவர்களாக நீங்கள் மாறவேண்டும் என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.
ஒருதொகுதி சமுர்த்திப் பயனாளிகளுக்குச் சமுர்த்தி உரிமம் வழங்கும் நிகழ்வு புதுக்குடியிருப்பு பிரதே சத்தில் ' நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:
முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேறிய பின்னர் 2012 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட புள்ளிவிவரத்தின் படி வறுமையில் முதலாவது இடத்திலுள்ளது. 2016 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட புள்ளி விவரத்தின் படி இது இரண்டாம் இடத்துக்கு வந்துள்ளது. இது மகிழ்ச்சியைத் தந்தாலும் இன்றும் வறுமைகோட்டின்கீழ் இருக்கும் மாவட்டமாகவே காணப்படுகின்றது.
போரால் மற்றும் பல்வேறு இயற்கை இடர்களால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தக்கூடிய வகையில் சமுர்த்திக் கொடுப்பனவு ஓரளவு உங்கள் வறுமையைச் சரிப்படுத்தும். உங்கள் முயற்சியால் வறுமையில் இருந்து ஓரளவு மீண்டெழுகின்றவர்களாக மாற்றுவதாக அமையும்.
எங்கள் மாவட்டம் வறுமை இல்லாது பொருளாதார ரீதியில் முன்னேறுகின்ற சமூகமாக நாங்கள் மாறவேண்டும்.
அதற்காகச் சமூர்த்தியைப் பெற்றுக்கொண்டு உங்கள் வாழ்க்கையை முன்னேற்ற வேண்டும்.
முல்லைத்தீவின் புதுக்குடியிருப்புப் பகுதியில் அதிகமானோர் சுயதொழிலில் ஈடுபடுகின்ற தன்னார்வம் மிக்கவர்களாக உள்ளனர். அவர்கள் மேற்கொண்ட முயற்சி அதனூடான வெற்றியாளர்களான பல பேர் முன்னுதாரணமாகக் காணப்படுகின்றார்கள். ஒவ்வொருவரும் தத்தம் கால்களில் நிற்கின்ற வர்களாக மாறவேண்டும் என்றார்.
நிகழ்வில் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் ம.பிரதீபன் உரையாற்றுகையில், எப்பொழுதும் உதவிகளை நம்பியிருக்கும் மக்களாக இல்லாமல் தத்தம் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்று தெரிவித்தார். (த-ரி3)

# பசுப்பால் பதனிடும் தொழிற்சாலை வவுனியாவில் திறக்க நடவடிக்கை

### முன்னாள் அமைச்சர் சத்தியலிங்கம் தெரிவிப்பு

வவுனியா, ஜூன் 29
வவுனியா மாவட்டத்தின் மரக்காரம்பளையில் நீண்டகாலமாக மூடப்பட்டுள்ள பசுப் பால் பதனிட்டு பொதியிடும் தொழிற்சாலையை மீள இயக்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன் என்று வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார். இதன் மூலமாக உள்ளூரில் உற்பத்தியாகும் பசுப்பாலை மக்கள் முழுமையாக இங்கேயே பயன்படுத்த முடியும் என்றும் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
மரக்காரம்பளையில் பன்னாட்டு நிறுவனமொன்றின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட பதப்படுத்தப்பட்ட பால்பொதியிடும் தொழிற்சாலை பல வருடங்களாக இயங்காதுள்ளது. வவுனியா மாவட்டத்தில் நாளொன்றுக்கு 30 ஆயிரம் லீற்றர் வரையில் பால் உற்பத்தி இருக்கின்றபோதிலும் முறையான பதப்படுத்தல் மற்றும் பொதியிடும் வசதிகள் இல்லாமையால் உள்ளூரில் உற்பத்தியாகும் பசுப்பாலை மக்கள் பயன்படுத்தமுடியாத நிலைமையுள்ளது.
அத்துடன் பலமடங்கு பெறுமதியான பால்மாவையே பெருமளவான மக்கள் பயன்படுத்துகின்றனர்.
இந்த நிலையில் கடந்த மாதம் வவுனியா வடக்குக்கு வருகை தந்த முன்னாள் அரசதலைவரும் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தின் தலைவருமான சந்திரிக்கா பண்டாரநாயக்காவைச் சந்தித்து கோரிக்கை முன்வைத்திருந்தேன்.
அதற்கமைய வடக்கு அபிவிருத்தி அமைச்சின் செயலர் வி.சிவஞானசோதியிடம் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுக்கு ஏற்ப தொழிற்சாலையை மீள இயக்கவென்று தற்போது 15 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது - என்றார். (த-105)

# 54 முன்பள்ளிகளின் விளையாட்டு நிகழ்வு

கிளிநொச்சி, ஜூன் 29
பூநகரி கோட்டத்தில் உள்ள 54 முன்பள்ளிகளை இணைத்து நடத்தப்பட்ட மழலைகள் விளையாட்டு நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் 488 மாணவர்கள் பங்கு கொண்டனர். அனைவருக்கும் பரிசில்களாக கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.



முழங்காவிலில் இந்த விளையாட்டு நிகழ்வு நடைபெற்றது.
இதில் பங்குபற்றிய அனைத்து மழலைகளுக்கும் 54 ஆயிரத்து 950 ரூபா செலவில் கற்றல் உபகரணங்கள் தாயக விருட்சம் சுவிஸ் அறக்கட்டளையின் மாதாந்த நிதியில் இருந்து வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (த-222)





# தொண்டர் சேவை கலைக்கூடம் வவுனியாவில் திறந்து வைப்பு

வவுனியா, ஜூன் 29
அன்புக்கம் நட்புக்குமான வலையமைப்பின் 'தொண்டர் சேவைகள் கலைக்கூடம்' வவுனியாவில் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.
அந்த அமைப்பின் வடக்கு மாகாண இணைப்பாளர் ஜெ.கிருசாந் தலைமையில் நடந்த நிகழ்வில முதன்மை விருந்தினராக வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவின் அதிகாரி வி.எ.சம்பத் கலந்து கொண்டுதொண்டர்சேவைகள் கலைக்கூடத்தைத் திறந்து வைத்தார்.
கிராமிய இளைஞர்களை மையப்படுத்தி குடிமக்கள் கண்காணிப்பு வேலைத் திட்டங்கள் நாடு பூராவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், அனுராதபுரம், காலி, இரத்தினபுரி மற்றும் வவுனியா ஆகிய ஆறு மாவட்டங்களில் தொண்டர் சேவைகள் கலைக்கூடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞர்களுக்கு தேர்தல் தொடர்பான சட்டங்கள், தகவல் அறியும் சட்டம் பாவிக்கும் முறைமை, மனித உரிமைகள் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் போன்ற விடங்கள் தொடர்பான பயிற்சிகளை பெற்றுக் கொடுப்பதுடன் நவீன தொழில் நுட்பத்தினூடாகப் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
எதிர்காலத்தில் இளையோர் தங்கள் கிராமங்களில் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்குத் தாமாகவே முன்னின்று தீர்வு காண்பதற்கும், சமூகமட்ட பிரச்சினைகளைக் களைந்தெடுக்கவும் ஆற்றல்மிக்க ஒரு சமூதாயத்தை 'தொண்டர் சேவைகள் கலைக்கூடம்' ஊடாக உருவாக்குவதே நோக்கம் என்று அந்த அமைப்பின் இணைப்பாளர் தெரிவித்தார். வவுனியா மாவட்ட காணி இணக்க சபையின் தலைவர் இ.நவரட்ணம், வவுனியா பொலிஸ் உதவி ஆய்வாளர் பி.பி.குறுசிங்க, வவுனியா குற்றப்பிரிவுப் பொலிஸ் உதவி ஆய்வாளர் கலாவிமோதன், இணக்க சபை பயிற்சி அலுவலர் எஸ்.விமலராஜா மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டிருந்தனர். (த)

# பன்னாட்டு ஒலிம்பியாட்டுக்கு கிளிநொச்சி மாணவர் இருவர்

### தென்னாபிரிக்கா செல்ல பயணச் சீட்டு அன்பளிப்பு



ஆ.கிருஷோந்




தெ.திருக்குமரன்

கிளிநொச்சி, ஜூன் 29
கிளிநொச்சியின் இரண்டு மாணவர்கள் தேசிய கணித ஒலிம்பியாட் போட்டியில் வென்று பன்னாட்டுப் போட்டிக்கு தெரிவாகியுள்ளனர். பன்னாட்டுப் போட்டியில் பங்குகொள்ள அவர்கள் தென்னாபிரிக்காவுக்குப் பயணமாகவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் தரம் 8 இல் கற்கும் தெய்வேந்திரன் திருக்குமரன் மற்றும் செல்வன் ஆனந்த் கிருஷோந் ஆகியோரே பன்னாட்டுப் போட்டியில் கலந்துகொள்ளவுள்ளனர். தென்னாபிரிக்கா செல்லும் அவர்களுக்கு வானூர்திப் பயணச் சீட்டுக்கான கட்டணமாக ஒருவருக்கு 2 லட்சத்து 8 ஆயிரத்து 650 ரூபா வீதம் இருவருக்கும் 4 லட்சத்து 17 ஆயிரத்து 300 ரூபா வழங்கப்பட்டுள்ளது.
கிளிநொச்சியிலுள்ள 'கல்வி வளர்ச்சி அறக்கட்டளை' அமைப்பு குறித்த நிதியை மாணவர்களுக்குப் புலமை பரிசிலாக வழங்கியுள்ளது. அவர்களுக்கு வாழ்த்தும் தெரிவித்துள்ளது.
இவர்களில் செல்வன் தெய்வேந்திரன் திருக்குமரன் கடந்த வருடம் சிங்கப்பூரில் நடைபெற்ற ஒலிம்பியாட் போட்டிகளில் பங்கு கொண்டவர்.
இரண்டு மாணவர்களும் போருக்குள் பிறந்து போருக்குள் வாழ்ந்து மீள் குடியமர்வுக் காலத்தில் கல்வி கற்கத்தொடங்கி தமது அயராத முயற்சியாலும், திறமையாலும் அவர்கள் இந்த நிலையை அடைந்துள்ளனர்.
அவர்கள் மேலும் சிறந்து விளங்க வேண்டும் என்று 'கல்வி வளர்ச்சி அறக்கட்டளை' வாழ்த்துத் தெரிவித்துள்ளது. (த-222)

# உரையாடலும் திரைப்பட காட்சியும்

யாழ்ப்பாணம், ஜூன் 29
சகவாழ்வுக்கான யாழ்ப்பாண மக்களின் ஒன்றியத்தினது ஏற்பாட்டில் சகவாழ்வுதொடர்பான உரையாடலும் குறுந்திரைப் படக் காட்சியும் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளன.
யாழ்ப்பாணம் வேம்படி வீதியில் மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகில் அமைந்துள்ள ரிம்மர் மண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளன.
நிகழ்வில் சிறகுநுனி அமைப்பின் தயாரிப்பில் உருவாக்கப்பட்ட தயானி யோகநாதனின் 'முஸ்லிம்தெருவழியே' குறும்படமும், ஏ.எம்.அஷ்ஃபாக், தயானி யோகநாதன் மற்றும் கமிலா கலீல் ஆகியோரின் இயக்கத்தில்உருவான 'அபாயா' குறும்படமும், கேஷாயினி எட்மன்ட் இயக்கிய 'ஹர்த்தால்' குறும்படமும், கமிலா கலீல் இயக்கிய ' பேக் ஐடி பார்த்துக் கொண்டிருக்கிறான்' குறும்படமும்திரையிடப்படவுள்ளன.(ஐ)




### சாவகச்சேரியில்

# புகைப் பொருள்கள் நேற்று விற்பனை செய்யவில்லை

சாவகச்சேரி, ஜூன் 29
சாவகச்சேரி நகரப் பகுதி வர்த்தகர்கள்புகையிலை உற்பத்திப் பொருள்கள் விற்பனை செய்வதில்லையென அறிவித்தல் பலகைகளை காட்சிப்படுத்தி புகையிலை உற்பத்திப் பொருள்களைவிற்பனை செய்வதைத் தவித்துள்ளனர் .
போதைப் பொருள்கள் ஒழிப்பு வாரத்தையொட்டி சாவகச்சேரி நகரசபை தவிசாளரின் வேண்டுகோளின் பிரகாரம் வர்த்தகர்கள் நேற்று போதைக்கு எதிரான முன்னு தாரணச் செயற்பாட்டில் ஈடுபட்டனர். (ஐ-9)

### முல்லைத்தீவு மாவட்டத்துக்கான

## தண்ணீர் பங்கீடு தொடர்பில் ஆளுநர் சிறப்புக் கவனம்



யாழ்ப்பாணம்,ஜூன் 29
முல்லைத்தீவு மாவட்டத்துக்கான தண்ணீர்ப் பங்கீடு தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் சிறப்பு கவனம் எடுத்துள்ளதாக ஆளுநரின் ஊடாக பிரிவு தெரிவித்துள்ளது.
இது பற்றி மேலும் தெரிவிக்கபட்டதாவது:
முல்லைத்தீவு மாவட்டதுக்கான தண்ணீர்ப் பங்கீடு தொடர்பான சிறப்புக் கூட்டம் ஆளுநரின் தலைமையில் மாங்குளம் வடக்கு மாகாண நீர்ப்பாசன திணைக்களத்தின் தலைமையகத்தில் அண்மையில் நடைபெற்றது.
இதன்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் வடக்கு மாகாணத்தின் தண்ணீர்ப் பாசன திணைக்களத்தின் கீழுள்ள குளங்களிலிருந்து பொதுமக்களுக்கு தேவையான குடிதண்ணீரை பெற்றுக்கொள்வதற்கு நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் முன்வைக்கப் பட்ட கோரிக்கைகள் குறித்து முல்லைத்தீவு மாவட்ட கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும், நீர்ப்பாசன பொறியியலாளர்கள் மற்றும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பொறியியலாளர்களுக்கும் ஆளுநருக்குமிடையில் இதன்போது கலந்துரையாடப்பட்டு சாதகமான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.
தீர்மானங்கள் எதுவும் மேற்கொள்ளாது வெறுமனே கலந்துரையாடல்களுடன் முடிவுபெறும் கூட்டங்களில் கலந்துகொள்வதிலும் பார்க்க இவ்வாறு மக்களுக்கு பயனுள்ள தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடிய கூட்டங்களில் கலந்து கொள்வதற்கே விரும்புவதாக ஆளுநர் குறிப்பிட்டார்.
இதேவேளை பறங்கியாற்றிலிருந்து வீணாக வெளியேறும் தண்ணீரைத் தடுத்து வவுனிக்குளத்துக்கு திருப்புவதன் ஊடாக மாந்தை கிழக்கு மக்களின் குடிதண்ணீர்த் தேவை உடனடியாக பூர்த்திசெய்ய முடியும் என்றும் அவ்வாறு வீணாக வெளியேறும் தண்ணீரை பறங்கியாற்றின் சிறாட்டிக்குளம் பகுதியில் தற்காலிக அணையொன்றினை உருவாக்குவதன் மூலம் சேமித்து மக்களின் குடிதண்ணீர் தேவையினைபூர்த்தி செய்வதற்கு உடனடியாக நான்கு இலட்சம் ரூபாய் தேவைப்படுவதாக மாந்தை கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் ஆளுநரின் கவனத்துக்குகொண்டுவந்திருந்தார்.
உடனடியாக இது தொடர்பில் பொறியியலாளர்களுடன் கலந்துரையாடிய ஆளுநர், பொறியியலாளர் குழுவொன்றை குறித்த பகுதிக்கு அனுப்பியதுடன் அவர்களின் முன்மொழிவுடன் தற்காலிக அணையினை கட்டுவதற்கு உடனடியாக தேவையான நான்கு இலட்சம் ரூபா 25 ஆம் திகதி மாந்தை கிழக்கு பிரதேச சபை தவிசாளர் மகாலிங்கம் தயானந்தன் அவர்களிடம் வழங்கி வைத்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

## செயற்பட்டு மகிழ்வோம் திறன் வெளிப்பாட்டு நிகழ்வு

கிளிநொச்சி,ஜூன் 29
கிளிநொச்சி றோயல் முன்பள்ளி 29 ஆவது அகவையில் செயற்பட்டு மகிழ்வோம் திறன் வெளிபாட்டு நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
றோயல் முன்பள்ளி அதிபர் கனகரத்தினம் அருள்செல்வம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கரைச்சிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சுப்பிரமணியம் தர்மர்த்தினம் கலந்துகொள்ளவுள்ளார். (ஐ-222)

## கிளிநொச்சி பள்ளிவாசலில் நேற்றுச் சிறப்பு வழிபாடு

கிளிநொச்சி, ஜூன் 29
கிளிநொச்சி இராணுவத் தலைமையகம் உருவாக்கப்பட்டு 10ஆம் ஆண்டு நிறைவுற்ற நிலையில், கிளிநாச்சி நகரில் அமைந்துள்ள பள்ளிவாசலில் சிறப்பு வழிபாடு நேற்று நடைபெற்றது.
கிளிநொச்சி இராணுவ தலைமையகத்தால் இது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது. கிளிநொச்சி படைகளின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் விஜித ரவிப்பிரிய உள்ளிட்ட படை உயரதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். இதன்போது பூங்கன்றுகள் நடுகையும் இடம்பெற்றது. (கு-35)



## பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாணம்,ஜூன் 29
வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்க பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் நாளை ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி பிரதேச சபை மண்டபத்தில் முற்பகல் 9 மணிக்குத் தலைவர் ம.கஜந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.(ஐ)

## கார்த்திகை உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 29
யாழ்ப்பாணம் நீர்வேலி கந்தசுவாமி கோவிலில் இன்று சனிக்கிழமை கார்த்திகை உற்சவம் நடைபெறும்.
மாலை 4 மணிக்கு சிறப்பு அபிசேகம் பூசை வழிபாடுகள் இடம்பெற்று கார்த்திகை திருவிழா இடம்பெறும் என்று ஆலயத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ-17)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் ஆன்மிக வழிபாடு

வவுனியா, ஜூன் 29
வவுனியா தொடருந்து நிலைய வீதியிலுள்ள முதிரைத் தோட்டம் தேடி வந்த பிள்ளையார் ஆலயத்தில் நேற்று மஹாயாக வேள்வியும் ஆன்மீக பிரார்த்தனையும் நடைபெற்றன.
காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காகவும் தமிழ் மக்களுக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்க வேண்டியும் சுதந்திரமான வாழ்வு பெற வேண்டியும் மஹாயாக வேள்வியும் ஆன்மீக பிரார்த்தனையும் நடைபெற்றது. சிவசம்பஷகர் முத்து ஜெயந்திநாதக்குருக்கள் தலைமையில் இவை நடைபெற்றன.
தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடிக் கண்டறியும் குடும்பங்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் பிரார்த்தனை கூட்டு வழிபாடுகளில் ஈடுபட்டனர்.
இந்த நிகழ்வில் கொழும்பு, ஆன்மீக அருள் ஜோதி பன்னாட்டு இந்து குரு பீடாதிபதி ஸ்கந்தசாப சிவ சரவணபவ ஜயப்பதாசக் குருக்கள் அருளுரை ஆற்றினார். அந்தணர்களும் சிவாச்சாரியார்களும் கலந்து கொண்டனர்.
வவுனியா உறவுகளின் போராட்டம் நேற்று 860 ஆவது நாள்களை எட்டியுள்ளது. ஆலய நிகழ்வுகள் நிறைவடைந்த பின்னர், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் மதியம் 12.30 அளவில் ஆலயத்திலிருந்து ஊர்வலமாக அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய கொடிகளைத் தாங்கியவாறு தமது போராட்ட இடத்துக்குச் சென்றனர். (கு)





## தொண்டர் கந்தசாமிக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூன் 29
தொண்டர் என அனைவராலும் அழைக்கப்படும் மறைந்த கு.வி.கந்தசாமிக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இன்று சனிக்கிழமைபண்டத்தரிப்புகாலையடி மறுமலர்ச்சி மன்ற உள்ளரங்கில் முற்பகல் 9 மணிக்குநடைபெறும்.
கு.வி.கந்தசாமிசங்கானை பலநோக்குகூட்டுறவுச்சங்கத்தின் முன்னாள் பொது முகாமையாளரும், தமிழ்ச்சமூகத்தின்முக்கிய கூட்டுறவாளரும், சுழிபுரம் வடக்குயோகிகார்த்திகேசு அறநெறிப் பாடசாலையின் நிறுவுனருமாவார்.
இவர் கடந்த 25 ஆம் திகதி கனடா நாட்டில் காலமானார். இவ் அஞ்சலி நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ஜ)

# சிறப்புத் தேவையுடையவர்கள் வாக்களிக்க வசதி வேண்டும்

யாழ்ப்பாணம், ஜூன் 29
இலங்கையில் இடம்பெறும் தேர்தல்களில் நாமும் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருமாறுகோரி சிறப்புத் தேவையுடையோர் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களை அண்மையில் சந்தித்து வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

"இலங்கையில் தற்போது சிறப்புத் தேவையுடையவர்கள் பல ஆயிரக் கணக்கானோர் உள்ளனர். குறிப்பாக தெளிவான பார்வை, வாக்களிக்கும் நிலமை இருந்தும் நடக்க முடியா தன்மை மற்றும் வாக்களிப்பு நிலையங்களுக்குள் தனிமையில் செல்ல முடியாதவர்கள்(பிறர் உதவி தேவைப்படுவோர்) உள்ளனர்.
இவர்களுக்கு ஏற்ற வசதியை ஏற்படுத்தி வழங்குவதன் மூலம் நாட்டில் ஆயிரக் கணக்கானோர் வாக்களித்து தமது ஜனநாயக கடமையை நிறைவேற்ற முடியும்.
இதற்கென வாக்களிப்பு நிலையங்களில் உண்டியல்போன்று ஓர் வசதியை ஏற்படுத்துவதன் மூலம் முச்சக்கர வண்டிகளில் இருந்த வண்ணம் மண்டப வாசல் படிகளில் வைத்தே வாக்களிக்க முடியுமா என பரிசீலிக்க வேண்டும்" இவ்வாறு கோரிக்கை விடுத்தனர்.
குறித்த சந்திப்பில் ஆணைக்குழுவின் மூன்று உறுப்பினர்கள் உட்பட அலுவலர்களும் பங்குகொண்டிருந்தனர்.
இருப்பினும் குறித்த பேச்சுக்கள் தொடர்பில் இறுதி முடிவு ஏதும் உடனடியாக எட்டாதபோதும் மேற்படி கோரிக்கை தொடர்பில் ஆராய்ந்து முடிவினைத் தெரிவிப்பதாக பதிலளிக்கப் பட்டது. (ஜ-105)




# வெளிநாட்டு ஏதிலிகளுக்கான இராணுவ பாதுகாப்பு விலக்கல்

## பொலிஸ் பாதுகாப்புத் தொடர்கிறது

வவுனியா, ஜூன் 29
வவுனியா பூந்தோட்டம் மறுவாழ்வு நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள வெளிநாட்டு ஏதிலிகளுக்கான இராணுவ பாதுகாப்பு நேற்றுமுன்தினம் தொடக்கம் விலக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இலங்கையில் தங்கியிருந்த சுமார் ஆயிரத்து 600 ஏதிலிகள் அண்மையில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலின் பின்னர் பாதுகாப்புக்காக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.
நீர்கொழும்பு பகுதியிலிருந்து குறித்த தொகை ஏதிலிகள் வவுனியாவுக்கு அழைத்துவரப்பட்டிருந்தனர்.
வவுனியா கூட்டுறவுக்கல்லூரியில் கடந்த 10 ஆண்டுகளாக முன்னாள் போராளிகளுக்கு மறுவாழ்வளிக்கும் மறுவாழ்வு நிலையத்தின் கட்டடமொன்றில், குறித்த ஏதிலிகள் தங்கி வைக்கப்பட்டிருந்தனர்.
இவர்கள் தங்கவைக்கப்பட்ட கட்டடத்தைச் சூழ இராணுவத்தினர் அதிகளவில் குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது.
இந்தநிலையில் நேற்று முன்தினம் தொடக்கம் குறித்த பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டிருந்த இராணுவத்தினர் விலக்கப்பட்டுள்ளனர்.
தற்போது முழுமையாக பொலிஸாரின் பாதுகாப்பில் அவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.
ஏதிலிகளுக்கான வசதிகளை ஐக்கிய நாடுகளுக்கான ஏதிலிகள் அமைப்பு வழங்குகின்றது என்று தெரிவிக்கப்பட்டத். (கு)

# மக்களை வலிகளுக்குள் தள்ளாமலிருக்கவே கூட்டமைப்பு அகிம்சை ரீதியாகப் பேசுகிறது

## இடித்துரைப்புகளுக்கு இப்படிப் பதிலிறுக்கிறார் மயூரன்

வவுனியா, ஜூன் 29
உணர்ச்சி அரசியல் செய்து மீண்டும் வலிகளைச் சுமப்பவர்களாக மக்களை மாற்றாமல் இருப்பதற்காகவே கூட்டமைப்பு அகிம்சை ரீதியில் பேசிவருகிறது என்று வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் முக்கிஸ்தருமான செ.மயூரன் தெரிவித்தார்.
வவுனியாவில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, பிரதேச சபை உறுப்பினர்களாக இருந்தாலும் சரி தங்களுக்குக் கிடைக்கின்ற நிதியின் மூலமே வேலைத்திட்டங்களை செய்யலாம் என்ற நிலை இருந்தது. ஆனால் இன்று அந்தக் காலம் சிறிதளவாக மாற்றப்பட்டு அவர்களுக்குக் கிடைக்கின்ற மேலதிக நிதிகள் ஊடாக பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் நிலைக்கு இறங்கியிருக்கின்றனர்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரை காலமும் எதனையும் செய்யவில்லை. இனியும் செய்யப்போவதில்லை என்ற கருத்துக்கள் பலரது விமர்சனங்களில் காணப்படுகின்றன. ஆனால் நாங்கள் எங்களுக்குக் கிடைக்கின்ற வளங்களை எங்கள் மக்களுக்கு சரியான முறையில் சென்றடையும் வகையில் பயன்படுத்திக்கொண்டிருக்கின்றோம்.
"தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு அரசுடன் இருக்கின்றது. அரசுக்கு முண்டு கொடுத்துக்கொண்டிருக்கின்றது. அவர்கள் இப்போது உரிமை பற்றி பேசாது எப்போது உரிமை பற்றி பேசப்போகின்றனர்?." என்ற கருத்தை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் கூறியிருக்கின்றார்.

**ஆயுத வல்லமையில்லை**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் உரிமை சார்பாக தொடர்ந்தும் பேசிக்கொண்டிருகின்றது. நாங்கள் மீண்டும் ஆயுதம் ஏந்தி போராடுமளவுக்கு வல்லமை மிக்கவர்களாக இல்லை. அதனால் உரிமை ரீதியில் நாங்கள் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கின்றோம்.
வவுனியா மாவட்டத்தைப் பார்க்கின்றபோது தமிழ் மக்கள் முஸ்லிம் மக்கள் சிங்கள மக்கள் என மூவின மக்களும் இருக்கின்றனர். முஸ்லிம் மக்களின் வாக்குகளைப் பார்க்கின்றபோது அவர்களது பிரதிநிதித்துவம் என்பது ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை மாத்திரமே பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். ஆனால் வன்னியில் இரு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளார்கள். அவ்வாறெனில் அவை யாரால் அளிக்கப்பட்ட வாக்குகள்? தமிழர்களால் அளிக்கப்பட்ட வாக்குகளே.

**அரசதலைவருடன் மஸ்தான் பேசினாரா?**

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தமிழர்களின் உரிமை பற்றிப் பேசாது அரசுக்கு முண்டு கொடுத்துக்கொண்டிருப்பதாக கூறுகின்ற நீங்கள், தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்ற உறுப்பினராகி நான்கு ஆண்டுகள் பூர்த்தி அடையும் நிலையில், வாக்குகளை பெற்ற தமிழ் மக்களுக்காக என்ன விசுவாசத்துடன் அரசதலைவரிடம் பேசியிருக்கின்றீர்கள்?. கூறுங்கள் பார்ப்போம்?
அரசதலைவரின் பிரதிநிதியாக இருக்கின்ற நீங்கள் இது குறித்தும் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் அல்லது அடிப்படை வசதிகள், மலசல கூடம் தொடர்பாகவேனும் பேசியிருக்கின்றீர்களா?

**உதவுவதற்குப் பேசாது சாடுவதே குறிக்கோள்**

தெற்கில் அபிவிருத்திகள் நிறைவடைந்துள்ள நிலையில் அடிப்படை வசதிகள் கூட இல்லாமல் இருக்கின்ற வடக்குக்கு இனி அபிவிருத்திகளை செய்வோம் என்று அரசதலைவரிடம் பேசியிருக்கின்றீர்களா?

**விக்னேஸ்வரன்ள**

முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் நீதியரசராக இருக்கின்ற போது வடக்கு - கிழக்கில் உள்ள எவருக்கு அவரைத் தெரிந்திருக்கவில்லை. அவருக்கான முகவரியைக் கொடுத்து அறிமுகப்படுத்தியது தமிழ் தேசியக் கூட்டமைப்புத்தான். தற்போது கூட்டமைப்பையே நீங்கள் வெளியில் இருந்து விமர்சித்து கொண்டிருக்கின்றீர்கள்.
உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்து கொண்டிருக்கின்றீர்கள் என்பதனை மறந்துவிடாதீர்கள்.
அதுபோல் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பால் வந்து இன்று வேறு கட்சியை ஆரம்பித்துள்ள அனந்தி சசிதரனாக இருக்கட்டும், கிழக்கு மாகாணத்திலே கூட்டமைப்பை விட்டு சென்று அரசுக்கு ஆதரவு தெரிவித்த வியாளேந்திரனாக இருக்கட்டும் எங்களுக்கான முகவரி கொடுத்தவர்களை மறந்துவிட்டு வெளியில் இருந்து கூட்டமைப்பை விமர்சித்து கொண்டிருக்கின்றீர்கள்.
தமிழ் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயாவின் தலைமையிலே இன்று தீர்வை நோக்கி பயணித்துக்கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலையில் வலிகளோடு இருக்கும் தமிழ் மக்கள் மத்தியில் உணர்ச்சி அரசியல் பேசி மீண்டும் ஆயுதம் ஏந்தி இழப்புகளைச் சந்திக்கும் அரசியல் செய்ய நாங்கள் விரும்பவில்லை - என்றார். (த)



# வவுனியா இணக்க சபை உறுப்பினர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டது

வவுனியா, ஜூன் 29
வவுனியா வடக்கு இணக்க சபை உறுப்பினர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு நெடுங்கேணி பிரதேச செயலக கேட்போர் கூட்டத்தில் நேற்று நடைபெற்றது.
வவுனியா வடக்கு உதவிப் பிரதேச செயலர் த.பரமேந்திரா தலைமையில் இது நடைபெற்றது.
இணக்க சபை உறுப்பினர்கள் 16 பேருக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டது.
இந்த நிகழ்வில் வவுனியா வடக்கு கணக்காளர் வி. நாகேசபாலா, நெடுங்கேணி, கனகராஜன்குளம் பகுதிகளின் பொலிஸ் பொறுப்பதிகாரிகளும் கலந்துகொண்டனர். (த)

# கஞ்சா போதைப் பொருள் வைத்திருந்தனரென் முல்லையில் இருவர் கைது

முல்லைத்தீவு, ஜூன் 29
கஞ்சா போதைப் பொருள் பொதிகளை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் இரண்டு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
முள்ளியவளை கிச்சிராபுரம் பகுதியைச் சேர்ந்த இளைஞனை முள்ளியவளை வீதிப்போக்குவரத்து பொலிஸார் சோதனையிட்டபோது அவரிடமிருந்து கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டன.
முள்ளியவளை தண்ணீரூற்று பகுதியில் வீதிச் சோதனையின்போது சந்தேகத்தில் உந்துருளியைச் சோதனையிட்டபோது கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டன.
அதனைச்செலுத்திச்சென்ற பொலநறுவையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.
அவர் முல்லைத்தீவில் ஒப்பந்த வேலை செய்பவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
அவர் விசாரணை களின் பின்னர் நீதிவானிடம் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-ரி3)

# சாவுத் தண்டனை நிறைவேற்றம் வாக்குறுதியை மீறுகின்ற செயல்

## ஐரோப்பிய ஒன்றியம் கண்டனம்

கொழும்பு, ஜூன் 29

சாவுத் தண்டனையை நிறைவேற்றினால் அது கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் 73ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் இலங்கை வழங்கிய வாக்குறுதியை மீறும் செயலாக அமையும் என ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் சாவுத் தண்டனை வழங்கப்படுவதை தெளிவாகவும் எந்த சந்தேகமும் இன்றி எதிர்க்கின்றது. இலங்கை சாவுத் தண்டனையை நிறைவேற்றினால், அது பன்னாட்டுச்சமூகம், முதலீட்டாளர்கள் மற்றும் நாட்டினருக்கு தவறான செய்தியை கொண்டு சேர்க்கும் என ஐரோப்பிய ஒன்றியம் சார்பில் அதன் பேச்சாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாவுத் தண்டனை என்பது கொடூரமான, மனிதாபிமானமற்ற மற்றும் அவமதிக்கத்தக்க தண்டனை. போதைப் பொருள் சம்பந்தப்பட்ட குற்றங்களை ஒழிக்க சாவுத் தண்டனை நடைமுறைப் படுத்தப்படுவதாக இலங்கை அரசு கூறினாலும், அதை நிறைவேற்றுவதன் மூலம் அந்த குற்றங்களை தடுக்க முடியாது என்பது பல ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகையை வழங்கியுள்ளது. அத்துடன் பன்னாட்டு பொது மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான இணக்கப்பாடுகள் உட்பட 27 இணக்கப்பாடுகளை இலங்கை வெற்றிகரமாக மற்றும் பலன்தரக் கூடிய வகையில் செயற்படுத்துகிறதா என்பதை ஐரோப்பிய ஒன்றியம் உன்னிப்பாக அவதானித்து வருகிறது.



இலங்கையின் உள்நாட்டு மோதல் முடிவுக்கு வந்த பின்னர், இலங்கை நெகிழ்வு தன்மை, ஜனநாயகம் மற்றும் சகல தரப்பினரின் பங்கேற்புடன் கூடிய சமூகத்தை கட்டியெழுப்புவதில் பெரிய முன்னேற்றத்தை அடைந்தது. இந்த வெற்றியை தொடர்ந்தும் முன்னெடுத்துச் சென்று, பன்னாட்டுச் சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதியை இலங்கை நிறைவேற்றும் என எதிர்பார்க்கின்றோம் என்று அந்த அறிக்கையில்மேலும்குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

# சாவுத் தண்டனை சரியான தீர்வல்ல

## சம்பிக்க சாட்டை

கொழும்பு, ஜூன் 29

சாவுத்தண்டனையை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர், நாட்டிலுள்ள எந்தவொரு வழக்கு விசாரணையையும் மூன்று வருடங்களுக்குள் நிறைவு செய்வதற்கு தேவையான சட்டத்தை கொண்டுவர வேண்டும் என அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.



சாவுத் தண்டனைத் தீர்மானம் குறித்து ஊடகவியலாளர் ஒருவர் நேற்றுமுன்தினம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நாட்டிலுள்ள பிரச்சினைகளை சாவுத் தண்டனையினால் தீர்த்துவிட முடியாது. சட்டத்தை சரியாக செயற்படுத்த முடியாமல் உள்ளமைக்கே முதலில் தீர்வுகாண வேண்டியுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இந்த நாட்டில் ஒரு வழக்கை விசாரித்து தீர்ப்பு வழங்குவதற்கு குறைந்தது 17 வருடங்கள் தேவைப்படுவதாகவும், இதனால், குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு சட்டத்தில் உள்ள பயம் இல்லாமல் போயுள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார். (ம)

# வறுமைநிலை உயர்வதற்கு போதை முக்கிய காரணம்!

## மைத்திரி இப்படித் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 29

மக்கள் மத்தியில் வறுமை நிலை உயர்வடைவதற்கு போதைப்பொருள் பாவனையே முதன்மை காரணியாக காணப்படுகின்றது என அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பொலன்னறுவை பெந்திவெள மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள இரண்டு மாடி வகுப்பறைக் கட்டடத் தொகுதியை மாணவர்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பங்கேற்று கருத்து வெளியிடும் போதே அரசதலைவர் இவ்வாறு தெரிவித்தார் என்று அவரின் ஊடகப்பிரிவு அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

பிரதேச அபிவிருத்திக்காக ஒதுக்கப்படும் நிதி மக்களின் தேவைகளை இனங்கண்டு உரிய செயற்திட்டங்களுக்காக செலவிடப்படாமையினால் இன்னும் கிராமிய மட்டத்தில் தீர்க்கப்படாத பல அபிவிருத்தி பிரச்சினைகள் காணப்படுகின்றன. வழங்கப்படும் நிதியினை மக்களின் அபிவிருத்தி பிரச்சினைகளை தீர்ப்பதற்காக உரியவாறு முதலீடு செய்தல் மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பாகும். மக்களின் தேவைகள் தொடர்பாக கண்டறிந்து அவற்றை அறியத்தர வேண்டியது அரச அதிகாரிகளின் முக்கிய கடமை என்று அரச தலைவர் மேலும் தெரிவித்தார் என்றுள்ளது. (ம)

# சாவுத்தண்டனை தொடர்பான முடிவுக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டது பிரிட்டன்

கொழும்பு, ஜூன் 29

இலங்கையில் சாவுத் தண்டனையை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னெடுத்துள்ள நடவடிக்கை தொடர்பில் தாம் எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்வதாக பிரிட்டன் அறிவித்துள்ளது.

இலங்கை கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் சாவுத் தண்டனைக்கு எதிரான பன்னாட்டு நடைமுறையை ஏற்றுக் கொண்டிருந்தது. இந்த கொள்கையை மாற்றும் வகையில் சாவுத் தண்டனை வழங்க இலங்கை தீர்மானம் எடுத்துள்ளதாகவும் பிரித்தானிய அயலுறவுத்துறைச் செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.



இந்தத் தீர்மானம் பன்னாட்டு ரீதியில் இலங்கைக்கு காணப்படும் நற்பெயருக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் இந்த தீர்மானத்தை நடைமுறைப் படுத்தினால், இலங்கையுடனான உறவில் விரிசல் ஏற்படும் எனவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

# கஞ்சாவுடன் இருவர் கைதாகினர்

நான்கு இலட்சம் பெறுமதியான கேரளா கஞ்சா போதைப்பொருளுடன்மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர்நிலம்மஹர பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றுபொரலஸ்கமுவபொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேகநபர்களிடமிருந்துசுமார் இரண்டு கிலோ கேரளா கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதாகபொலிஸார்தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்டுள்ளசந்தேகநபர்கள்பாமன் கடை மற்றும் டொரிங்டன் பகுதிகளைச் சேர்ந்த 52, 57 வயதுடையவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த நபர்கள் வேறொரு நபருக்கு போதைப்பொருட்களை வழங்குவதற்கு சென்ற போதேஇவ்வாறுகைது செய்யப்பட்டுள்ளனர். (ம)

# மக்கள் சேவையை முன்னெடுப்பது அமைச்சர்களின் முக்கிய பொறுப்பு

## பொலன்றுவையில் வைத்து அரச தலைவர் சுட்டிக்காட்டல்

கொழும்பு, ஜூன் 29

தான் பிரதிநிதித்துவம் செய்யும் மாவட்ட மக்களுக்கு அநீதி இழைக்காது ஒதுக்கப்படும் நிதியினைக்கொண்டு மாவட்டத்துக்கு தேவையான அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியது அனைத்து அமைச்சர்களினதும் பொறுப்பாகும் என அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பொலன்னறுவை மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற பொலன்னறுவை மாவட்ட அபிவிருத்தி செயற்திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதேச அரசியல் தலைவர்கள், வெளிக்கள அதிகாரிகளுடன் இணைந்து கிராமிய மக்களின் பிரச்சினைகளை கண்டறிந்து செயற்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை இதன்போது சுட்டிக்காட்டிய அரச தலைவர், தனது பிரதேசத்தில் வறுமை நிலையிலுள்ள கிராமங்களை தேர்ந்தெடுத்து, மாதிரி கிராமங்களாக அவற்றை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கை எடுக்குமாறும் பணிப்புரை வழங்கியுள்ளார். அத்துடன் மக்களுக்கு நிவாரணமளிக்கும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கட்சி பேதங்களை கருத்திற் கொள்ளக்கூடாதெனவும் அரச தலைவர் வலியுறுத்தியுள்ளார்.

'எழுச்சிபெறும் பொலன்னறுவை' மாவட்ட அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தி செயற்திட்டங்களின் முன்னேற்றம் குறித்து இதன் போது விரிவாக மீளாய்வு செய்யப்பட்டுள்ளது. (ம)

பொலன்னறுவை பெந்திவெள மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள இரண்டு மாடி வகுப்பறைக் கட்டடத் தொகுதியை மாணவர்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம் பெற்றது. குறித்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தனது வருகையை முன்னிட்டு மரக்கன்றொன்றையும் நட்டார். மரக்கன்றுகளை நடுகை செய்யுமாறு மாணவர்களையும் ஊக்குவித்தார். (ம)



# தனிநபர் பயங்கரவாதத்துக்கு இனிமேலும் வாய்ப்பு உள்ளது!

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 29

ஸஹ்ரான் மற்றும் ரில்வானுக்குப் பின்னர் தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பிற்கு தலைமையேற்கவிருந்த நௌவ்பர் என்ற நபரைக் கைதுசெய்து விட்டோம். இனி மேல் இவர்களால் அணியாகச் செயற்பட எந்த வாய்ப்பும் இல்லை. ஆனால் மத ரீதியில் முன்னெடுக்கும் இந்த பயங்கரவாதம் தனி நபராலும் இடம்பெறலாம் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்தன தெரிவித்தார்.

அவசரகால சட்டத்தை மேலும் ஒருமாத காலம் நீட்டிக்கும் விவாதத்தில் நேற்றுமுன்தினம் பதிலுரை ஆற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் 9 பெண்கள் உள்ளிட்ட 105 பேர் பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அதேபோல் இந்த தாக்குதல் குறித்து எமக்கு பன்னாட்டு விசாரணைக் குழுக்கள் உதவி செய்தன. அவர்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்.

அதேபோல் ஸஹ்ரான் அணியை நாம் முழுமையாக பிடித்துள்ளோம். ஸஹ்ரானின் பின்னர் அவரது தம்பி ரில்வான் தலைமைத்துவம் எடுக்க இருந்தார். ஆனால் அவர் இறந்துவிட்டார். அவரின் பின்னர் நௌவ்பர் என்ற நபர் தம்புள்ளையில் கைது செய்யப்பட்டுள்ளார். இவர்தான் அடுத்த தலைமையை கையில் எடுக்க இருந்தவர். அதேபோல் குண்டு தயாரிக்க இருந்த நபர்கள் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டுவிட்டனர். இப்போது ஏன் அவசரகால சட்டம் என்ற கேள்வி எழும். ஆனால் விசாரணைகளை நடத்த வேண்டும். இன்றும் ஸஹ்ரானின் சகாக்கள் கைதாகி வருகின்றனர். ஒரு சிறு உதவி செய்த நபர்களையும் நாம் கைது செய்கின்றோம்.

ஆகவே இந்த தேடுதல்கள் நடத்த மேலும் ஒரு மாதகால அவகாசம் வேண்டும். அதற்காகவே சட்டத்தை நீட்டித்துள்ளோம். இன்னும் ஒரு மத காலத்தில் அவசரகால சட்டத்தை நீக்க நாம் நடவடிக்கை எடுக்க முடியும். எவ்வாறு இருப்பினும் கோவில்கள், பாடசாலைகள் மற்றும் உயர்ஸ்தானிகர் அலுவலகம் ஆகியவற்றிற்கு பாதுகாப்பு இன்னனும் உறுதிப்படுத்தட வேண்டிய தேவை உள்ளது. ஆகவே ஒரு மாதகாலமேனும் நீட்டிக்க வேண்டும் என நினைகின்றோம்.

இராணுவத் தளபதி கூறியது சரி. இந்த தாக்குதல் எப்போதும் எங்கேயும் நடக்கலாம். இது மதம் சார்ந்த பயங்கரவாதம். ஒரு தனி நபர் எந்த வகை



யிலும் எதை ஆயுதமாக பயன்படுத்தியும் தாக்குதலை நடத்த முடியும். ஆகவே இனி எப்போதும் இந்த தாக்குதல் மாதிரி ஒன்று நடக்காது என கூற முடியாது. ஆனால் ஸஹ்ரான் போன்றவர்கள் மேற்கொண்டதுபோல் ஒரு குழுவால் இதனை இன்னொருமுறை செய்ய முடியாது - என்றார். (ம)

# பாதுகாப்பு ஏற்பாட்டில் மனிதாபிமானம் மிக அவசியம்

## டக்ளஸ் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 29

அவசரகாலச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற பாதுகாப்பு ஏற்பாடுகள் அனைத்தும் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டாலும் எமது நாட்டின் நடைமுறை நிலமைகளை கருத்தில் கொண்டு மனிதாபிமான அணுகுமுறையானது கடைப்பிடிக்கப்படுவது அவசியமாகும் என்ற எமது நிலைப்பாட்டினை நான் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றேன் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நடைபெற்ற பொது மக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழான பிரேரணை தொடர்பிலான விவாதத்தில் கலந்து கொண்டபின் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்; உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற விசாரணைகளில் பல்வேறு விடயங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. எனினும் தற்போதைய தெரிவுக்குழுவின் விசாரணைகளைப் பொறுத்த வரையில் அதன் நகர்வுகள் மேலும் அரசியல் ரீதியிலான நெருக்கடி நிலைமைக்குள் நாட்டைத் தள்ளிவிடுமோ? என்ற அச்ச நிலைமைகளும் இல்லாமல் இல்லை. ஒரு பாதிப்பு தொடர்பில் ஆராய்கின்றபோது அது இன்னொரு பாதிப்பினை நோக்கிச் சென்றுவிடக்கூடாது என்பதில் மிக அவதானமாக இருக்க வேண்டிய தருணத்தில் இந்த நாடு இருந்து கொண்டிருக்கின்றது என்பதை முதலில் மனதில் கொள்ள வேண்டும் - என்றார். (ம)

# அரச தலைவர் ஆணைக்குழுவுக்கு வருமாறு கம்மன்பிலவுக்கு அழைப்பு

கொழும்பு, ஜூன் 29

நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாட் பதியுதீனுக்கு எதிராக அரச தலைவர் விசாரணை ஆணைக்குழுவில் முன் வைக்கப்பட்ட முறைப்பாடு தொடர்பில் சாட்சி வழங்குவதற்கு பிவிதுரு ஹெல உறுமய அமைப்பின் தலைவர் உதய கம்மன்பிலவுக்கு எதிர்வரும் ஜூலை 11ஆம் திகதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு



நேற்றுமுன்தினம் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம)

ஸஹ்ரானின் போதனைகளில் ஈடுபட்ட

# 51 முஸ்லிம்கள் கைதாகியுள்ளனர்

## அமைச்சர் நளின் பண்டார தகவல்

கொழும்பு, ஜூன் 29

ஸஹ்ரானின் போதனைகளில் கலந்து கொண்ட 51 முஸ்லிம்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் வெறுமனே போதனைகளில் மட்டுமே கலந்துகொண்டவர்களாக இருந்தாலும் கூட இவர்களை விடுதலை செய்ய முடியாது. அவ்வாறு விடுவதென்றாலும் இவர்களை மறுவாழ்வுக்கு உட்படுத்தியே விடுதலை செய்ய முடியும் என பிரதி அமைச்சர் நளின் பண்டார நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவசர கால சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கும் விவாதத்தில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதலைத் தொடர்ந்தே மீண்டும் அவசர காலச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டியேற்பட்டது. இது தொடர்பாக முப்படையினரும் பொலிஸாரும் முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு அவசரகால சட்டம் முக்கியமானது.

அவசரகாலச் சட்டத்தில் பொலிஸார் மட்டுமல்ல முப்படைகளும் தமது பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க முடிந்துள்ளது.

இது ஆரோக்கியமான விடயமாகும். ஏனெனில் நாட்டின் நிலமையில் பொலிஸாரால் மட்டுமே நிலமைகளைக் கட்டுப்படுத்த முடியாது.

ஆகவே அவசர காலச் சட்டத்தின் கீழ் இராணுவம் மற்றும் ஏனைய பாதுகாப்பு படைகளுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டு அவர்க



ளுக்கும் தேசிய பாதுகாப்பு விடயத்தில் பாரிய பொறுப்பைக் கொடுத்திருப்பது நல்ல விடயம் என்றே கருதுகின்றோம். இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து இதுவரையில் 2 ஆயிரத்து 389 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 236 பேர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன் 189 பேர் தடுப்புக் காவலிலும் வைக்கப்பட்டுள்ளனர். 3 பேர் அவசர கால சட்டத்தின் கீழும் 186 பேர் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 263 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அத்தோடு 94 பேர் தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனை பெற்றுக்கொள்ளப்படவுள்ளதுடன் 7 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் கைதாகியவர்களில் 79 பேர் முதன்மை சந்தேக நபர்களாவர். குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பில் 29 பேரும் பயங்கரவாத விசாரணைப் பிரிவின் பொறுப்பில் 29 பேரும் கொழும்பு குற்றவியல் விசாரணைப் பிரிவின் பொறுப்பில் 29 பேரும் இருக்கின்றனர் - என்றார். (ம)



# அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணை நிறைவேற்றம்!

கொழும்பு, ஜூன் 29

நாட்டில் மேலும் ஒரு மாத காலத்துக்கு அவசரகால சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான பிரேரணை நாடாளுமன்றத்தில் நேற்று மாலை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த அவசரகாலச் சட்டம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் கடந்த 22ஆம் திகதி அரச தலைவரால் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# தொடருந்து ஊழியர்கள் மீண்டும் புறக்கணிப்பு

தொடருந்து தொழிற்சங்கங்கள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் நேற்று நள்ளிரவு வரையில் மீண்டும் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டன. சம்பள முரண்பாடு உள்ளிட்ட சில பிரச்சினைகளுக்கு அதிகாரிகள் தீர்வு வழங்காமையின் காரணமாக போராட்டத்தில் ஈடுபடுவதாக தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

ஊழியர்களின் கோரிக்கைக்கு தீர்வு வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், அதனை முறையாக நடைமுறைப்படுத்த ஒரு மாத கால அவகாசம் தேவை என்றும் அரசு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# இந்துக்களின் பாரம்பரிய உரிமைகளை பாதுகாப்பதற்குச் சிறப்புப் பொறிமுறை

## இந்து சமய விவகார அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 29

"இலங்கையில் வாழும் இந்து மக்களின் பாரம்பரிய உரிமைகள் மற்றும் அடையாளங்களை பாதுகாப்பதற்கு இந்து சமய விவகார அமைச்சு சிறப்புப் பொறிமுறையை வகுத்துள்ளது. அத்துடன், போர்சூழ்நிலையைப் பயன்படுத்தி திட்டமிட்ட அடிப்படையில் அழிக்கப்பட்ட திருத்தலங்களுக்கும் புத்துயிர் கொடுப்பதற்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன." இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், இந்து சமய விவகார அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

உகந்தை சிறீமுருகன் ஆலயத்திலிருந்து கதிர்காம யாத்திரைக்கான பாதை திறப்பு விழா ஜனநாயக மக்கள் முன்னணி, தமிழ் முற்போக்கு கூட்டணி ஆகியவற்றின் தலைவரும், தேசிய ஒருமைப்பாடு, அரச கருக மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சருமான மனோ கணேசன் தலைமையில் நேற்றுமுன்தினம். இதன்போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வரலாற்று பிரசித்திபெற்ற கதிர்காமம் ஆடி வேல் திருவிழா ஜுலை முதல் வாரத்தில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. இதில் பங்கேற்பதற்காக காட்டுவழியாக பாத யாத்திரை மேற்கொள்ளும் அடியார்களின் முதன்மைத் திருத்தலமாக உகந்தைமலை முருகன் ஆலயமே விளங்குகின்றது.

மதம் என்பது உணர்வுடன், ஆத்மாவுடன் தொடர்புபட்ட விடயமாகும். எனவே, அதை உயரிய விடயமாக கருதி உரியவகையிலேயே அணுகவேண்டும். எனினும், கடந்த காலங்களில் கொழும்பில் குளிரூட்டப்பட்ட அறைகளில் இருந்தபடியே தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இந்து சமய விவகார அமைச்சை மனோகணேசன் பொறுப்பேற்ற பின்னரே அதிரடி மாற்றங்கள் இடம்பெற்றுவருகின்றன. களப் பயணங்கள் முன்னெடுக்கப்பட்டு, இந்துக்களின் பிரச்சினைகள் ஆராயப்படுகின்றன.

எவ்வளவுதான் வேலைப்பளுக்கள் இருந்தாலும் மக்களால் கோரிக்கை விடுக்கப்படும்பட்சத்தில் தலைவர் மனோ கணேசன் அக்கோரிக்கையை என்றும் தட்டிக்கழித்ததில்லை. அவரின் இந்த அரசியல் பாணியே மக்கள் மனங்களில் உச்சம்தொட வைத்துள்ளது எனக் கூறினால் மிகையாகாது. இன்றுகூட நேரில்வந்து யாத்திரையை வெற்றிகரமாக





ஆரம்பித்துவைத்துள்ளார்.

அதேவேளை, இலங்கையில் உள்நாட்டுப் போரின்போதுகூட இந்து மதத்துக்கு எதிராக சிலர் போர் தொடுத்தனர். போர் முடிவடைந்த சூழ்நிலையிலும் அதை அவர்கள் கைவிட்டதாக தெரியவில்லை. கடந்தகாலங்களில் இந்துக்களின் பாரம்பரிய அடையாளச் சின்னங்கள் அழிக்கப்பட்டன. திருத்தலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டன. திட்டமிட்ட அடிப்படையில் புதிது, புதிதாக கட்டடங்கள் முளைத்தன. இவ்வாறு அழிக்கப்பட்ட; இருட்டடிப்பு செய்யப்பட்ட இந்துக்களின் அடையாளங்களுக்கு அமைச்சர் மனோ கணேசன் தலைமையில் நாம் புத்துயிர் கொடுத்துவருகின்றோம். இப்பணிகளை எதிர்காலத்தில் மேலும் விரிவுபடுத்துவோம். இதற்காக சிறப்புப் பொறிமுறையொன்று நிறுவப்படும் - என்றார். (ம)

# உணவுப் பாதுகாப்புத் தொடர்பான புதிய விதிகள் 2020ஆம் ஆண்டில்

## *அமைச்சர் ராஜித திட்டவட்டம்*

கொழும்பு, ஜூன் 29

உணவுப் பாதுகாப்புத் தொடர்பான புதிய ஒழுங்குவிதிகள், 2020ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.



கொழும்பு பண்டாரநாயக்க பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அமைச்சர் ராஜித சேனாரத்ன இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'ஐக்கிய நாடுகள் பொதுச் சபை மாநாட்டில், 2018ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம், உணவு பாதுகாப்புத் தினம் அறிமுகம் செய்யப்பட்டது. வருடம்தோறும் ஜூன் மாதம் 7ஆம் திகதி இந்த நிகழ்வு இடம்பெற்றுவருகிறது. உலக உணவு தினத்தின் இவ்வருடத்துக்கான தொனிப்பொருளானது, 'உணவு பாதுகாப்பானது சகலரினதும் கடமை' என்பதாகும். தரமான உணவு நிலையான வாழ்க்கைக்கும் ஆரோக்கியத்துக்கும் அத்தியாவசியமானது. பாதுகாப்பற்ற உணவுகள் உடலுக்கு தீங்கு விளைவிக்கும். அதுமட்டுமல்லாது, பல நோய்களையும் ஏற்படுத்திவிடும். உலக சுகாதார அமைப்பு, இந்த விடயம் தொடர்பாக கணிப்புகளை முன்னெடுத்துள்ளது. அந்தக் கணிப்பீட்டுக்கமைய, பாதுகாப்பற்ற உணவுகளை உட்கொள்வதால், வருடாந்தம் மில்லியன் கணக்கானோர் உலகில் பாதிப்புகளை எதிர்நோக்குகின்றனர்.

அத்துடன், 5 வயதுக்கு குறைவான சிறுவர்கள் பல்வேறு நோய்களுக்கு ஆளாகின்றனர் என, உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. உணவு தொடர்பான நோய்களால் வருடாந்தம் ஒரு லட்சத்து 25 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழக்கின்றனர்' - என்றார். (ம)

# குடிவரவு-குடியகல்வு திணைக்கள பணிப்பாளராக ரத்நாயக்க பொறுப்பேற்றார்



கொழும்பு, ஜூன் 29

குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தின் புதிய பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ள பசன் ரத்நாயக்க நேற்றுமுன்தினம் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

2017ஆம் ஆண்டிலிருந்து குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளராகக் கடமையாற்றிய இவர், இலங்கை நிர்வாக சேவையின் மூத்த அதிகாரியாவார். இதற்கு முன்னர் மத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், மத்திய மாகாண கலாசார அலுவல்கள் பணிப்பாளர், உடுநுவர பிரதேச செயலராகவும் ஹரிஸ்பத்துவ பிரதேச செயலராகவும் பதவி வகித்துள்ளார். (ம)

# பெரமுனவின் அவசியம் எனக்கில்லை

*பிரபா கணேசன் பளார்*

கொழும்பு, ஜூன் 29

சிறீலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் (பெரமுன) இணைந்து அரசியல் பயணம் மேற்கொள்ள வேண்டிய அவசியம் எனக்கில்லை. அவர்களுக்கே நான் அவசியம் என்பதை புரிந்துகொள்ள வேண்டும் என்று ஜனநாயக மக்கள் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் பிரதி அமைச்சருமான பிரபா கணேசன் வலியுறுத்தினார்.

தற்போதைய அரசியல் நிலமைகள் குறித்து நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே பிரபா கணேசன் இதனைகுறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'தேசிய கட்சிகளின் பின்னால் அலைந்து அதனூடாக நாடாளுமன்றம் செல்ல வேண்டிய அவசியம் எனக்கில்லை. மக்கள் செல்வாக்கினாலேயே எனது அரசியல் பயணம் உருவாக்கப்பட்டது. மேலும் அரச தலைவருடன் நான் பேச்சு நடத்தியமை குறித்து பொதுமக்கள் முன்னணியினர் சிலர் என்னை விமர்சித்து வருகின்றனர். ஆகையால் அவர்களுடன் கைகோர்க்க வேண்டிய தேவை எனக்கில்லை - என்றார். (ம)

# அதிகாலையில் சபை நடவடிக்கைகள் வேண்டும்

## *கல்முனை மாநகர சபை உறுப்பினர் றபீக் தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 29

மக்களின் வரிப்பணத்தில் இயங்கும் நாம் இனியாவது மக்களுக்கு சேவை செய்ய அதிகாலை சபை நடவடிக்கையைத் தொடர முன்வர வேண்டும் என கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏ.எல். றபீக் குறிப்பிட்டார்.

கல்முனை மாநகர சபை மாதாந்த அமர்வில் ஒழுங்கு பிரச்சினை ஒன்றை எழுப்பி சபை முதல்வர் ஏ.எம் றஹீப்பிடம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சோலை வரி அறவிடுபவர்கள் என வருபவர்கள் சீருடை இன்றி நாகரிகமற்ற முறையில் வீடுகளுக்குள் நுழைகின்றார்கள். எனது வீட்டிற்கு இவ்வாறு வந்தவர்கள் மக்கள் பிரதிநிதியாகிய என்னுடன் தொடர்பாடலை சரியாக மேற்கொள்ளவில்லை. வந்தவர்களுக்குப் பணி தொடர்பிலான எந்த ஆவணமோ அடையாள அட்டையோ கிடையாது. இவ்வாறு தொடர இடமளிக்க முடியாது.

மக்களின் வரிப்பணத்தில் இயங்கும் சபை நடவடிக்கைகள் மக்களிற்கு சிரமமின்றி கடமைகளை மேற்கொள்ள வேண்டும். மக்களின் பல பிரச்சினைகள் கிடப்பில் பல உள்ளன. ஆனால் நிதிக்குழு பணிக்குழு என கதைத்து காலத்தையும் நேரத்தையும் வீண்விரயம் செய்கின்றோம். இங்கு வருவது சம்பளத்தை பெறுவதற்கு அல்ல. எம்மாலான சகல சேவைகளையும் மக்களுக்கு செய்ய வேண்டும்- என்றார். (ம)

## வேம்படி மகளிர் பரிசளிப்பு விழா இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 29
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் பரிசளிப்பு விழாவும், நிறுவுநர் நாள் நிகழ்வும் இன்று காலை 9 மணிக்கு பாடாலை முதன்மை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை பதில்அதிபர் செல்வி சுமதி கந்தசாமி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதேச செயலர் சா.சுதர்சன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (எ)

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 29
தாவடி வடக்கு, சுதுமலை 'பத்திரகாளி சமேத வீரபத்திர ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.
எதிர்வரும் 7ஆம் திகதி வீரபத்திரப் பெருமான் கிராமப் பிரதட்சணமும், 8 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அபிசேகம் ஆரம்பமாகி தொடர்ந்து பூசைகள் இடம்பெற்று நண்பகல் 12 மணியளவில் பெருமான் வீதியுலா வந்து பூசைகள் நிறைவுற்றதும், அன்னதானம் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## சிறுமியிடம்...

கூறப்படுகின்றது. இந்தச் சம்பவம் வலிகாமம் பகுதியில் நடந்துள்ளது. சந்தேகநபர் சிறுமியிடம் பாலியல் ரீதியான அங்க சேட்டைகளில் ஈடுபட்டுள்ளார். அதை வெளியே கூறினால் தந்தையைக் கொன்றுவிடுவேன் என்று சிறுமியை மிரட்டியுள்ளார் என்று கூறப்படுகின்றது. எனினும் சில நாள்களின் பின்னர் சிறுமி அது தொடர்பில் வெளியே கூறியுள்ளார். அதையடுத்து நேற்றுச் சிறுமி பொலிஸில் இது தொடர்பாக முறைப்பாடு செய்துள்ளார்.
முறைப்பாட்டை அடுத்து நேற்றுப் பிற்பகல் சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சிறுமி மருத்துவ சோதனைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும், சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-26)

## மைதானத்தில்...

உத்தரவிட்டது.
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையே 2014ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் திகதி வட்டுக்கோட்டை பிக்னல் மைதானத்தில் துடுப்பாட்டப் போட்டி நடைபெற்றது. அதில் இரு தரப்புகளுக்கு இடையே ஏற்பட்ட முறுகல்நிலைமை மோதலானது. யாழ்ப்பாணம் முதன்மை வீதியைச் சேர்ந்தவரும் சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவனுமான ஜெயரட்ணம் டினோசன் அமலன் (வயது -24) என்னும் ஒரு பிள்ளையின் தந்தை அதில் உயிரிழந்தார்.
சம்பவத்தையடுத்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் 9 பேர் வரை சரணடைந்தனர். மல்லாகம் நீதிமன்றில் சுருக்க முறையற்ற விசாரணை இடம்பெற்றது. அதனையடுத்து 6 பேருக்கு எதிராகக் கொலைக் குற்றச்சாட்டின் கீழான குற்றப் பத்திரிகை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் சட்ட மா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கின் சாட்சியப் பதிவுகள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றின் அப்போதைய நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் முன்னெடுக்கப்பட்டன.
எனினும் முதலாம் மற்றும் இரண்டாம் எதிரிகளின் சட்டத்தரணிகளால் இந்த வழக்கை இடை நிறுத்துவதற்கான மனு மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் வழக்கு விசாரணை நடத்த ஆட்சேபனை தெரிவித்தே இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டது.
அந்த மனு மீதான ஆரம்ப விசாரணையில் மனுதாரர்களின் சட்டத்தரணிகள் முன் வைத்த சமர்ப்பணத்தை முகதளவில் ஏற்றுக்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் இந்த வழக்கை விசாரிக்க இடைக்காலத் தடை உத்தரவை 2017ஆம் ஆண்டு ஓகஸ்ட் 6ஆம் திகதி வழங்கியது.
அதன்பின்னர் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் யாழ்ப்பாணத்திலிருந்து மாற்றலாகி திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதியாகப் பொறுப்பேற்றதால் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்த மனுவை 2018ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் மனுதாரர்கள் மீளப் பெற்றுக் கொண்டனர். அதையடுத்து இந்தக் கொலை வழக்கை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் சட்ட மா அதிபர் திணைக்களம் மீளத் திறந்தது.
யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு வந்தது. வழக்குத் தொடுநர் சார்பில் அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரன் மன்றில் முன்னிலையானார். முதலாவது எதிரிக்காக சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும், இரண்டாவது எதிரிக்காக கேசவன் சயந்தனும் ஏனைய எதிரிகளுக்காக சட்டத்தரணிகள் வி.திருக்குமரன், கே.சுகாஷ் ஆகியோரும் முன்னிலையானார்கள்.
குற்றவியல் வழக்கை விசாரணை செய்த நீதிபதி மாற்றலாகிச் செல்லும்போது, வழக்கின் சாட்சிகளை மீளப் பதிவு செய்யக் கோரும் சட்ட ஏற்பாடு எதிரி தரப்புக்கு உள்ளது. அதனடிப்படையில் இந்த வழக்கிலும் அனைத்து சாட்சிகளையும் அழைத்து மீள விளக்கம் நடத்த அனுமதிக்கவேண்டும் என்று எதிரிகள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் மன்றுரைத்தனர்.
அதை ஆராய்ந்த மன்று, வழக்கின் அத்தனை சாட்சிகளையும் மன்றில் முற்படுவதற்கான அழைப்புக் கட்டளையைச் சேர்ப்பிக்க பதிவாளருக்கு உத்தரவிட்டது. வழக்கை நாளாந்த விளக்கத்துக்காக செப்ரெம்பர் 5,6,9 மற்றும் 10ஆம் திகதிகளில் நியமித்து மேல் நீதிமன்றம் தவணையிட்டது. (எ-37)

## தூக்கு...

அடுத்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. நேற்று முதல் எதிர்வரும் ஒரு வாரம் நிறைவு பெறும் வரை எந்தவொரு குற்றவாளிக்கும் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட மாட்டாது என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் உறுதியளித்துள்ளார். மலிந்த செனவிரத்ன என்பவர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில், சட்டமா அதிபர், சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் வெலிக்கட சிறைச்சாலை அத்தியட்சகர் ஆகியோர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது.
தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டால் பெரும் மனித உரிமை மீறல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் இடைக்காலத் தடைவிதிக்க வேண்டும் என்றும் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.
அதேவேளை, இந்த மனு தொடர்பில் பரிசீலனை செய்வதற்கு நீதிமன்றத்துக்கு காணப்படக்கூடிய அதிகாரம் தொடர்பில் அடிப்படை எதிர்ப்பு மனு சமர்ப்பிக்கப்படும் என்று அரச பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் நெரியன் பிள்ளே மன்றுக்கு அறிவித்துள் ளார். (எ)

## ஈஸ்ரர்...

மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்பாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிசாத் பதியுதீன் நேற்று சாட்சியம் அளித்தார்.
அவரின் சாட்சியத்தையடுத்து சிறப்பு அறிவிப்பொன்றை விடுத்த தெரிவுக்குழுவின் தலைவரும் பிரதி சபாநாயகருமான ஆனந்த குமாரசிறி, பதில் பொலிஸ்மா அதிபர் நியமித்த சிறப்பு பொலிஸ் குழு - உயிர்த்த ஞாயிறு தினமன்று மேற்கொள்ளப்பட்ட தீவிரவாதத் தாக்குதல் சம்பவங்களுடன் ரிசாத் பதியுதீனுக்குத் தொடர்பில்லை என்று தெரிவுக் குழுவுக்கு அறிவித்துள்ளது என்று கூறியதுடன் அந்தக் கடிதத்தையும் வாசித்துக் காட்டினார். (எ-22)

## மைத்திரியுடைய...

நாடாளுமன்ற உறுப்பி னரும் அரச தலைவர் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.
கரவெட்டி புதுத்தோட்டம் விநாயகர் ஆலயத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
அரச தலைவரின் வேண்டுகோளின்படிதான் அரசமைப்பின் 19ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் இப்போது அவர், தனக்குத் தெரியாமல் 19ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டு விட்டது என்று பொய்யுரைக்கின்றார். அரசமைப்பின் 19ஆவது திருத்தம் ஜனநாயகத்துக்கு கிடைத்த பாரிய வெற்றி. அதை நான்.செய்து முடித்தேன் என்று பெருமை பாராட்டிய மைத்திரிபால சிறிசேன, இப்போது அது ஓர் அரசியல் சூழ்ச்சி; தனக்குத் தெரியாமல் செய்துவிட்டார்கள் என்றெல்லாம் கருத்து வெளியிட்டு வருகின்றார். அரச தலைவரின் இந்தக் கருத்து எமக்கு சவால்மிக்க விடயம் அல்ல. இது அவரின் கோமாளிக்கூத்தாகும். இந்தக் கூத்து இன்னமும் 5 மாதங்களுக்குத்தான் தொடரும். அதன்பின்னர் எல்லாம் முடிவுக்கு வரும். மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன்தான் இந்த 19ஆவது திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டது. அப்போது மகிந்த ஆதரவு அணி உறுப்பினர்கள் பலரும் இதற்கு ஆதரவு வழங்கினார்கள். இப்போது வாய்க்கு வந்த மாதிரி அரச தலைவர் பொய்யுரைக்கின்றார். எல்லாம் விரைவில் முடிவுக்கு வரும்" - என்றார். (22, 173)

## ஸஹ்ரானை...

**பதில்:** கடந்த ஒக்ரோபரில் அமைக்கப்பட்ட அரசுக்கு என்னை அழைத்தனர். ஆனால் நான் செல்லவில்லை. இதனால் என் மீது குற்றம்சாட்டினர். இந்தக் கடுமையான குற்றச்சாட்டுகள் குறித்து அவர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்யக்கூடும் என நான் எதிர்பார்த்தேன். ஆனால், அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. அதனால் நான் பொலிஸ் சென்று அவர்கள் மீது முறைப்பாடு அளித்தேன்.
**கேள்வி:** தாக்குதல் விசாரணையில் தலையிட்டதாகக் குற்றச்சாட்டுகள் உள்ளனவா? முஸ்லிம் மத விவகார அமைச்சின் ஆலோசகரின் மகன் குறித்து இராணுவத் தளபதியிடம் பேசினீர்களா?
**பதில்:** அவர் அரச பொது நிர்வாக சேவையின் முதற்தர அதிகாரி. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அமைச்சராக இருந்தபோது அவர் அந்த அமைச்சில் மேலதிக செயலாளராகவும் பணியாற்றினார். 1990ஆம் ஆண்டு முஸ்லிம்கள் வடக்கிலிருந்து விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்பட்டபோது அவர் மறுவாழ்வு இயக்குநராக இருந்தார். இனந்தெரியாத குழு ஒன்று தனது மகனை அழைத்துச் சென்றதாகக் கூறி அவர் பொலிஸில் முறைப்பாடு அளித்துள்ளார். எங்களிடம் அவர் இல்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். சிறப்பு அதிரடிப் படையும் அப்படியே கூறியுள்ளது. அவர் என் வீட்டுக்கு வந்து கண்ணீருடன் தனது மகன் எங்கே இருக்கின்றார் என்று தேடித் தர வேண்டும் என்று சொன்னார். தெகிவளை பொலிஸில் கேட்டபோதும், தெகிவளைக்குப் பொறுப்பான டி.ஐ.ஜி விக்கிரமசிங்கவிடம் கேட்டபோதும் அவர்கள் கைது செய்யவில்லை என்றும், ஆனால் தாம் தேடுவதாகவும் கூறினார்கள். நான் இராணுவத் தளபதியை அழைத்து அவரிடம் இது பற்றி வினவி அந்த நபரைப் பார்க்கச் சொன்னேன். தொடர்ந்து அந்தத் தந்தையார் கேட்டுக்கொண்டதால் இன்னொரு முறை அழைத்தபோது, இதனைக் கவனிக்கின்றேன் என்று இராணுவத் தளபதி கூறினார். மீண்டும் 28ஆம் திகதி அழைத்தபோது கைதை உறுதி செய்த அவர் கைதானவரை பொலிஸில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறினார். அதன் பிறகு நான் அழைப்பை ஏற்படுத்தவில்லை. என்ன நடந்தது என்பதை அறிய மட்டுமே நான் விரும்பினேன். மகன் இன்னும் உயிருடன் இருக்கிறாரா என்று பார்க்க தந்தை விரும்பினார். அவர் இராணுவக் காவலில் இருப்பதை அறிந்ததும் நான் திரும்ப அழைக்கவில்லை.
**கேள்வி:** தொழிலதிபர் இப்ராஹிமிடம் பொருள்களை வாங்க அழுத்தங்களை வழங்கினீர்களா?
**பதில்:** நீங்கள் அதைப் பற்றி அமைச்சின் செயலரிடம் கேட்சலாம். நான் அழுத்தங்களை வழங்கியதில்லை.
**கேள்வி:** துருக்கித் தீவிரவாதிகள் பற்றிய தகவல்களை அனுப்பியிருந்தமை உங்களுக்குத் தெரியுமா?
**பதில்:** எனக்குத் தெரியாது.
**கேள்வி:** நீங்கள் காத்தான்குடியில் அரசியல் செய்கிறீர்களா?
**பதில்:** பெரிய அரசியல் என்று எதுவும் இல்லை. எங்களிடமிருந்து ஒரு பிரதேச சபை உறுப்பினர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டார்.
**கேள்வி:** பயங்கரவாதக் குழுவின் செயற்பாடுகள் பற்றி முன்னர் உங்களுக்குத் தெரியுமா? பயங்கரவாதத் தாக்குதலுக்கு முன்னர் ஸஹ்ரானை உங்களுக்குத் தெரியுமா?
**பதில்:** உங்கள் மதம் உங்களுக்கானது. எனது மதம் எனக்கானது எனக் குர்ஆனில் சொல்லப்பப்படுகின்றது. சிலருக்குப் பிரச்சினை இருக்கலாம். நான் ஒரு அரசியல்வாதி. நான் மதப் பிரச்சினைகளில் ஈடுபடவில்லை. சஹ்ரான் ஒரு மௌலவி அல்லர். அவர் ஒரு மதத் தலைவர் அல்லர். அவர் மட்டுமே தன்னை மௌலவி என்று அழைத்தார். இந்தச் சம்பவத்துக்கு முன்னர் பயங்கரவாதக் குழுவின் செயற்பாடுகள் பற்றி எனக்குத் தெரியாது. சஹ்ரானை என் வாழ்நாளில் நான் சந்தித்ததேயில்லை.
**கேள்வி:** ஹிஸ்புல்லா உங்கள் கட்சியில் இருந்தார் அல்லவா ?
பதில்: ஹிஸ்புல்லா எங்கள் கட்சியில் சுமார் 5 ஆண்டுகளாக இருந்தார். கடந்த அரச தலைவர் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை நாங்கள் ஆதரித்தபோது, அவர் மகிந்த ராஜபக்சவை ஆதரிக்கச் சென்றார்.
**கேள்வி:** 2015இல் வாக்களித்தவர்கள் சஹ்ரானுடன் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளனர் என்பது உங்களுக்குத் தெரியுமா?
**பதில்:** தெரிவுக்குழுவில் சொல்லப்பட்டதை நான் பார்த்தேன். பின்னர் நான் அமீர் அலியிடம் கேட்டேன். அத்தகைய ஒப்பந்தம் எதிலும் கையெழுத்திடவில்லை என்று அவர் கூறினார்.
**கேள்வி:** நீங்கள் சஹ்ரானை சந்திக்கவில்லை என்று சொன்னீர்கள். ஆனால், நீங்கள் சந்தித்த படங்கள் வெளியாகினவே?
**பதில்:** அது 15 ஒக்ரோபர் 15ஆம் திகதியன்று அரபுக் கல்லூரியில் நடந்த விழாவில் எடுக்கப்பட்ட படம். அது ஸஹ்ரான் அல்ல. அது மௌலவி நிஸ்தார். தன்னைச் சஹ்ரான் என்று தொலைக்காட்சியில் காட்டினர் என்று அவர் என்னிடம் கடிதம் மூலம் தெரிவித்தார். அவர் நிட்டம்புவ பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடு அளித்துள்ளார். அவர் கொழும்பு பொலிஸ் தலைமையகத்துக்கும் சென்று முறைப்பாடு அளித்துள்ளார். இவை தவறான குற்றச்சாட்டுகள். ஸஹ்ரானை என் வாழ்நாளில் கண்டதில்லை. தாக்குதலின் பின்னரே ஸஹ்ரானின் படத்தைக் கண்டேன்.
**கேள்வி:** வில்பத்துவில் உங்களுக்குப் பல ஏக்கர் நிலம் உள்ளது என்ற குற்றச்சாட்டுக்கள் இருந்தனவா?
**பதில்:** 2015ஆம் ஆண்டுக்குப் பிறகு, வடக்கு மாகாணத்துக்கு எந்த நிலமும் வழங்கப்படவில்லை. 2009ஆம் ஆண்டு போருக்குப் பின்னர் ஒரு பணிக்குழு நிறுவப்பட்டது. இராணுவத் தளபதி, பொலிஸ்மா அதிபர், வனப் பாதுகாப்புப் பணிப்பாளர் நாயகம் மற்றும் அரச அதிபர் ஆகியோர் அதில் இருந்தனர். எங்கு மீள்குடியமர்வு செய்ய வேண்டும் என்று அந்தக் குழுவே முடிவு செய்தது. முன்னைய அரசே இதைச் செய்தது. வில்பத்து தேசிய பூங்காவுக்குள் ஒரு குடும்பத்துக்குக்கூட நிலம் வழங்கப்படவில்லை. மன்னாரிலேயே மீள்குடியேற்றம் செய்யப்பட்டது. ஆனால் வில்பத்து தேசிய பூங்காவுக்குள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை விசாரிக்க அரச தலைவர் ஒரு குழுவை நியமித்தார். வில்பத்து தேசிய பூங்காவுக்குள் மீள்குடியேற்றம் நடக்கவில்லை என்று அதன் அறிக்கை கூறுகின்றது. இந்த [illegible] வந்தபோது எந்த நிலமும் வழங்கப்படவில்லை.
என் மீது தவறான செய்திகளை வெளியிடும் ஊடக நிறுவனங்களின் தலைவர்களிடம் விசாரணையை நடத்த வேண்டும் என்று தெரிவுக்குழுவிடம் கேட்கிறேன். 55 ஏக்கர் நிலப்பரப்பு மாத்திரமே எனக்கு உள்ளது. 8 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு கிடையாது. அவ்வாறு காணி இருக்குமாயின் 55 ஏக்கரைத் தவிர ஏனைய காணிகளை அரசுடமையாக்க நடவடிக்கை எடுக்கவும். (எ-22)




வெடி குண்டு மிரட்டல்

## இந்தியாவின் வானூர்தி லண்டனில் தரையிறக்கம்

லண்டன்,ஜூன் 29
இந்தியாவின் மும்பையிலிருந்து அமெரிக்காவில் உள்ள நெவார்க் நகர் நோக்கிப் பயணித்த எயார் இந்தியா வானூர்திச் சேவை நிறுவனத்துக்குச் சொந்தமான 'ஏஐ 191' ரக வானூர்திக்கு விடுக்கப்பட்ட வெடி குண்டு மிரட்டலால் அது தனது பயணப் பாதையின் இடைநடுவே தரையிறங்கியது. இது குறித்த மேலதிக தகவல்கள் வெளிவராத நிலையில், விசாரணை நடந்து வருகிறது.

லண்டனின் ஸ்டன்ஸ்டெட் வனூர்தி நிலையத்தில் வானூர்திகள் நிறுத்தப்படாத பகுதியில் அது தரையிறக்கப்பட்டது. குறித்த வானூர்தி தரையிறங்கிய சமயத்தில் பிரிட்டனின் றோயல் எயார் போர்ஸ் வானூர்திகள் அதற்குப் பாதுகாப்பு அளித்தன என்று பிரிட்டன் பாதுகாப்புத்துறை அமைச்சகம் கூறியது. வெடிகுண்டு மிரட்டலால் குறித்த வானூர்தி தரையிறக்கப்பட்டது எனத் தமது கீச்சகப் பக்கத்தில் பதிவிட்ட 'எயார் இந்தியா' நிறுவனம் பின்னர் அந்தப் பதிவை நீக்கிப் பாதுகாப்பு அச்சுறுத்தலால் தரையிறக்கப்பட்டதாகப் பதிவிட்டது.



## மாற்றமடைகிறதா ஜி20?

ஒசாகா, ஜூன் 29
ஜப்பானின் ஒசாகா நகரில் நடக்கின்ற 2019ஆம் ஆண்டுக்கான ஜி20 மகாநாட்டில் ஐரோப்பிய ஒன்றியம் உட்பட 20 நாடுகள் பங்கு பற்றுகின்றன. அத்துடன் சிறப்பு விருந்தினராக இந்த முறை ஸ்பெய்ன் பங்குகொள்வதாகப் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

1999 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஜி20 மகாநாட்டில் ஆரம்பத்தில் உறுப்பு நாடுகளின் நிதி அமைச்சர்களும், அந்தந்த நாடுகளின் மத்திய வங்கி ஆளுநர்களுமே கலந்துகொண்டனர். ஆயினும் 2008 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அந்த முறைமாறி அரச தலைவர்களும், தலைமை அமைச்சர்களும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர். ஆரம்பத்தில் இந்த மாநாட்டில் பொருளாதாரம், நிதி நிர்வாகம் போன்ற விடயங்களே விவாதிக்கப்பட்டன.

தற்போது அதற்கு வெளியில்சென்று பல அரசியல் விவகாரங்கள் விவாதிக்கப்படுகின்றன. பொருளாதாரம், உலக வர்த்தகம் குறித்த விவாதங்கள், அலசல்கள், பேச்சுக்களுடன் ஆரம்பித்த குறித்த அமைப்பின் போக்கு தற்போது மாற்றமடைந்துவருவதாக அரசியலவதானிகள் கருத்துரைக்கின்றனர்.

மடகஸ்காரில் துயரம்

# சோகமயமானது சுதந்திர நாள் நெரிசலில் சிக்கி 16 பேர் சாவு

அன்ரனநரிவோ, ஜூன் 29
ஆபிரிக்காக் கண்டத்தின் தென்கிழக்கே இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள மடகாஸ்கரில் கடந்த புதன் கிழமையன்று நடந்த 59ஆவது ஆண்டு சுதந்திர நாள் கொண்டாட்டத்தின்போது ஏற்பட்ட நெரிசலால் 16பேர் சாவடைந்தனர். இது அங்கு பெரும் சோகத்தை ஏற்படுத்தியது.



இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது:
சுதந்திர நாளை முன்னிட்டு மடகஸ்காரின் தலைநகர் அன்ரனநரிவோவில் உள்ள மைதானத்தில் இராணுவத்தினரின் அணிவகுப்பு உள்ளிட்ட பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இதைக் கண்டு ரசிக்க ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டனர். மைதானத்தில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. அவர்கள் ஆரவாரத்துடன் நிகழ்ச்சிகளைப் பார்த்து ரசித்தனர். நிகழ்ச்சிகள் முடிந்த பிறகு மைதானத்தின் வெளியேறும் வாயில்கள் வழியாக மக்கள் கூட்டம் கூட்டமாக மைதானத்தை விட்டு வெளியேறினர்.

இதனால், மைதானத்தின் வெளியே நெரிசல் ஏற்பட்டது. மைதானத்துக்குள் மேலும் அதிகளவு மக்கள் இருந்த நிலையில், அவர்களும் ஒரே நேரத்தில் வெளியேறினால் கூட்ட நெரிசல் அதிகமாகும் என்பதால், மைதானத்தின் நுழைவாயில்களை அடைத்து மக்களை வெளியே செல்லவிடாமல் தடுத்த பொலிஸார் ஓரிரு நுழைவாயில்களை மட்டும் திறந்து, மக்களை ஒவ்வொரு குழுவாகப் பிரித்து வெளியே அனுப்பினர். இதன்போது மக்கள் ஒருவரை ஒருவர் முண்டியடித்துக்கொண்டு வெளியேற முயன்றனர்.

நுழைவாயில்களை நோக்கி மக்கள் கூட்டம் கூட்டமாகப் படையெடுத்ததால் நெரிசல் ஏற்பட்டது. இதில் பலர் நிலைகுலைந்து கீழே விழுந்தனர். அவர்கள் மீது கூட்டத்தினர் ஏறி மிதித்துச் சென்றனர். கூட்ட நெரிசலில் சிக்கி 16 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாகச் சாவடைந்தனர்.

## தரையின் கீழ் நீர்நிலைகள் கிரீன்லாந்தில் கண்டுபிடிப்பு

லண்டன்,ஜூன் 29
பூமியின் வடதுருவத்தில் அமைந்துள்ள, வருடம் முழுதும் பனி படர்ந்த தரையைக் கொண்டிருக்கின்ற தீவான கிரீன்லாந்தில் அங்கு படர்ந்துள்ள பனிப் படலத்துக்குக் கீழே 50க்கும் மேற்பட்ட ஏரிகள் இருப்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்தனர். இதற்கு முன்னதாக நான்கு ஏரிகள் மட்டுமே அங்கு கண்டுபிடிக்கப்பட்டிருந்தன. இப்போது அந்தத் தொகை அதிகரித்திருக்கிறது. பனிப் படலத்துக்குக் கீழே இருக்கின்ற குறித்த நீர் நிலைகள், தரை முழுதுமான பனிப்பரவலால் தன்மை மாறிப் பனியை ஒத்த திண்ம நிலைக்கு மாறியிருப்பது கண்டறியப்பட்டது.



இருப்பினும் மேல் தட்டிலுள்ள உறைபனித் தரைக்கும் அதன் கீழ் உறைந்திருக்கின்ற குறித்த நீர் நிலைகளுக்கும் இடையே அடர்த்தி வேறுபாடு இருப்பது ஆய்வுகளில் கண்டறியப்பட்டது. பூமியின் தென் துருவப் பகுதியான அந்தாட்டிக்காவில் உள்ள பனி விரிப்பின் கீழ் சுமார் 470 ஏரிகள் இருக்கின்றமை கண்டறியப்பட்ட நிலையில், தற்போது வட துருவப்பகுதியிலும் இவ்வாறான ஏரிகள் இருப்பது தெரிய வந்துள்ளது.



## ஈரானியத் தலைவர்களுக்கு மக்களில் அக்கறையில்லை

ட்ரம்ப் தெரிவிப்பு

வோஷிங்டன்,ஜூன் 29
ஈரான் நாட்டுத் தலைவர்களுக்கு அவர்களுடைய மக்களைப் பற்றிக் கவலை இல்லை என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: ஈரான் தனது மக்களுக்குச் சரியானவற்றைச் செய்ய வேண்டும். ஈரானின் மக்கள் குறித்து அந்த நாட்டுத் தலைவர்கள் அக்கறை கொள்கிறார்கள் என்பதை என்னால் நம்ப முடியவில்லை. அவர்கள் உண்மையில் அக்கறை கொள்கிறார்கள் என்றால், அதற்கான நடவடிக்கைகளில் இறங்க வேண்டும். மாறாகத் தம் மீது மட்டுமே அக்கறை கொள்கிறார்கள் என்றால் அவர்கள் சுய நலவாதிகள்' - என்று தெரிவித்தார்.

**பின்னணி**
அணுஆயுத ஒப்பந்தம் தொடர்பாக அமெரிக்கா - ஈரான் இடையே முரண்பாடு ஆரம்பித்தது. கடந்த மாதம் வளைகுடாப் பகுதியில் எண்ணெய்க் கப்பல்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதற்கு ஈரான் தான் காரணம் என அமெரிக்கா குற்றம்சாட்டியது. இந்த நிலையில் அமெரிக்காவின் உளவு வானூர்தியைச் சுட்டு வீழ்த்தியது ஈரான். ஈரான் மீதும் அதன் முக்கிய தலைவர்கள் மீதும் புதிய பொருளாதாரத் தடையை அறிவித்தார் ட்ரம்ப். தற்போது ஈரான் தலைவர்கள் குறித்து மேற்கண்டவாறு கூறியுள்ளார்.




ஜப்பானின் ஒசாகா நகரில் நேற்று ஆரம்பித்த ஜி20 உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட உலகத் தலைவர்கள் ஒன்றிணைந்து ஒளிப்படம் எடுத்துக்கொண்டனர்.

# எல்லைச் சுவர் அமைப்பதற்கு நிதி அமெரிக்க நாடாளுமன்றம் அனுமதி

வோஷிங்டன்.ஜூன் 29
அமெரிக்கா - மெக்சிக்கோ எல்லைப் பகுதியில் சுவர் கட்டுவதற்கு 4.6 பில்லியன்அமெரிக்கடொலர்களைவழங்குவதற்கு அந்த நாட்டு நாடாளுமன்றம் அனுமதி அளித்தது. மெக்சிக்கோவிலிருந்துஅமெரிக்காவுக்குள்நுழைகின்ற அகதிகளின் நெருக்கடியைத் தணிக்கவே4.6பில்லியன்அமெரிக்க டொலர் அவசர உதவிக்கு நாடாளுமன்றம் அனுமதி அளித்தது.

**பின்னணி**
அமெரிக்க அதிபராக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றதும் அமெரிக்கா - மெக்சிக்கோ எல்லையில் சுவர் எழுப்பப்படும் என்று அறிவித்தார்.
அதைத் தொடர்ந்து அது தொடர்பான ஒப்பந்தங்களில்ட்ரம்ப்கையெழுத்திட்டார். ஆனால் அவர் கோரிய நிதிக்கு அமெரிக்க நாடாளுமன்றம் ஒப்புதல் அளிக்கவில்லை. இதனால்நெருக்கடி ஏற்பட்டது. அமெரிக்கநாடாளுமன்றம் முடங்கியது. எந்த நேரமும் அமெரிக்காவில்அவசரநிலைஅறிவிக்கப்படும் நிலைஇருந்தது. 35நாள்கள்வேலை நிறுத்தப் போராட்டம் நடந்தது. அரச பணிகள் முடங்கின.
அவசரநிலையை அறிவிக்கப்போவதாகக்கூறிவந்தார்ட்ரம்ப். இந்தநிலையில் அவசரகால எல்லை நிதியைச் சுவர்கட்டுவதற்குவழங்கஅந்தநாட்டு நாடாளுமன்றம் சம்மதம் தெரிவித்தது.

## தமிழகத்தில் 358 இடங்களில் நிலத்தடி நீர் வற்றிவிட்டது

### இந்திய அரசு தகவல்

புதுடெல்லி, ஜூன் 29
தமிழகத்தில் 358 பிரதேசங்களில் நிலத்தடி நீர் முழுமையாக வற்றிவிட்டதாக இந்திய நாடாளுமன்றத்தில் அரசு தெரிவித்தது. தமிழகத்தில் நிலவும் தண்ணீர்ப் பிரச்சினை தொடர்பாக நாடாளுமன்றில் கேட்கப்பட்ட கேள்விக்கு இந்திய நீர்ளத்துறை அமைச்சகம்சார்பில்அளிக்கப்பட்டபதிலிலேயே இவ்வாறு கூறப்பட்டது. தமிழகத்தில் 2008ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டு வரை ஆயிரத்து 139 இடங்களில் நிலத்தடி நீர்மட்டம் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.
இதில், 358 பிரதேசங்களில் நிலத்தடி நீர்முழுமையாகவற்றிவிட்டதுதெரிய வந்தது. 105 இடங்களில் நிலத்தடி நீர் மட்டம்அபாயகரமானநிலையில்உள்ளது என்று அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டது








### தமிழகத் தண்ணீர் தட்டுப்பாடு விவகாரம்

## மழையை உண்டாக்க இயந்திரம் முகநூலில் பரவுகிறது தகவல்

சென்னை, ஜூன் 29
இந்தியாவின்தமிழகத்தில்தண்ணீர்த் தட்டுப்பாடு அதிகரித்துள்ள நிலையில் அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி நிலையமான நாசா செயற்கைமழையைப்பொழியவைக்கும் இயந்திரத்தைக் கண்டறிந்துள்ளதாக முகநூலில் வேகமாகத் தகவல் பரவுகிறது. நாசாவின்புதிய இயந்திரம் செயற்கை மேகங்களை உருவாக்கி மிகக்குறைந்தநேரத்தில்மழையைப் பொழிய வைக்கிறது.
இத்தகைய இயந்திரம் இந்தியாவில் அவசர தேவையாக இருக்கிறது. செயற்கை மேகத்தை உருவாக்கும் குறித்தஇயந்திரம்ஒருமணிநேரத்தில் மழையைப் பொழிய வைக்கிறது எனத் தெரிவிக்கிறது இது குறித்துப் பரவுகிற காணொலி. இந்தியத் திரைப்பட நடிகரான அமிதாப் பச்சானும் தன்னுடைய கீச்சகப் பக்கத்தில் இதுகுறித்துப் பதிவிட்டார்.
ஆனால், இந்தக் காணொலித் தகவல் பொய்யானது என்று தெரிவிக்கப்படுகிறது. உண்மையில் அது நாசா சோதனைசெய்தறொக்கெட்காணொலி ஒன்று என்றும் அது பொய்யான தலைப்பிடலுடன்சமூகவலைதளங்களில்பரவியுள்ளதாகவும்தெரிவிக்கப்படுகிறது.





## சுறாத்தாக்குதலைவிட கொடுமையான செல்பி!

### ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

நியூயோர்க், ஜூன் 29
உலகம் முழுவதும் சுறாத் தாக்குதலால் இறந்தவர்களை விட தம்படம் எடுத்துக்கொண்டதால் இறந்தவர்கள் 5 மடங்கு அதிகம் எனும் தகவல் வெளியாகியுள்ளது. 2011ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டு வரையான காலத்தில் 259 பேர் தம்படம் எடுத்துக்கொண்டதால் இறந்துள்ளனர் எனத் தெரிய வந்துள்ளது. அதேசமயம் இதே கால கட்டத்தில் சுறா மீன் தாக்கி இறந்தவர்களின் எண்ணிக்கை 50மட்டுமே ஆகும். இதனால், சுறாதாக்கி இறந்தவர்களைவிட 5 மடங்கு மக்கள் தம்படம் எனும் மோகத்தால் இறந்துள்ளனர் என்று தெரியவந்துள்ளது. மேலும் இந்தத் தம்படம் எடுக்கும் மோகத்தால் பெண்கள் மற்றும் இளைஞர்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதும் தெரிய வந்துள்ளது. இந்தியா, அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகளில் மிக உயரமான கட்டடங்களில் இருந்து தம்படம் எடுத்துப் பலர் சாவடைந்தமையும், இலங்கையில் தொடருந்துடன் மோதுண்டு சாவடைந்தமையும் குறிப்பிடத்தக்கது.



## இன்றைய நாள்

**மேடம்:** அவமதித்தவர் அன்பு பாராட்டுகிற நிலை உருவாகும். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய சாதனை ஏற்படும். பணப் பரிவர்த்தனை திருப்திகரமாக இருக்கும். உடல்நிலை திருப்தியளிக்கும்.

**இடபம்:** பணி நிறைவேற பொறுமை அவசியம். தொழிலில் உள்ள குறைகளை பிறரிடம் விவாதிக்க வேண்டாம். வரவை விட செலவு அதிகரிக்கும். அரசு தொடர்பான அனுகூலம் தாமதமாகலாம்.

**மிதுனம்:** பிறர் பாராட்டும் வகையில் செயல்படுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சிக்கு புதிய திட்டம் உருவாக்கும். கூடுதல் பணவரவு கிடைக்கும். வாகனத்தில் சில மாற்றம் செய்வீர்கள்.

**கடகம்:** உறவினரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். தாமதமான பணியை புதிய உத்தியால் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். உபரி பணவரவு கிடைக்கும்.

**சிம்மம்:** சிலர் தங்கள் சுயநலத்திற்காக உங்களை அணுகுவர். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணிகளை நிறைவேற்றுவது நல்லது. அளவான பணவரவு கிடைக்கும்.

**கன்னி:** எவரிடமும் சொந்த பெருமை பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உருவாகிற இடையூறை தாமதமின்றி சரிசெய்யவது அவசியம். .அளவான பணவரவு கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமை வேண்டும்.

**துலாம்:** நேர்த்தியுடன் பணிபுரிவீர்கள். தொழில், வியாபாரத்தில் அளப்பரிய வளர்ச்சி ஏற்படும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். மாமன், மைத்துனருக்கு உதவுவீர்கள். சுற்றுலா சென்று வர பயணத்திட்டம் உருவாகும்.

**விருச்சிகம்:** இஷ்ட தெய்வ அனுக்கிரகம் பெறுவீர்கள். மனதில் இருந்த சஞ்சலம் தீரும். அதிக உழைப்பினால் தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். பணப் பரிவர்த்தனை சீராகும்.

**தனுசு:** மனதில் சஞ்சலம் ஏற்படலாம். கூடுதல் உழைப்பினால் உற்பத்தி விற்பனை சீராகும். அளவான பணவரவு கிடைக்கும். தாயின் அன்பு, ஆசி நம்பிக்கைத் தரும்.

**மகரம்:** குடும்ப பெரியவர்களின் வார்த்தைகளை மதித்து செயல்படவும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற இனிய அணுகுமுறை உதவும். சுமாரான அளவில் பணம் கிடைக்கும்.

**கும்பம்:** பரந்த மனப்பான்மையுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க சில மாற்று உபாயம் பின்பற்றுவீர்கள்.

**மீனம்:** நண்பரை குறை சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத குறுக்கீடு வரலாம். பொறுமையுடன் செயல்படுவதால் சிரமம் விலகும்.

## சென். செபஸ்ரியான் காலிறுதிக்கு முன்னேற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 29
மாமுனை கலைமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் மறைந்த வீர, வீராங்கனைகள் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான வடக்கு மாகாண ரீதியாக நடத்தும் அணிக்கு 9பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத்தொடரில் சென். செபஸ்ரியான் விளையாட்டுக் கழக அணி காலிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை இடம்பெற்ற ஆட்டத்தில் வெற்றிலைக்கேணி சென். செபஸ்ரியான் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இரணைமாநகர் சென். மோரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் இரண்டு அணியினரும்நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் தலா 2 கோல்களை பதிவு செய்ய ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்காக சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் சென். செபஸ்ரியான் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதியாட்டத்துக்கு முன்னேறியது. (23)




## எல்லே போட்டியில்
# சதாசிவம் ம.வி அணி கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஜூன் 29
வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயது பெண்களுக்கான எல்லே போட்டியில் அனலைதீவு சதாசிவம் மகா வித்தியாலய அணி கிண்ணம் வென்றது.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணியை எதிர்த்து அனலைதீவு சதாசிவம் மகா வித்தியாலய அணி மோதியது. 40 பந்துகளைக் கொண்டதாக இறுதி ஆட்டம் இடம்பெற்றது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய அனலைதீவு சதாசிவம் மகாவித்தியாலய அணி 12 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தீவகா 4 ஓட்டங்களையும், சோபனா, நிசாஜினி ஆகியோர் தலா 3 ஓட்டங்களையும், சிந்துஜா 2 ஓட்டங்களையும் பெற்றனர்.
13 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி அணி 2 ஓட்டங்களை ம்ட்டும் பெற்றது தோல்வியைத் தழுவியது. (23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 29
தாழ்வுபாடு சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் மன்னார் மாவட்டத் துடுப்பாட்டச்சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடத்தும் தாழ்வுபாடு பிறீமியர் லீக் ரி-20 துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் தாழ்வுபாடு விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இதில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இந்து முன்னனி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
மதியம் 1 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அண்ியை எதிர்த்து சென். ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

---

யாழ்ப்பாணம், ஜூன் 29
மாமுனை கலைமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் மறைந்த வீர, வீராங்கனைகள் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான வடக்கு மாகாண ரீதியாக நடத்தும் அணிக்கு 9பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத்தொடரின் காலிறுதியாட்டங்கள் இன்று சனிக்கிழமை கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது. இதில் காலை 8 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வெற்றிலைக்கேணி செபஸ்ரியான் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொடுக்குளாய் சத்திவேல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பரந்தன் இளைஞர் வட்டம் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மணற்காடு சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுத்துறை பாரதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

## சிவானந்தா - இமையாணன் இறுதியாட்டம் நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 29
வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 9 பேர் பங்கு பற்றும் வே.நகுலன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது. இதில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி உப அதிபர் பிரபாகரனும், சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி கால்பந்தாட்ட லீக் தலைவர் மு. வேதாபரணம், இமையாணன் அ.த.க.பாடசாலை ஆசிரியர் வே. அகிலன் அகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (23)








## மெதடிஸ்த அணி மூன்றாமிடம்

யாழ்ப்பாணம், ஜூன் 29
வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயது பெண்களுக்கான எல்லே போட்டியில் மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை அணி 7 ஓட்டங்களால் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றது.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற 20 வயதுப் பிரிவு பெண்களுக்கான மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை அணியை எதிர்த்து உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணி மோதியது. 40 பந்துகளைக் கொண்டதாக ஆட்டம் இடம் பெற்றது.
இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை அணி 40 பந்துகளில் 8 ஓட்டங்களைப் பெற்றது. நிவேதா. அஜித்தா இருவரும் தலா 2ஓட்டங்களையும் கருணியா, தயாளசீலி, அபினயா, பைகிசனா, ஆகியோர் தலா ஓர் ஓட்டத்தையும் பெற்றனர்.
பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணி ஓர் ஓட்டத்தை மட்டும் பெற்று தோல்வியைத் தழுவியது. இதன் மூலம் மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை அணி மூன்றாம் இடத்தைப் பெற்றது. (23)

# யூனியன் வி.க. வாகை

யாழ்ப்பாணம், ஜூன் 29
யாழ். கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கால்பந்தாட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் எவ்.ஏ கிண்ணத்துக்கான இரண்டாம் சுற்று கால்பந்தாட்ட தொடரில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் அணி விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)







## பாண்டியாவுக்கு அப்துல் ரசாக் பயிற்சி கொடுக்க விருப்பம்

பல குறைகளை கொண்டுள்ள இந்திய அணி வீரர் ஹார்திக் பாண்டியாவை என்னிடம் விட்டுவிடுங்கள். அவரை உலகத்தரம் வாய்ந்த சகலதுறை ஆட்டக்காரராக மாற்றி காட்டுகிறேன் என்று பாகிஸ்தான் வீரர் ரசாக் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அப்துல் ரசாக் தெரிவிக்கையில்;

நான் ஹார்திக் பாண்டியாவின் ஆட்டத்தை கூர்ந்து கவனித்தேன். அவர் பந்தை ஆடுகளத்தில் மிகவும் கடுமையாக ஹிட் செய்யும்போதும் உடலை சமநிலை செய்யும்போதும் பல தவறுக்கள் உள்ளன.

அதனால் அவருக்கு என்னால் பயிற்சி அளிக்க முடியும் என்று உணர்கிறேன். இந்தியா - பாகிஸ்தான் இடையே அரசியல் தொடர்பான பிரச்சனை இருப்பதால், ஐக்கிய அரபு எமிரேட்ஸில் பயிற்சி கொடுக்கலாம்.

ஹார்திக் பாண்டியாவை என்னால் சிறந்த சகலதுறை ஆட்டக்காரராக மாற்ற முடியும். இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அவரை சிறந்த சகலதுறை ஆட்டக்காரராக உருவாக்க விரும்பினால், அதற்கு நான் தயாராக இருக்கிறேன் - என்றார்.





# தென்னாபிரிக்காவுக்கு ஆறுதல் வெற்றி

அம்லா - டூ பிளாசிஸின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் தென்னாபிரிக்கா அணி சிறப்பானதொரு வெற்றியைப் பதிவு செய்தது. எனினும் இந்த வெற்றி தென்னாபிரிக்கா அணிக்கு ஒரு ஆறுதல் வெற்றியாகும். ஏனெனில் அந்த அணி 8 போட்டிகளில் விளையாடி 2 போட்டிகளில் மாத்திரமே வெற்றி பெற்று ஏற்கனவே அரையிறுதி வாய்ப்பை இழந்திருந்தது. ஆனால் இலங்கை அணி அரையிறுதி வாய்ப்பை தக்க வைத்திருந்தது. எனினும் இந்தத் தோல்வியின் மூலம் அது நிர்மூலமாக்கப்பட்டது.

நடப்பு உலகக் கிண்ணத்தில் நேற்று இடம்பெற்ற போட்டியில் இலங்கை - தென்னாபிரிக்கா அணிகள் மோதின. இதில் தென்னாபிரிக்கா அணி 9 இலக்குகளால் இலகு வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா அணி முதலில் இலங்கை அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. களமிறங்கிய இலங்கை அணிக்கு தென்னாபிரிக்கா பந்து வீச்சாளர்கள் அதிர்ச்சி கொடுத்தனர். அணித் தலைவர் திமுத் வந்த வேகத்திலேயே முதலாவது பந்தில் ஆட்டமிழந்து பவிலியன் திரும்பினார். பெர்னாண்டோ, குசல் பெரேரா இணைந்து சற்று நிதானமாக ஆடினர் என்று கூறலாம். எனினும் அவர்களது இணையும் நீண்ட நேரம் தாக்குப் பிடிக்க முடியவில்லை. அணி 100 ஓட்டங்களைப் பெற்ற போது 4 இலக்குகளை இழந்தது. சகல வீரர்களும் பந்துகளை வீணடித்து தேவையற்ற ஆட்டமிழப்புடன் ஆடியிருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. அணியின் வீரர்கள் எவரும் 30 ஓட்டங்களைத் தாண்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த போட்டியில் பிரகாசித்த மத்தியூஸ் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். கடந்த போட்டியில் இங்கிலாந்து அணியுடனான போட்டியின் போது விளையாடியது போல ஆடுவார்கள் என்று ரசிகர்கள் எதிர்பார்த்திருந்தனர். எனினும் இலங்கை அணி சொதப்பியிருந்தது. அணி 49.3 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 203 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

தென்னாபிரிக்கா அணியின் பந்து வீச்சாளர்களைப் பொறுத்தவரையில் எல்லோரும் சிறப்பாக பந்து வீசினர். இதில் மோரிஸ், பிறிற்ரோரிஸ் தலா 3 இலக்குகளை வீழ்த்தினர். அவர்களுக்கு ரபாடாவும் ஒத்துழைப்பு வழங்கினார்.

இலகு இலக்கை விரட்டக் களமிறங்கிய தென்னாபிரிக்கா அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்கள் பொறுமையாக ஆட ஆரம்பித்தனர். எனினும் அணி 31 ஓட்டங்களைப் பெற்ற போது டி குக் மலிங்கவின் பந்து வீச்சில் போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார். அவரது ஆட்டமிழப்போடு இலங்கை அணி உற்சாகமடைந்தது. எனினும் பின்னர் இணைந்த டூ பிளாசிஸ், அம்லா இணையைப் பிரிப்பதில் இலங்கை அணியின் பந்து வீச்சாளர்கள் போராடினார்கள். இறுதி வரை அது கைகூடாமலே போனது. அவர்கள் இருவரும் இணைந்து அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினர். அணி 37.2 பந்துப்பரிமாற்றங்களில் ஓர் இலக்கை மாத்திரம் இழந்து வெற்றியை எட்டிப்பிடித்தது. இந்த வெற்றி தென்னாபிரிக்கா அணிக்கு ஓர் ஆறுதல் வெற்றியாக அமையுமே தவிர வேறு எந்த பயனையும் தரலாகாது.

## விமர்சனங்கள்தான் வெற்றிக்கு உந்துசக்தி

*சர்பிராஸ் கருத்து*

விமர்சனங்களால் ஒரு மூலையை நோக்கி தள்ளப்படும் நேரங்களில் எல்லாம் நாங்கள் சிறப்பாக விளையாடுகிறோம் என பாகிஸ்தான் கிரிக்கெட் அணித் தலைவர் சர்பிராஸ் அகமது தெரிவித்தார்.

நடப்பு உலகக் கிண்ணத்தில் பாகிஸ்தான் அணி தொடர் தோல்விகளைச் சந்தித்து பல்வேறு விமர்சனங்களுக்கு உள்ளாகி வந்தது. இந்த நிலையில் நியூசிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் சிறப்பாக விளையாடி தோல்வியைச் சந்திக்காமல் வந்த நியூசிலாந்து அணியை வீழ்த்தி அசத்தல் வெற்றியைப் பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் பாகிஸ்தான் அணியானது அரையிறுதிக்கு முன்னேறு வதற்கான வாய்ப்பை தக்க வைத்துக்கொண்டது.

இது குறித்து சர்பிராஸ் அகமது தெரிவிக்கையில்;

எப்போது எல்லாம் பாகிஸ்தான் அணி விமர்சன்ங்களால் மூலையை நோக்கி தள்ளப்படுகிறதோ, அப்போது எல்லாம் நாங்கள் சிறப்பாக விளையாடுகிறோம்.

மைதானத்தில் எங்களுக்கு ஆதரவளித்த ரசிகர்களுக்கு நன்றி. கிரிக்கெட்டில் களத்தடுப்பு மிகவும் முக்கியம். ஆனால் நியூஸிலாந்துக்கு எதிரான ஆட்டத்திலும் நாங்கள் சிறப்பாக களத்தடுப்பு செய்யவில்லை.

என்னை பொறுத்தவரையில் பாபர் அஸாம் விளையாடிய இன்னிங்ஸ்களில் மிகச்சிறந்த ஆட்டங்களுள் ஒன்றாக நியூசிலாந்துக்கு எதிரான ஆட்டத்தைக் குறிப்பிடலாம்.

ஆடுகளத்தின் தன்மையை உணர்ந்ததால் 50 ஓவர்கள் வரை முழுமையாக பேட் செய்ய தீர்மானித்தோம். அழுத்தத்தை சரியாக கையாண்ட ஹாரிஸ் சோஹைலை பாராட்டியே ஆக வேண்டும்-என்றார்.




## பிரித்வைட்டுக்கு 15 சதவீத தண்டம்

நடப்பு உலகக் கிண்ணப் போட்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் இந்தியா - மேற் கிந்தியத்தீவுகள் அணிகள் மோதின. இதில் இந்திய அணி துடுப்பெடுத்தாடும் போது 42ஆவது பந்துப்பரிமாற்றத்தை வீசிய மேற்கிந்தியத்தீவுகளின் வேகப்பந்து வீச்சாளர் கார்லோஸ் பிரித்வைட் வீசிய ஒரு பந்தை அகலப் பந்து என நடுவர் அறிவித்தார். இதனால் அவர் கோபமடைந்து நடுவரை நோக்கி முறைத்தார். அவரது செயல் பன்னாட்டு கிரிக்கெட் சபையின் விதிமுறைக்கு எதிரானது என அவருக்கு போட்டி சம்பளத்தில் 15 சதவீதம் தண்டமாக விதிக்கப்பட்டது. மேலும் இடைநீக்கத்துக்கான ஒரு புள்ளியும் வழங்கப்பட்டுள்ளது.

## தென்னாபிரிக்கா மக்களிடம் மன்னிப்புக் கேட்ட டுமினி

நடப்பு உலகக் கிண்ணப் போட்டியில் நாங்கள் தோல்வி அடைந்து தொடரில் இருந்து வெளியேறியது வெட்கமாக இருக்கிறது. எங்களை மன்னித்து விடுங்கள் என்று தென்னாபிரிக்கா மக்களிடம் டுமினி உருக்கமாகப் பேசியுள்ளார்.

உலகக் கிண்ணத்தில் பலம்வாய்ந்த அணியாகக் கருதப்பட்ட தென்னாபிரிக்கா அணி அடுத்தடுத்த தோல்விகளால் தொடரில் இருந்தே வெளியேறியது.

இந்த உலகக் கிண்ணத்துடன் ஒருநாள் கிரிக்கெட்டில் இருந்து தென்னாபிரிக்கா அணி வீரர் டுமினி ஓய்வு பெற உள்ளார். இந்த சூழலில் அவர் தென்னாபிரிக்கா மக்களிடம் மன்னிப்பு கேட்டுள்ளார்.

இது தொடர்பாக தெரிவிக்கையில்;

இந்த உலகக்கிண்ணத்தில் நாங்கள் மோசமாகச் செயற்பட்டு இருக்கிறோம். இந்த தோல்விகளுக்கும், மோசமான செயற்பாட்டுக்கும் நாங்கள் உண்மையிலேயே ரசிகர்களிடமும் மக்களிடமும் மன்னிப்பு கோருகிறோம். எங்கள் நாட்டு மக்களை தலைகுனிய வைத்துவிட்டதை நினைத்து வெட்கப்படுகிறோம். கோடிக்கணக்கான் மக்களின் பிரதிநிதியாக விளையாட வந்து, இதுபோன்று மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தினால், அது எங்களுக்கும் வெட்கக்கேடானது - என்றார்.

நியத்த ஜய
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 783 சீட்டிழுப்பு திகதி 28.06.2019
வெற்றி இலக்கங்கள் 07 15 27 43 ஆங்கில எழுத்து W
அடுத்தசெவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 27, 933,028/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>NJ என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778
செம்மஞ்சள் நிற டிக்கெட்டுக்கள் 02.07.2019 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 995
சீட்டிழுப்பு திகதி 2019.06.27 வியாழக்கிழமை
J 20 25 53 65
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 65,288,656/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
ஊதா, பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 28.06.2019 வெற்றி வாரம் 2549 வர்ணம் நீலம்
மேடம்
வெற்றி இலக்கங்கள் 04 19 52 56
ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,339,462 /=
30.06.2019ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 653
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2019.06.28
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 64,887,995/-
வெற்றி இலக்கங்கள் 01 07 23 42 ஆங்கில எழுத்து M

அத விசேட கோடிபதி
விகோ காரை வெற்றி கொண்ட வெற்றி இலக்கம் மற்றும் மாவட்டம்
7063960
காலி மாவட்டம்

மோட்டார் சைக்கிள்கள் மூன்றைப்பெற்ற வெற்றியிலக்கங்கள் மற்றும் மாவட்டங்கள்

| வெற்றிப்பரிசு | வெற்றியிலக்கம் | மாவட்டம் |
|---|---|---|
| முதல் மோட்டார் சைக்கிள் | 2913383 | யாழ்ப்பாணம் |
| இரண்டாம் மோட்டார் சைக்கிள் | 1043507 | கேகாலை |
| மூன்றாம் மோட்டார் சைக்கிள் | 8896610 | களுத்துறை |
| நான்காம் மோட்டார் சைக்கிள் | 1185569 | மொணராகலை |
| ஐந்தாம் மோட்டார் சைக்கிள் | 7402722 | முல்லைத்தீவு |

அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0112 333 546-47 துரித அழைப்புகளுக்கு: 0114 824 824, 0112 333 778 or 1919
இளஞ்சிவப்பு நிற டிக்கெட்டுக்கள் இன்றைய சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Techno World
(வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகில் -யாழ்.)
A/L - 2021
தொழில்நுட்பப் பிரிவு
மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலா....
கண்டி நுவரெலியா
(ஆராய்ச்சி நிலையம், பண்ணை, Tissue Culture lab பார்வையிடப்படும்)
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.
077 017 5346, 077 170 3549

தென்னிந்திய யாத்திரை
தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரியூடான யாத்திரை
ஆரம்பம் : 05.08.2019 யாத்திரீகர் : 10 நாள்கள் : 16
தரிசிக்கும் இடங்கள் :- உச்சிப்பிள்ளையார். மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர். திருப்பதி. ஸ்ரீரெங்கம். சமயபுரம். பிரம்மாகோயில். இராமேஸ்வரம். பழனி. திருத்தணி. திருப்பரம்குன்றம். திருச்செந்தூர். சிதம்பரம். ஏகாம்பரேஸ்வரர். காள கஸ்திரி. திருவெண்ணாமலை. சுவாமிமலை. பழமுதிர்ச்சோலை. திருவானைக்காவல். மேல்மருவத்தூர். தஞ்சாவூர். நவபாஷானம். சூரியன். சந்திரன். சுக்கிரன். புதன். வியாழபகவான். செவ்வாய். ராகு. கேது. சனி பகவான். திருநள்ளாறு. நளன்குளத்தில் நீராடல். தோணியப்பர். குருவாயூர். மைசூர் சாமூண்டீஸ்வரி. நந்திகோவில். கன்னியாக்குமரி. சுசீந்திரம். மனக்-குழவிநாயகர். திருக்கடையூர் பஞ்சவடி பிள்ளையார். பட்டி விநாயகர். வடபழனி முருகன் உட்பட 60 இற்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிப்பதுடன் மெரீனாபீச். பாண்டிச்சேரி பீச். MGR. ஜெயலலிதா. அண்ணா சமாதி களையும் மைசூர் பாலஸ். பிருந்தாவனம் காடின். அப்துல் கலாமின் மணிமண்டபமும் பார்க்கலாம்.
தங்களிடம் பெற்றுக் கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை :- இருவழி விமான ரிக்கட். மூன்றுவேளை சுத்தமான சைவ உணவு. குடிநீர். 2 பேருக்கு கட்டில் மெத்தை. குளியலறை இணைந்த அறைகள். AC வாகன வசதி. கொழும்பில் இருந்து ஏயர்போட் போகவும் வரவும் வாகன வசதி. இவை அனைத்தும் எமது சேவை.
மேலும் விவரங்களைக் கேட்டு அறிந்து பதிவு செய்யவும். சகல ஆலயங்களும் பூசை நேரத்தில் தரிசிக் கலாம்.(இத்துடன் யாழ் - கொழும்பு, யாழ் போக வர வாகன வசதி செய்து தரப்படும்)
வந்தவரைக் கேளுங்கள் சென்றுவரலாம் வாருங்கள்.
(C 2069) (4.17)
தொடர்புகளுக்கு: கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்
59, 3/6, செட்டியார்தெரு, கொழும்பு -11,
sriranganathan1944@gmail.com
sriranganathan2601@gmail.com
077 768 0102
077 736 2154



கோபா அமெரிக்கா கால்பந்து காலிறுதி ஆட்டத்தில் பிரேசில் அணி வெற்றி பெற்றதும் அந்த அணியின் ரசிகர்கள் குதூகலத்தில் இருந்த காட்சி.

பெனால்டியில் பராகுவேயை வீழ்த்தி

# பிரேசில் அணி அரையிறுதிக்கு



கோபா அமெரிக்கா கால்பந்து காலிறுதி ஆட்டத்தில் பெனால்டி வாய்ப்பில் கோல் அடித்து 4:3 என்ற கோல் கணக்கில் பராகுவேயை வீழ்த்தி பிரேசில் அணி அரையிறுதிக்கு முன்னேற்றம்.

கோபா அமெரிக்க கால்பந்து தொடர் பிரேசில் நாட்டில் நடைபெற்று வருகின்றது. இதில் 12 அணிகள் பங்கேற்று விளையாடி வருகின்றன. இந்தப் போட்டியில் காலிறுதிக்கு பிரேசில், ஆர்ஜென்டீனா, பராகுவே, வெனிசுலா, கொலம்பியா, சிலி, உருகுவே, பெரு ஆகிய அணிகள் தகுதி பெற்றன. பொலிவியா, கட்டார், ஜப்பான், ஈக்குவாடோர் ஆகிய அணிகள் வெளியேற்றப் பட்டன.

முதலாவது காலிறுதியில் பிரேசில் -பராகுவே அணிகள் பலப்பரீட்சை நடத்தின. இரு அணிகளும் கோல் அடித்து மேற்கண்ட முயற்சிகள் இறுதி வரை நிறைவேறவில்லை. கூடுதலாக வழங்கப்பட்ட நேரத்திலும் கோல்கள் எதுவும் பெறப்படாததால் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக பெனால்டி முறை கடைப்பிடிக்கப்பட்டது.

இதில் பிரேசில் 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரை இறுதிக்கு தகுதி பெற்றது. பிரேசில் தரப்பில் வில்லியன், மார்குன்ஹோஸ், கோடின்ஹோ, ஜீசஸ் ஆகியோர் கோல் அடித்தனர்.

காணிகள் விற்பனைக்கு
அரியாலை இறையிலமைந்த "அகம்படியான் கட்டு வயல்" நெற்பரப்பு 45.
யாழ். கண்டி வீதியைத் தொடுக்கும் செம்மணி வீதி இணைப்பு மூலை "செம்மணி வெளி" 2பரப்பு 6 குளி ஆகிய இரு காணிகளும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 077 198 3093/ 075 535 8231

ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
யாரும் படிக்கலாம்.
www.ambafrancelk.org
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.



## மைதானத்தில் படையெடுத்த தேனீக்கள்

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் நேற்று இடம்பெற்ற இலங்கை - தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான போட்டின் போது இலங்கை அணி துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த போது 48ஆவது பந்துப்பரிமாற்றத்தில் மைதானத்தில் திடீரென தேனீக்கள் மைதானத்துக்குள் படையெடுத்தது.

ஏற்கனவே இது போன்று ஒருமுறை தென்னாபிரிக்கா - இலங்கை அணிகளுக்கிடையிலான ஆட்டம் தேனீக்களால் சற்று நேரம் பாதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29 .06.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.